

Yogi Ramsuratkumar Jaya Guru Raya

# ASHRAM SONGS
# A DIGITAL SONG BOOK

# அறிமுகம்

“ஆசிரம பாடல்கள்” எங்கள் அன்பிற்குரிய மா தேவகி மாதாஜியின் வழிகாட்டுதலின் கீழ் தொடங்கப்பட்டு, நடந்து வருகிறது. அவரது அன்பான வழிகாட்டுதலின் கீழ், இந்தப் பாடல்கள், பகவான் யோகிராம் சுரத்குமாருக்கு முன் பாடப்பட்ட அதே பாணியில் மீண்டும் உருவாக்கப்பட்டு இருக்கின்றன. இந்தப் பாடல்களை முறைப்படி பதிவு செய்து ஏற்பாடு செய்துள்ளார் டாக்டர் திருமதி காயத்ரி கிரிஷ் அவர்கள். அவர்களுடன் இணைந்து பக்தர் பாடகர் குழுவினர் பாடி உள்ளார்கள். இந்த ஆசிரம பாடல்கள் பகவான் யோகிராம் சரத்குமாரின் தெய்வீகப் பிரசன்னத்தில் பாடப்பட்டன. மேலும், அவை மிகவும் ஆத்மார்த்தமானவை, நுண்ணறிவு மிக்க பாடல் வரிகள் மற்றும் பக்தி நிறைந்தவை. திருவண்ணாமலை யோகிராம் சுரத்குமார் ஆசிரமம் இந்த பாடல்களை கட்டம் கட்டமாக வெளியிட்டு வருகிறது.

ஆசிரமத்தால் வெளியிடப்பட்ட இந்தப் பாடல்களின் தொகுப்பே டிஜிட்டல் பாடல் புத்தகம். புத்தகத்தில் ஒவ்வொரு பாடலுக்கும் தமிழ் மற்றும் ஆங்கில ஒலிபெயர்ப்பு வரிகள் உள்ளன. மேலும், ஒவ்வொரு பாடலுக்கு எதிராகவும் பாடலின் அசல் ஆடியோவின் இணைப்பு சேர்க்கப்பட்டுள்ளது. பக்தர்கள் மற்றும் பாடகர்கள் அனைத்து ஆசிரமப் பாடல்களையும் எளிதாக அணுகவும் அவற்றை சரியான வழியில் கற்றுக் கொள்ளவும் இந்த புத்தகத்தின் நோக்கம். இந்தப் பாடல்களைக் கேட்பவர்கள் அல்லது பாடுபவர்கள் பகவான் யோகி ராம்சுரத்குமாரின் ஆசீர்வாதத்தைப் பெறுவார்கள் என்று மா தேவகி மாதாஜி அடிக்கடி கூறுவார்.

## இந்த டிஜிட்டல் பாடல் புத்தகத்தை எப்படி பயன்படுத்துவது

படி 1: எளிதான வழிசெலுத்தலுக்காக இந்தக் புத்தகத்தை அடோப் அக்ரோபேட் ரீடரில் திறக்க வேண்டும்.

படி 2: பாடல் பக்கத்திற்குச் செல்லும் வழி:

விருப்பம் 1. பாடலின் பெயர் உங்களுக்குத் தெரிந்தால், தேடல் பெட்டியில் 🔍பாடலின் பெயரையோ அல்லது பாடலின் முதல் சில சொற்களையோ தட்டச்சு செய்து நேரடியாக பாடலுக்குச் செல்லலாம்.

3. விருப்பம் 2. பாடலின் பெயர் உங்களுக்குத் தெரிந்தால், உள்ளடக்க அட்டவணையில் அதைத் தேடி, பாடலின் தலைப்பைக் கிளிக் செய்தால், அது உங்களை அந்தந்த பாடல் பக்கத்திற்கு அழைத்துச் செல்லும்.

உங்கள் விருப்பப்படி தமிழ் வரிகள் அல்லது ஆங்கில வரிகள் பகுதியை நீங்கள் தேர்வு செய்யலாம்.

4. ஆடியோவைக் கேட்க, ஒவ்வொரு பாடலின் தலைப்புக்கும் அடுத்துள்ள ஆடியோ சின்னத்தைக் ♫ கிளிக் செய்யவும்.

இந்தப் பாடல்கள் ஆன்லைனில் யூடியூப் மற்றும் ஸ்பாட்ஃபையிலும் கிடைக்கின்றன

## Youtube மற்றும் Spotify இல் ஆசிரமப் பாடல்களின் பிளேலிஸ்ட்டிற்கான இணைப்புகள்.

**யூடியூப் - ஆசிரம பாடல்கள் பட்டியல் - காணொளியுடன்** YouTube

**Spotify – ஆசிரம பாடல்கள் பட்டியல் – ஆடியோ மட்டும்**

***Volume1:***

Spotify

***Volume 2:***

Spotify

***Volume3:***

Spotify

***Volume 4:***

Spotify

***Volume 5:***

Spotify

## Table of Contents

**அறிமுகம்** ..... 1

**இந்த டிஜிட்டல் பாடல் புத்தகத்தை எப்படி பயன்படுத்துவது** ..... 1

Song 1: யோகியர்கோன் என்றேத்தும் காப்பு ♬ ..... 7

Song 2: உத்திஷ்டோ உத்திஷ்ட ♬ ..... 8

Song 3: பல்லாண்டு பல்லாண்டு ♬ ..... 8

Song 4: ஸ்வாகதம் ஸ்வாகதம் ♬ ..... 8

Song 5: நமஸ்தே நமஸ்தே ♬ ..... 9

Song 6: சத்ய ஸ்வரூபம் ♬ ..... 9

Song 7: உடல் மனம் வழியேயும் ♬ ..... 10

Song 8: யத்கரோமி ♬ ..... 10

Song 9: புத்தி ஹீன ♬ ..... 10

Song 10: அன்பே சரணம் ♬ ..... 11

Song 12: யோகி ராம்சுரத்குமார் ஆர்த்தி ♬ ..... 11

Song 13: மங்களம் ஜய மங்களம் ♬ ..... 12

Song 14: யோக சத்குரு ♬ ..... 12

Song 15: ஓம் ஸ்ரீ ராம் ஜயராம் ♬ ..... 12

Song 16: ஓம் ஸ்ரீ ராம் ஜயராம் ♬ ..... 13

Song 17: அருணாசல சிவ ♬ ..... 13

Song 18: மைத்ரீம் பஜத ♬ ..... 13

Song 19: மைத்ரீம் பஜத – தமிழ் ♬ ..... 14

Song 20: குறையொன்றுமில்லை ♬ ..... 15

Song 21: மங்களம் பிரேம ♬ ..... 17

Song 22: வாழ்க வாழ்க ♬ ..... 17

Song 23: ஆடுதம்மா ஆடுதம்மா ♬ ..... 18

Song 24: யோசனைக்கு எட்டா ♬ ..... 19

Song 25: மாதா ஜெய ஓம் ♬ ..... 21

Song 26: ஜோ ஜோ ♬ ..... 24

Song 27: ஹே மஹேஷ ♬ ........ 25
Song 28: ஸதா ஸ்மராமி ♬ ........ 25
Song 29: ராம ராம ராம ராம ♬ ........ 26
Song 30: பஜோரே மன் ♬ ........ 27
Song 31: கோபாலா ஜய கோபாலா ♬ ........ 28
Song 32: வீரேஷ்வராய நமோ நமோ ♬ ........ 29
Song 33: அருணாசலேஷ்வரா நமோ நமோ ♬ ........ 30
Song 34: த்வமேவ மாதா ♬ ........ 31
Song 35: ராமகிருஷ்ண ராமகிருஷ்ண ♬ ........ 32
Song 36: அருணாசல ஜோதி ♬ ........ 32
Song 37: நமோ ராமச்சந்திரா ♬ ........ 33
Song 38: திருவண்ணாமலை செல்வமே ♬ ........ 34
Song 39: எண்ணம் அனைத்தும் ♬ ........ 35
Song 40: ஒரே ஒரு லக்ஷ்யம் ♬ ........ 36
Song 41: கணபதி என்றிட ♬ ........ 37
Song 42: எனது வாழ்விடம் ♬ ........ 38
Song 43: அவனே தெய்வம் ♬ ........ 40
Song 44: அருணைநகர் தன்னில் ♬ ........ 41
Song 45: யோகிராம்ஜி நித்யம் ♬ ........ 43
Song 46: போவோம் அண்ணாமலைக்கு ♬ ........ 45
Song 47: குரு தேவா தயை செய்தே ♬ ........ 47
Song 48: ராம நாம ஜபம் செய்யும் ♬ ........ 49
Song 49: யோகிராம் தியாகிராம் ♬ ........ 51
Song 50: எங்கல் இறைவா ♬ ........ 52
Song 51: மோனம் அசைந்தது ♬ ........ 53
Song 52: ராம்சுரத் குமார்எனும் ♬ ........ 55
Song 53: யோகிராம் சுரத்குமரா ஐயனே ♬ ........ 57
Song 54: அருணை யோகியின் ♬ ........ 61
Song 55: சிவசிவ என ஓதும் ♬ ........ 64
Song 56: எந்தையே வந்து நீ ♬ ........ 66

Song 57: நமோ நமோ ♬ ........ 69
Song 58: ஜோதிர் மயமாய் ♬ ........ 70
Song 59: அண்ணாமலையில் ஆட்சி ♬ ........ 71
Song 60: யோகீஷ்வரம் பவநாஷகம் ♬ ........ 74
Song 61: எங்கெங்கு பார்த்தாலும் ♬ ........ 75
Song 62: தெய்வத் திருவுருவே ♬ ........ 76
Song 63: யோகிராம சரணம் குருவே ♬ ........ 79
Song 64: ஜெய குரு ஓம் ♬ ........ 83
Song 65: கோவிந்த கோபால ♬ ........ 84
Song 66: ஜயது ஜயது ♬ ........ 85
Song 67: ஸித்தி விநாயகா ♬ ........ 91
Song 68: ஆஷ்ரித வத்ஸலா ♬ ........ 92
Song 69: காசியின் அருகில் ♬ ........ 93
Song 70: உனது நாமம் ♬ ........ 94
Song 71: அண்ணாமலையப்பா ♬ ........ 95
Song 72: ஆனந்த அறிவாகி ♬ ........ 96
Song 73: எத்திக்கும் தானாகி ♬ ........ 97
Song 74: நாம பஜனமே ஜீவன் ♬ ........ 99
Song 75: தாண்டி விடலாம் ♬ ........ 100
Song 76: நாமம் ஒன்றே வேண்டும் ♬ ........ 101
Song 77: ஒன்றே தெய்வம் ♬ ........ 103
Song 78: எண்ணை ஊற்றவில்லை ♬ ........ 104
Song 79: அண்ணல் யோகிராம்சுரத்குமார் ♬ ........ 105
Song 80: கனிவரும் காலத்திற் போய் ♬ ........ 106
Song 81: பாடுங்கள் பாடுங்கள் தோழியரே ♬ ........ 111
Song 82: ஜெய பூர்ணபராத்பர ♬ ........ 113
Song 83: ராம சுரத்துக் குமாரன் சரிதையை ♬ ........ 115
Song 84: பற்றிக் கொண்டேன் ♬ ........ 120
Song 85: வாடியே நின்று ♬ ........ 123
Song 86: மனமதனை ♬ ........ 123

Song 87: கண்ணா உன் சன்னதியில் ♬ ........ 124
Song 88: ஸர்வ மங்கல மாங்கல்யே ♬ ........ 125
Song 89: ஏகோ தேவ: ♬ ........ 127
Song 90: அருணையில் அமர்ந்தவனே ♬ ........ 128
Song 91: ஜயகுரு ஜயகுரு ஜயகுரு போற்றி ♬ ........ 130
Song 92: ஆனந்தம் வந்து மோதுதே ♬ ........ 134
Song 93: அன்பே சரணம் ♬ ........ 135
Song 94: பஜோ மன ♬ ........ 138
Song 95: திவ்ய பாலகம் ♬ ........ 139
Song 96: எந்தை நீ அல்லவா ♬ ........ 140
Song 97: ஹே ப்ரபோ ♬ ........ 141
Song 98: ஜெய ஜெய ஜெய ஜெய ♬ ........ 142
Song 99: நாமம் சொல்வோம் ♬ ........ 143
Song 100: பட மாட்டோம் ♬ ........ 145
Song 101: சதா ஜபோ ♬ ........ 147
Song 102: சோதனைகள் போதாதா ♬ ........ 148
Song 103: ஸ்ரீ சிவ சரணம் ♬ ........ 149
Song 104: சுந்தரேசனாமவன் ♬ ........ 151
Song 105: தென்மதுரை மீனாக்ஷி ♬ ........ 152
Song 106: யோ தேவோ ♬ ........ 154
Song 107: யோகிராம்சூரத்குமாரனை எண்ணினால் ♬ ........ 155

## Song 1: யோகியர்கோன் என்றேத்தும் காப்பு ♫

யோகியர்கோன் என்றேத்தும் ஒப்பில்லாப் பேரொளியைப்
போகியனாய் எப்போதும் புன்மைநிறை - சோகமெனும்
வெந்துயரில் வீழ்ந்தேற்கும் வீடளிக்க வந்துதித்த
சுந்தரனை நெஞ்சே நினை

ராம்சுரத்ஸ்ரீ குமார் என்னும் தாவாத வித்தகரே
ஆம்வரங்கள் அத்தனையும் அள்ளியள்ளித் தருகின்றார்
போம்பாவம் புகும்புனிதம் பொங்கிவரும் நல்லின்பம்
வாம்பரிபோல் வந்தணையும் வாரிதிசூழ் வையகத்தே

வையகத்தை வாழ்விக்க வந்தவொரு சித்தரவர்
மையலிலா அருணையிலே மனம்களிக்கத் திகழ்கின்றார்
பொய்யகத்தே கொண்டார்க்குப் புலனாகாப் புண்ணியனை
மெய்ம்மையினால் கண்டுகொள மேதினியில் உணர்ந்தேனே

உணர்பொருளாய் ஒளிர்கின்ற உத்தமனைக் காணாமல்
இணரெரிதோய் வாழ்வதனை இன்பமெனக் கொண்டலைவேன்
புணர்நெறியாம் அன்புடைமை போதிக்கும் வேதியனைத்
தணற்பதியாம் அருணையிலே தஞ்செனவே அடைந்தேனே

அடையாத செல்வங்கள் அருள்கின்ற பெருமானை
உடையானாய் உயிரனைத்தும் ஒருநிகராக் கொண்டிலங்கும்
சடைமுடியார் ராம்சுரத்தின் சம்பந்தம் பெற்றக்கால்
கடையவரும் கடைத்தேறக் காட்டுகிறார் நன்னெறியே

## Song 2: உத்திஷ்டோ உத்திஷ்ட ♫

உத்திஷ்டோ உத்திஷ்ட கோவிதா உத்திஷ்ட கருடத்வஜா .
உத்திஷ்ட கமலாகாஷ்ட த்ரைலோக்யாம் மங்களங்குரு

## Song 3: பல்லாண்டு பல்லாண்டு ♫

பல்லாண்டு பல்லாண்டு பலகோடி நூறாண்டு (3)
வாழிய வாழியவே (3)
யோகி ராம்சுரத்குமார் (3)
நீவீர்
பல்லாண்டு பல்லாண்டு பலகோடி நூறாண்டு (2)
வாழிய வாழியவே (2)

## Song 4: ஸ்வாகதம் ஸ்வாகதம் ♫

ஸ்வாகதம் ஸ்வாகதம் யோகி ராம்சுரத்குமார் ஸ்வாகதம்
ப்ரம்மானந்தம் பரம சுகதம் கேவலம் ஞான மூர்த்திம்
யோகி ராம்சுரத்குமார் ஸ்வாகதம்
த்வந்த்வாதீதம் ககன ஸத்ருசம் தத்வமஸ்யாதி லக்ஷ்யம்
யோகி ராம்சுரத்குமார் ஸ்வாகதம்
ஏகம் நித்யம் விமலம் அசலம் சர்வதீ ஸாக்ஷி பூதம்
யோகி ராம்சுரத்குமார் ஸ்வாகதம்
பாவாதீதம் த்ரிகுண ரஹிதம் சத்குரும் தம் ஸ்வாகதம்
யோகி ராம்சுரத்குமார் ஸ்வாகதம்
ஸ்வாகதம் ஸ்வாகதம் யோகி ராம்சுரத்குமார் ஸ்வாகதம்

## Song 5: நமஸ்தே நமஸ்தே ♬

நமஸ்தே நமஸ்தே சிதானந்த மூர்த்தி
நமஸ்தே நமஸ்தே யோகி ராம்சுரத்குமார்
நமஸ்தே நான்ஸ்தே ஸதா விஶ்வ மூர்தே
நமஸ்தே நந்ஸ்தே க்ஷமஸ்வாபராதம்

## Song 6: சத்ய ஸ்வரூபம் ♬

சத்ய ஸ்வரூபம் சகுண ஸ்வரூபம்
சாந்த ஸ்வரூபம் ரமணிய ரூபம்
ப்ரேம ஸ்வரூபம் ப்ரிய பாஷி ரூபம்
யோகி ராமசுரத கௌமார மீடே

## Song 7: உடல் மனம் வழியேயும் ♫

உடல் மனம் வழியேயும்
புலன் புத்தி வழியேயும்
அவரவர் இயல்பின் வழியேயும்
அவரவர் விதியின் வழியேயும்
எவை எவை நாம் செய்யினும்
அவை அவை அனைத்தும்
யோகி ராம்சுரத்குமார்க்கே அர்ப்பணம் (3)
யோகி ராம்சுரத்குமாரின் நாம சங்கீர்த்தனம்
கஷ்டத்திலிருந்து நம்மை விடுவிக்கும் - கடும்
கோபத்திலிருந்து நம்மை விடுவிக்கும் -ஸுக-
வீனத்திலிருந்து நம்மை விடுவிக்கும்
பயத்திலிருந்து நம்மை விடுவிக்கும் - பிறவிப்
பிணியிலிருந்து நம்மை விடுவிக்கும்
ஆதலின் அவர் நாம சங்கீர்த்தனம் தன்னை
அவர் தம் திருவடிகளில் சமர்ப்பணம் செய்வோம் (3)

## Song 8: யத்கரோமி ♫

யத்கரோமி யதஸ் இச்சாமி யஜ்ஜுஹோமி யத்ததாமிச்ச
யத் தபஸ்யாமி பகவன் தத்கரோமி த்வதர்பணம்

## Song 9: புத்தி ஹீன ♫

புத்தி ஹீன தனு ஜானிகே ஸுமிரௌ பவன குமார
பல புத்தி வித்யா தேஹு மோஹி ஹரஹு கலேச விகார
ஜய ஹனுமான ஞான குண சாகர ஜய கபீஸ திஹுலோக உஜாகர
ஜய ஜய ஜய ஹனுமான கோ சாயி க்ருபா கரஹு குரு தேவகி நாஹி

## Song 10: அன்பே சரணம் ♫

அன்பே சரணம் அருளே சரணம்
குருவே சரணம் திருவே சரணம்
யோகி ராமா சுரத குமாரா
சரணம் பாதம் பணிவோம் சரணம்
வாழிய பாரத யோக நல் பிழம்பே
வாழிய எங்கள் வினைதீர் மருந்தே
வாழிய கீதை வழங்கிய குருவே
வாழிய ராம சந்திர தருவே
வாழிய எங்கள் அன்பே அருளே
வாழிய அறத்தின் முதலே முடிவே
வாழிய வாழிய வாழிய எங்கள்
யோகி ராமா சுரத குமாரன் (3)

## Song 12: யோகி ராம்சுரத்குமார் ஆர்த்தி ♫

யோகி ராம்சுரத்குமார் ஜயகுருராயா
யோகி ராம்சுரத்குமாரா ஜயகுருராயா
யோகி ராம்சுரத்குமார் ஜயகுருராயா (2)
யோகி ராம்சுரத்குமாரா ஜயகுருராயா

## Song 13: மங்களம் ஜய மங்களம் ♫

மங்களம் ஜய மங்களம் மங்களம் ஜய மங்களம்

மங்களம் சுப மங்களம் மங்களம் சுப மங்களம்

சர்வ லோக ரக்ஷணைக ஜாக ரூக மங்களம்

நித்ய புத்த நித்ய யுக்த நித்ய சுத்த மங்களம்

நிர்மலாய நிஸ்சலாய நிர்மமாய மங்களம்

யோகி ராம்சுரத்குமார தேசிகேந்த்ர மங்களம்

யோகி ராம்சுரத்குமார பூஜ்ய பாத மங்களம்

யோகி ராம்சுரத்குமார பூஜ்ய பாத மங்களம்

## Song 14: யோக சத்குரு ♫

யோக சத்குரு ஸ்ரீராம சத்குரு - 2

யோகி ராம்சுரத்குமார் ஞான சத்குரு - 2

நாத சத்குரு ராம நாம சத்குரு - 2

ராம ராம ராம ராம ராம சத்குரு - 2

நித்ய சத்குரு ஜோதி நேத்ர சத்குரு - 2

சித்த சத்குரு தெய்வ குழந்தை சத்குரு - 2

## Song 15: ஓம் ஸ்ரீ ராம் ஜயராம் ♫

ஓம் ஸ்ரீ ராம் ஜயராம் ஜய ஜயராம்

ஓம் ஸ்ரீ ராம் ஜயராம் ஜய ஜயராம்

ஓம் ஸ்ரீ ராம் ஜயராம் ஜய ஜயராம்

ஓம் ஸ்ரீ ராம் ஜயராம் ஜய ஜயராம்

## Song 16: ஓம் ஶ்ரீ ராம் ஜயராம் ♫

ஓம் ஶ்ரீ ராம் ஜயராம் ஜய ஜயராம்
ஓம் ஶ்ரீ ராம் ஜயராம் ஜய ஜயராம்
ஓம் ஶ்ரீ ராம் ஜயராம் ஜய ஜயராம்
ஓம் ஶ்ரீ ராம் ஜயராம் ஜய ஜயராம்

## Song 17: அருணாசல சிவ ♫

அருணாசல சிவ அருணாசல சிவ
அருணாசல சிவ அருண ஜடா

## Song 18: மைத்ரீம் பஜத ♫

மைத்ரீம் பஜத, அகில ஹ்ருஜ்-ஜேத்ரீம்!
ஆத்மவதேவ பராநபி பச்யத!
யுத்தம் த்யஜத! ஸ்பர்தாம் த்யஜத!
த்யஜத பரேஷ்வக்ரமம்-ஆக்ரமணம்!
ஜநநீ ப்ருதிவீ காமதுகாஸ்தே,
ஜநகோ தேவ: ஸகல தயாளு:!
தாம்யத! தத்த! தயத்வம் ஜநதா:!

ச்ரேயோ பூயாத் ஸகல ஜநாநாம்!
ச்ரேயோ பூயாத் ஸகல ஜநாநாம்!
ச்ரேயோ பூயாத் ஸகல ஜநாநாம்!

## Song 19: மைத்ரீம் பஜத – தமிழ் ♫

அனைத்துளம் வெல்லும் அன்பு பயில்க!

அன்னியர் தமையும் தன்னிகர் காண்க!

போரினை விடுக! போட்டியை விடுக! (2)

பிறனதைப் பறிக்கும் பிழை புரிந்தற்க!

அருள்வாள் புவித்தாய், காமதேநுவாய்! (2)

அப்பன் ஈசனோ அகிலதயாபரன்!

அடக்கம் – கொடை – அருள் பயிலுக, மக்காள்! (2)

உலகினரெல்லாம் உயர்நலம் உறுக! (3)

## Song 20: குறையொன்றுமில்லை

குறையொன்றுமில்லை மறைமூர்த்தி கண்ணா
குறையொன்றுமில்லை கண்ணா
குறையொன்றுமில்லை கோவிந்தா

குறையொன்றுமில்லை மறைமூர்த்தி கண்ணா
குறையொன்றுமில்லை கண்ணா
குறையொன்றுமில்லை கோவிந்தா

கண்ணுக்குத் தெரியாமல் நிற்கின்றாய் கண்ணா
கண்ணுக்குத் தெரியாமல் நின்றாலும் எனக்கு
குறையொன்றுமில்லை மறைமூர்த்தி கண்ணா

வேண்டியதைத் தந்திட வேங்கடேசன் என்றிருக்க
வேண்டியது வேறில்லை மறைமூர்த்தி கண்ணா
மணிவண்ணா மலையப்பா கோவிந்தா கோவிந்தா

திரையின் பின் நிற்கின்றாய் கண்ணா
கண்ணா திரையின் பின் நிற்கின்றாய் கண்ணா
உன்னை மறையோதும் ஞானியர் மட்டுமே காண்பார்
திரையின் பின் நிற்கின்றாய் கண்ணா
உன்னை மறையோதும் ஞானியர் மட்டுமே காண்பார்
என்றாலும் குறையொன்றும் எனக்கில்லை கண்ணா
என்றாலும் குறையொன்றும் எனக்கில்லை கண்ணா

குன்றின்மேல் கல்லாகி நிற்கின்ற வரதா
குன்றின்மேல் கல்லாகி நிற்கின்ற வரதா
குறையொன்றுமில்லை மறைமூர்த்தி கண்ணா
குறையொன்றுமில்லை மறைமூர்த்தி கண்ணா
மணிவண்ணா மலையப்பா கோவிந்தா கோவிந்தா

கலிநாளுக்கிரங்கி கல்லிலே இரங்கி
நிலையாகக் கோயிலில் நிற்கின்றாய் கேசவா

கலிநாளுக்கிரங்கி கல்லிலே இரங்கி
நிலையாகக் கோயிலில் நிற்கின்றாய் கேசவா
குறையொன்றுமில்லை மறைமூர்த்தி கண்ணா

யாரும் மறுக்காத மலையப்பா
யாரும் மறுக்காத மலையப்பா
உன் மார்பில் ஏதும் தர நிற்கும்
கருணை கடலன்னை
என்றும் இருந்திட ஏது குறை எனக்கு
என்றும் இருந்திட ஏது குறை எனக்கு

ஒன்றும் குறை இல்லை மறைமூர்த்தி கண்ணா
ஒன்றும் குறை இல்லை மறைமூர்த்தி கண்ணா
மணிவண்ணா, மலையப்பா
கோவிந்தா கோவிந்தா
கோவிந்தா கோவிந்தா
கோவிந்தா கோவிந்தா

## Song 21: மங்களம் பிரேம ♫

மங்களம் பிரேம ரூபாய மங்களம் ஞானதாயினே

மங்களம் சாந்தி ரூபாய மங்களம் பக்திதாயினே

மங்களம் தர்ம ரூபாய மங்களம் ஆர்த்தி நாசினே

மங்களம் சத்ய ரூபாய ராம்சுரத்குமாராய மங்களம்

யோகி ராம்சுரத்குமாராய மங்களம்

யோகி ராம்சுரத்குமாராய மங்களம்

## Song 22: வாழ்க வாழ்க ♫

வாழ்க வாழ்க வாழ்க வாழ்க சுரதன் பாதம் வாழ்கவே

வாழ்க வாழ்க வாழ்க வாழ்க சுரதன் நாமம் வாழ்கவே

வாழ்க வாழ்க வாழ்க வாழ்க யோகிராம் சுரத்குமார்

யோகிராம் சுரத்குமார் ஜெயகுருராயா (3)

## Song 23: ஆடுதம்மா ஆடுதம்மா ♫

பல்லவி

ஆடுதம்மா ஆடுதம்மா அழகு ஊஞ்சல்

அருள் யோகி ராம்சுரத்குமாரரின் திரு ஊஞ்சல்

சரணம் 1

ஈரேழு புவனத்தில் காணக் கிடைக்காத

சீர்மிகு கழல் நின்ற சிங்கார ஊஞ்சல்

மருள்தனை நீக்கி அருள்சுரக்க வந்த

ஶ்ரீராம சுரதனின் சுந்தர ஊஞ்சல்

சரணம் 2

முக்கோடி தேவரும் போற்றிடும் ஊஞ்சல்

வேதத்தின் நாயகன் புகழ்பாடும் ஊஞ்சல்

குருயோகிராமன் அசைந்தாடும் ஊஞ்சல்

கற்பகத் தருவான அற்புதன் ஊஞ்சல்

சரணம் 3

ஒய்யாரமாயாடும் தெய்வீகன் ஊஞ்சல்

நர்த்தன சிவனின் சிற்பர ஊஞ்சல்

அனுமனை ஆட்கொண்ட ஶ்ரீராமன் ஊஞ்சல்

மங்கள ராம்ஜியின் மணிபாத ஊஞ்சல்

## Song 24: யோசனைக்கு எட்டா ♫

யோகி ராமசுரதகுமாரா

ஜயகுரு ஜயகுரு ஜயகுரு ராயா

யோகி ராமசுரதகுமாரா

ஜயகுரு ஜயகுரு ஜயகுரு ராயா

யோசனைக்கு எட்டா யோகமே போற்றி

கிட்டக் கிடைத்தெமக்கு ஊட்டுவாய் போற்றி

ராம சுரத குமரா போற்றி (2)

மண்வரு சிவமெனும் மனமே போற்றி (2)

சுவைவளர் இன்ப ஜோதியே போற்றி

ரம்மிய ஆன்மக் கம்மிய போற்றி

தனிப்பெரும் கருணை சமரச போற்றி (2)

குற்றம் காணா குணமலை போற்றி (2)

மாறிலா அறிவு அண்ணாமலையே போற்றி

ராம தாஸரின் கோமக போற்றி

ஜகத்தின் தாயாம் சக்தியே போற்றி (2)

யமபயம் நீக்கும் அமலனே போற்றி (2)

குவளை மாலைக் குருவே போற்றி

ருக்முதல் வேத ரூபனே போற்றி

சமாதிப் பித்தனே சண்முகா போற்றி (2)

யக்ஞமே வேட்கும் யக்ஞமே போற்றி (2)

குதலை மொழியருள் கூத்தனே போற்றி

ருக்மணி மணாளனின் ருசியுரு போற்றி

சரி என எதையும் சாற்றுவாய் போற்றி (2)

யந்திர தந்திர மந்திரம் போற்றி (2)

குவலயத்து அவலம் குமைப்பாய் போற்றி

ருசிநிறை சிவம் வளர் உசிதனே போற்றி

ராம ராஜ்ய ரட்சகா போற்றி (2)

யாதும் தரும் பெரு யாசகா போற்றி (2)

யோகி ராமசுரதகுமாரா

ஜயகுரு ஜயகுரு ஜயகுரு போற்றி

யோகி ராமசுரதகுமாரா

ஜயகுரு ஜயகுரு ஜயகுரு போற்றி

ஸ்ரீராமா ஜயராமா ஜயஜயராமா (4)

சீர்வளர் செய் தவத்திருவே போற்றி

ராஜத் தவப்பெரு ராசனே போற்றி

மங்கா அறிவொளித் தங்கமே போற்றி (2)

சடலக் கோயில் சங்கரா போற்றி (2)

யவனம் பேழையில் தவமணி போற்றி
ராதைக் காதலை ஓதுவாய்ப் போற்றி

மரணம் நீக்கும் சரணமே போற்றி (2)

சனியெல்லாம் தொலைக்கும் முனிவனே போற்றி (2)

யமமும் நியமமுமாய் இருப்பாய் போற்றி

சங்கடம் தீர்க்கும் சாதுவே போற்றி

யந்திரம் யாம் ஆகாத் தந்திர போற்றி (2)

ராகத்வேஷ ரஹிதனே போற்றி

மன்னா உலகில் மன்னுவாய் போற்றி

ஸ்ரீராமா ஜயராமா ஜயஜயராமா (4)
யோகி ராமசுரதகுமாரா

ஜயகுரு ஜயகுரு ஜயகுரு ராயா

யோகி ராமசுரதகுமாரா ஜயகுரு ஜயகுரு ஜயகுரு ராயா

## Song 25: மாதா ஜெய ஓம் ♫

**காப்பு**

ஆக்கும் தொழில் ஐங்கரன் ஆற்ற நலம்
பூக்கும் நகையாள் புவனேஸ்வரி பால்
சேர்க்கும் நவரத்தின மாலையினைக்
காக்கும் கணநாயக வாரணமே!

மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

**(1) வைரம்**

கற்றும் தெளியார் காடே கதியாய் கண்மூடி நெடுங்கன வானதவம்
பெற்றும் தெளியார் நிலையென்னில் அவம் பெருகும் பிழையேன் பேசத்தகுமோ
பற்றும் வயிரப் படைவாள் வயிரப் பகைவர்க்கெமனாக எடுத்தவளே
வற்றாத அருட்சுனையே வருவாய் மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

**(2) நீலம்**

மூலக் கனலே சரணம் சரணம் முடியா முதலே சரணம் சரணம்
கோலக்கிளியே சரணம் சரணம் குன்றாத ஒளிக்குவையே சரணம்
நீலத் திருமேனியிலே நினைவாய் நினைவற்றெளியேன் நின்றேன் அருள்வாய்
வாலைக் குமரி வருவாய் வருவாய் மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

**(3) முத்து**

முத்தேவரும் முத்தொழிலாற்றிடவே முன்னின்றருளும் முதல்வி சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம் வேதாந்த நிவாஸினியே சரணம்
தத்தேறிய நான் தனயன் தாய் நீ சாகாத வரம்தரவே வருவாய்
மத்தே றுதத்திக்கிணை வாழ்வடையேன் மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

**(4) பவளம்**

அந்தி மயங்கிய வான விதானம் அன்னை நடம்செய்யும் ஆனந்த மேடை
சிந்தை நிறம் பவளம் பொழிபாரோர் தேம் பொழிலாமிது செய்தவளாரோ
எந்தயிடத்தும் மனத்தும் இருப்பாள் எண்ணுபவர்க்கருள் எண்ணமிகுந்தாள்
மந்திர வேதமயப் பொருள் ஆனாள் மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

**(5) மாணிக்கம்**

காணக் கிடையாக் கதியானவளே கருதக் கிடையாக் கலையானவளே
பூணக்கிடையாப் பொலிவானவளே புனையக் கிடையாப் புதுமைத் தவளே
நாணித் திருநாமமும் நின் துதியும் நவிலாதவரை நாடாதவளே
மாணிக்க ஒளிக்கதிரே வருவாய் மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

**(6) மரகதம்**

மரகத வடிவே சரணம் சரணம் மதுரித பதமே சரணம் சரணம்
சுரபதி பணியத் திகழ்வாய் சரணம் ச்ருதி ஜதி லயமே இசையே சரணம்
ஹரஹர சிவ என்றடியவர் குழும அவர் அருள் பெற அருளமுதே சரணம்
வர நவநிதியே சரணம் சரணம் மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

**(7) கோமேதகம்**

பூமேவிய நான் புரியும் செயல்கள் பொன்றாது பயன் குன்றா வரமும்
தீமேல் இடினும் ஜெயசக்தி எனத் திடமாய் அடியேன் மொழியும் திறமும்

கோமேதகமே குளிர்வான் நிலவே குழல்வாய் மொழியே வருவாய் அருள்வாய்
மாமேருவிலே வளர் கோகிலமே மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

**(8) பத்மராகம்**

ரஞ்சினி நந்தினி அங்கணி பதும ராகவிகாஸ வியாபினி அம்பா
சஞ்சல ரோக நிவாரணி வாணி சாம்பவி சந்திரகலாதரி ராணி
அஞ்சன மேனி அலங்க்ருத பூரணி அம்ருத ஸ்வரூபிணி நித்ய கல்யாணி
மஞ்சுள மேரு ச்ருங்க நிவாஸினி மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

**(9) வைடூர்யம்**

வலையொத்த வினை கலையொத்த மனம் மருளப் பறையாறொலியொத்த
விதால்
நிலையற்றெளியேன் முடியத் தகுமோ நிகளம் துகளாக வரம் தருவாய்
அலைவற் றசைவற்றநுபூதி பெறும் அடியார் முடிவாழ் வைடூரியமே
மலையத்துவசன் மகளே வருவாய் மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

**நூற்பயன்**

எவர் எத்தினமும் இசைவாய் லலிதா நவரத்தின மாலை நவின்றிடுவார்
அவர் அற்புத சக்தி எல்லாம் அடைவார் சிவரத்தினமாய்த் திகழ்வார் அவரே

மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

## Song 26: ஜோ ஜோ ♫

ஜோ ஜோ

ஆதிசேசனே உமக்கு தொட்டிலாய் இருக்க

மென் மலர் மேனி ஓய்வு எடுக்க கண்ணுறங்கு

நீ என் செல்வமே யோகி ராம் சுரத்குமாரா

ஜோ ஜோ

நாம ரசத்தை மகிழ்ந்து பருகி

ஆனந்தமேனி ஓய்வெடுக்க கண்ணுறங்கு

நீ என் செல்வமே யோகிராம் சுரத்குமாரா

ஜோ ஜோ

சந்திர வதனத்தை முனிவரும் தேவரும்

தரிசிக்க. சலங்கை பதங்களை

அசைத்து மகிழ்வித்து கண்ணுறங்கு

நீ என் செல்வமே யோகிராம் சுரத்குமாரா

ஜோ ஜோ

மதுரமான கானா மிருதம் மென்மையாய் இசைக்க

புன்சிரிப்புடன் ஆமோதித்து லயித்து கண்ணுறங்கு

நீ என் செல்வமே யோகிராம் சரத்குமாரா

ஜோ ஜோ

ஹனுமனே உமக்கு விசிறி வீச

தென்றல் காற்றின் இன்பத்தில் கண்ணுறங்கு

நீ என் செல்வமே யோகிராம்சுரத்குமாரா

ஜோ ஜோ

யோகிராம்சுரத்குமாரா ஜோ ஜோ

யோகிராம்சுரத்குமாரா ஜோ ஜோ

ஜோ ஜோ

## Song 27: ஹே மஹேஷ ♫

ஹே மஹேஷ விஷ்வநாத யோகி ராம்சுரத்குமார் - 2

ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் - 2

காசிநாத கல்பதரு யோகி ராம்சுரத்குமார் - 2

நந்திகேச நீலகண்ட யோகி ராம்சுரத்குமார் - 2 (ஹே மஹேஷ)

ஸார்வ பௌம ஸர்வேஷ யோகி ராம்சுரத்குமார் - 2

ஸர்வ நாம ஸர்வரூப யோகி ராம்சுரத்குமார் - 3

## Song 28: ஸதா ஸ்மராமி ♫

யோகி ராம்சுரத்குமாரம் ஸதா ஸ்மராமி

யோகி ராம்சுரத்குமாரம் வசஸா க்ருணாமி

யோகி ராம்சுரத்குமாரம் சிரஸா நமாமி

யோகி ராம்சுரத்குமாரம் சரணௌ சரணம் ப்ரபத்யே

## Song 29: ராம ராம ராம ராம ♬

ராம ராம ராம ராம ராம்சுரத்குமார் - 2

ராம்சுரத்குமார் பிரபோ ராம்சுரத்குமார் - 2

ரங்கா ரங்கா ரங்கா ரங்கா ராம்சுரத்குமார் - 2

ராம்சுரத்குமார் பிரபோ ராம்சுரத்குமார் - 2

பாண்டுரங்க பாண்டுரங்க ராம்சுரத்குமார் - 2

ராம்சுரத்குமார் பிரபோ ராம்சுரத்குமார் - 2

ராமகிருஷ்ண ராமகிருஷ்ண ராம்சுரத்குமார் - 2

ராம்சுரத்குமார் பிரபோ ராம்சுரத்குமார் - 2

யோகாருடா யோகீஸ்வர ராம்சுரத்குமார் - 2

ராம்சுரத்குமார் பிரபோ ராம்சுரத்குமார் – 2

## Song 30: பஜோரே மன் ♬

பஜோரே மன் யோகி ராம்சுரதகுமார் - 2

பஜோரே மன் ப்ரேம ப்ரவாஹக் ராம் - ராம் ராம்
பஜோரே மன் ப்ரேம ப்ரவாஹக் ராம்
பஜோரே மன் யோகி ராம்சுரதகுமார்

பஜோரே மன் சாந்த ராம்சுரதகுமார் - ராம் ராம்
பஜோரே மன் சாந்த ராம்சுரதகுமார்
பஜோரே மன் யோகி ராம்சுரதகுமார்

பஜோரே மன் பிக்ஷு ராம்சுரதகுமார் - ராம் ராம்
பஜோரே மன் பிக்ஷு ராம்சுரதகுமார்
பஜோரே மன் யோகி ராம்சுரதகுமார்

பஜோரே மன் மாதா ராம்சுரதகுமார் - ராம் ராம்
பஜோரே மன் மாதா ராம்சுரதகுமார்
பஜோரே மன் யோகி ராம்சுரதகுமார் - 2

ஜெய் ஜெய் ராம் ராம் யோகி ராம்சுரத்குமார் - 4
ஜெய் ஜெய் யோகிராம் யோகிராம்சுரத்குமார் - 4
ஸ்ரீராம் ஜெய் ராம் யோகி ராம்சுரத்குமார் - 4
ஸ்ரீராம் ஜெய்ராம் ஜெய் ஜெய் ராம் ஓம் – 2
ஸ்ரீராம் ஜெய் ராம் யோகி ராம்சுரத்குமார் – 4

பஜோரே மன் யோகி ராம்சுரதகுமார்

## Song 31: கோபாலா ஜய கோபாலா ♫

கோபாலா ஜய கோபாலா - 2

யோகி ராம்சுரத்குமார் கோபாலா - 2

ஆஷ்ரித வத்ஸலா கோபால – 2 (ஜய)
அச்யுதா கேசவா கோபால - 2 (கோபாலா)

ஷ்யாமகா ம்பரதர கோபாலா - 2 (ஜய)
சாரு சம்பாஷண கோபாலா - 2 (கோபாலா)

வனமாலா ஷோபித கோபாலா - 2 (ஜய)
விஷால நேத்ரா கோபாலா - 2 (ஜய)

கருணாலய ஸ்ரீ கோபாலா - 2 (கோபாலா)

மாயா மானுஷ கோபாலா - 2 (ஜய)
சுதாம சுந்தர கோபாலா - 2 (கோபாலா)

## Song 32: வீரேஷ்வராய நமோ நமோ ♫

வீரேஷ்வராய நமோ நமோ காசி விஷ்வேஷ்வராய நமோ நமோ - 2

ஶ்ரீ பரமேஷ்வர நமோ நமோ ஹர பரமேஶ்வர நமோ நமோ - 2

சிவ நடனேஷ்வர நமோ நமோ யோகி ராம்சுரத்குமார் நமோ நமோ -2

(வீரேஷ்வராய)

1) சுதாம சதனா சுந்தர ரூபா அம்ருத பாஷன நமோநமோ - 2

நித்யானந்தா நிருபமதாதா நிர்மல மஹிமா நமோ நமோ - 2

(வீரேஷ்வராய)

2) த்ரிலோகசாரீ த்ரிகுணாதீதா த்ரயம்பகமூர்த்தே நமோ நமோ - 2

ஞான தாதா பக்தி தாதா ஆனந்த தாதா நமோ நமோ - 2

(வீரேஷ்வராய)

3) ஷக்திப்ரதாபா சாந்திப்ரதாபா ருத்ரப்ரதாபா நமோ நமோ - 2

ப்ரம்மஸ் வரூபா ப்ரணவ ஸ்ரூபா மானவரூபா நமோ நமோ - 2

(வீரேஷ்வராய)

4) ஆபத் பாந்தவா அனாதி நாதா அருணாசலசிவ நமோ நமோ - 2

அகண்ட வியாபி ஹ்ருதயநிவாஸி புருஷோத்தமதே நமோ நமோ - 2

(வீரேஷ்வராய)

5) நமஸ்துப்யம் நமஸ்துப்யம் நமஸ்துப்யம் நமோ நமோ - 4

வீரேஷ்வராய நமோ நமோ காசி விஷ்வேஷ்வராய நமோ நமோ - 2
ஶ்ரீ பரமேஷ்வர நமோ நமோ சிவ நடனேஷ்வர நமோ நமோ - 2

யோகி ராம்சுரத்குமார் நமோ நமோ - 3

- யதீஸ்வரி அம்பிகா பிரியாம்பா

## Song 33: அருணாசலேஷ்வரா நமோ நமோ ♬

அருணாசலேஷ்வரா நமோ நமோ

யோகி ராம்சுரத்குமார் நமோ நமோ

ஆதிமூலா நமோ நமோ

யோகி ராம்சுரத்குமார் நமோ நமோ

த்ரிபுராந்தகசிவா நமோ நமோ

யோகி ராம்சுரத்குமார் நமோ நமோ

த்ரிகுணாதீதா நமோ நமோ

யோகி ராம்சுரத்குமார் நமோ நமோ

விஷ்வேஷ்வரா சிவா நமோ நமோ

யோகி ராம்சுரத்குமார் நமோ நமோ

விஷ்வநாதா நமோ நமோ

யோகி ராம்சுரத்குமார் நமோ நமோ

அகண்டவ்யாபக நமோ நமோ

யோகி ராம்சுரத்குமார் நமோ நமோ

அகண்ட ஜ்யோதி நமோ நமோ

யோகி ராம்சுரத்குமார் நமோ நமோ

ஆதி தேவா நமோ நமோ

யோகி ராம்சுரத்குமார் நமோ நமோ

ஆனந்த ஸாகரா நமோ நமோ

யோகி ராம்சுரத்குமார் நமோ நமோ

யோகி ராம்சுரத்குமார் நமோ நமோ

யோகானந்தா நமோ நமோ

யோகீஷ்வர ஹர நமோ நமோ

நந்தீஷ்வர சிவ நமோ நமோ

அருண ஜோதி நமோ நமோ

ஆத்ம ஜோதி நமோ நமோ

யோகி ராம்சுரத்குமார் நமோ நமோ

யோகி ராம்சுரத்குமார் நமோ நமோ

நமோ நமோ, நமோ நமோ,

நமோ நமோ, நமோ நமோ

யோகி ராம்சுரத்குமார் நமோ நமோ

ஓம் அஹோ பாக்யம், அஹோ பாக்யம், அஹோ பாக்யம்!

## Song 34: த்வமேவ மாதா ♫

த்வமேவ மாதா ச பிதா த்வமேவ

த்வமேவ பந்துஷ்ச ஸகா த்வமேவ

த்வமேவ வித்யா த்ரவிணம் த்வமேவ

த்வமேவ ஸர்வம் அருணாசல வாஸா

அருணாசல வாஸா அருணாசல வாஸா

த்வமேவ ஸர்வம் யோகி ராம்சுரத்குமார்

த்வமேவ ஸர்வம் பிக்ஷாடனேஷ்வர

த்வமேவ ஸர்வம் மமதீன பந்தோ

த்வமேவ ஸர்வம் அருண ஜடா

அருண ஜடா அருண ஜடா

## Song 35: ராமகிருஷ்ண ராமகிருஷ்ண ♫

ராமகிருஷ்ண ராமகிருஷ்ண ராமகிருஷ்ண தேவா

ஸ்ரீ ராமகிருஷ்ணதேவா

யோகி ராம்சுரத்குமார் ராமகிருஷ்ணதேவா.- 2

ராம கிருஷ்ண தீனதயாளோ யோகி ராம்சுரத்குமார் - 2

ராம கிருஷ்ண தீனபந்தோ யோகி ராம்சுரத்குமார் - 2 (ராம)

அனாத நாதா ஆபத்பாந்தவா யோகி ராம்சுரத்குமார் - 2

பக்த ஜனப்ரிய பரமானந்தா யோகி ராம்சுரத்குமார் - 2 (ராம)

கலியுகவரதா காசிநாதா யோகி ராம்சுரத்குமார் - 2
அனந்தரூபா அவதாரவரிஷ்டா யோகி ராம்சுரத்குமார் - 2 (ராம)

## Song 36: அருணாசல ஜோதி ♫

அருணாசல ஜோதி நமோ நமோ - 2

பரமாத்ம ஜோதி நமோ நமோ - 2

அகண்ட ஜோதி நமோ நமோ - 2

ஆனந்த ஜோதி நமோ நமோ - 2

அந்தர்யாமி நமோ நமோ - 2

அருணையில் வதியும் யோகி ராம்சுரத்குமார் - 2

நமோ நமோ நமோ நமோ - 2

அருணாசல ஜோதி நமோ நமோ

## Song 37: நமோ ராமச்சந்திரா ♫

நமோ ராமச்சந்திரா நமோ ராம்சுரத்குமார்

நமோ சாதுமித்ர நமோ சங்கடஹரணா

நமோ வெங்கடேச நமோ அத்ரிவாசா - 2

நமோ ராமகிருஷ்ணா நமோ ராம்சுரத்குமார்

நமோ ராமச்சந்திரா

நமோ ஸ்ரீநிவாசா நமோ பாண்டுரங்க
நமோ ஸுதாமவாஸா நமோ ஸ்வயம்ப்ரகாஸா

நமோ ரங்கநாத நமோ பத்மநாபா - 2

நமோ ஆத்மானந்தா நமோ ஆதிமூலா

நமோ ராமச்சந்திரா

ரங்கா ரங்கா பாண்டுரங்கா பாண்டுரங்கா பண்டரிநாதா - 2

விட்டலா விட்டலா ஜயஹரி விட்டலா ஜயஹரி விட்டலா விட்டலா விட்டலா - 2

ராம ராம ராம ராம யோகி ராம்சுரத்குமார்

யோகி ராம்சுரத்குமார் ராம ராம ராம ராம

யோகி ராம்சுரத்குமார் ஜெயகுருராய

## Song 38: திருவண்ணாமலை செல்வமே ♫

திருவண்ணாமலை செல்வமே எங்கள் யோகி ராம்சுரத்குமார் - 2

ராம் ராம் ராம் ராம் யோகி ராம்சுரத்குமார் - 2

(திருவண்ணாமலை)

காண்பது அனைத்தும் இந்த்ர ஜாலம் ஏகனாய் என்றும் இருப்பவன் அவனே - 2

உலகம் என விரிந்த அனைத்தும் ராமன் உள்ளும் ராமன் புறமும் ராமன் -2

(திருவண்ணாமலை)

ராம நாமா அமிர்தம் தெவிட்டாத அனந்தம் - 2

இதுவே அனைத்து நோயை நீக்கும் திவ்ய ஔஷதம் - 2

(திருவண்ணாமலை)

கலியுக ராமன் யோகி ராம்சுரத்குமார் - 2

ராமா ராமா என உலகு அனைத்தும் பார் - 2

(திருவண்ணாமலை)

## Song 39: எண்ணம் அனைத்தும் ♫

எண்ணம் அனைத்தும் உன் பால் வைத்த அடியார்கள்
பண்ணும் செயல் வேறுண்டோ?
புண்ணியப் பயனாக புகலிடம் நீயெனக்
கண்டபின் கவலையுண்டோ?

அண்மையில் இருந்தாலும் அப்பால் இருந்தாலும்
அறிவதற்கரிதாய நீ
கண்ணுக்குத் தெரியாது கற்பனைக் கெட்டாது
கடும் சோதனை செய்யினும்

திண்ணமாய் என் நலம் எல்லாம் உன் பொறுப்பென
நினைத்தே மகிழ்ந்திருப்பேன்
இந்நிலை உறுதியாய் என்றும் இருந்திடவும்
உன்னருள் வேண்டி நின்றேன்

மண்ணிலே யோகி ராம்சுரத்குமார் என வந்த
எண்ணுதற்கரிய பரமே
எண்ணறிய என் பிழைகள் யாவையும் பொறுத்தெனைக்
காத்து கடைத்தேற்றுவாய் -
எனைக் காத்து கடைத்தேற்றுவாய் - 3

## Song 40: ஒரே ஒரு லக்ஷ்யம் ♫

ஒரே ஒரு லக்ஷ்யம் திருவண்ணாமலை - 2

ஒரே ஒரு ஆசை திவ்ய தரிசனம்

ஒரே ஒரு மார்க்கம் ப்ரேம மார்க்கம்

ஒரே ஒரு மந்த்ரம் யோகி ராம்சுரத்குமார மந்த்ரம் – 2

யோகி ராம்சுரத்குமாரா யோகி ராம்சுரத்குமாரா
யோகி ராம்சுரத்குமாரா யோகி ராம்சுரத்குமாரா

ஒரே ஒரு மந்த்ரம் யோகி ராம்சுரத்குமார மந்த்ரம் – 2

காக்கும் கடவுளும் நீயே கரை சேர்க்கும் கடவுளும் நீயே - 2
அன்பும் அருளும் நீயே அன்னையும் தந்தையும் நீயே - 2

அருணையில் வதியும், கருணாநிதியே – 2

யோகி ராம்சுரத்குமாரா யோகி ராம்சுரத்குமாரா

யோகி ராம்சுரத்குமாரா

## Song 41: கணபதி என்றிட ♫

கணபதி என்றிட கவலைகள் தீர்ந்திடும்

யோகிராம் என்றிட பாவங்கள் போகும்

ஓம் எனும் பிரணவ உண்மையுட் பொருளே

யோகி ராம் சுரத்குமார் ஜய குரு தேவா

யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் ஜயகுருராய - 2

மோதகக் கையானே மூஷிக வாகனனே

தும்பிக்கை நாதனே நம்பிக் கைதொழுவோமே

விசிறி சிரட்டையுடன் விரைந்தோடி வந்து என்

வினைகளைத் தீர்த்திடும் வித்தகனே கஜராஜா

யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் ஜயகுருராய - 2

தொந்திக் கணபதியே தொழுதுன்னை வேண்டுகிறோம்

வந்தருள் புரிவாய் யோக விநாயகா

வெண்தாடி வேந்தனே பச்சைத்தலைப் பாகையனே

பணிந்துனைப் பாடினோம் ஜய குரு தேவா

யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் ஜயகுருராய - 2

அவல் பொரிகொழுக்கட்டை அன்புடன் படைத்தோம்

அற்புத விநாயகா அடைக்கலம் அடைந்தோம்

நாமத்தை நாளும் நாங்கள் நாட்டமுடன் நவின்றிடவே

எமக்கருள் புரிவாய் யோகி ராம்சுரத்குமாரா.

யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் ஜயகுருராய – 3

## Song 42: எனது வாழ்விடம் ♬

எனது வாழ்விடம் உன் மலர்ப்பாதம்

யோகி ராம்சுரத்குமார் என் உயிர் ஜீவனம்

கண்ணின் மணியாய் கற்பகத் தருவாய்

கருத்தினில் உறைந்த கவின் உயர் பாதம்

யோகி ராம்சுரத்குமார் அருள்மிகு பாதம்

யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்
ஜயகுருராய

காலனைக் காலால் உதைத்திடும் பாதம்

ஆலத்தை அமுதாய் மாற்றிடும் பாதம்

அருணையில் அன்று ஊன்றிய பாதம்

அண்டம் எங்கும் நடமிடும் பாதம்

உன் பாத பூஜை பெரும் ஆசிர்வாதம்

யோகி ராம்சுரத்குமார் அருள்மிகு பாதம்

யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்
ஜயகுருராய

அன்பர்கள் நெஞ்சில் வழிபடும் பாதம்
அல்லல்கள் நீக்கி அணைத்திடும் பாதம்

அபயப் பாதம் அக்ஷய பாதம்

அமிர்த பாதம் ஆனந்த பாதம்

உன் பாத பூஜை பெரும் ஆசிர்வாதம்
யோகி ராம்சுரத்குமார் அருள்மிகு பாதம்

யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்
ஜயகுருராய

கமலப் பாதம் காருண்ய பாதம்

பேரெழில் பாதம் பரமனின் பாதம்

ப்ரச்சனை தீர்க்கும் பெரும்புகழ் பாதம்

பேரின்பப் பெருவெளி சேர்த்திடும் பாதம்

உன் பாத பூஜை பெரும் ஆசிர்வாதம்

யோகி ராம்சுரத்குமார் அருள்மிகு பாதம்

யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் ஜயகுருராய

எனது வாழ்விடம் உன் மலர்ப்பாதம்

யோகி ராம்சுரத்குமார் என் உயிர் ஜீவனம்

கண்ணின் மணியாய் கற்பகத் தருவாய்

கருத்தினில் உறைந்த கவின் உயர் பாதம்

யோகி ராம்சுரத்குமார் அருள்மிகு பாதம்

## Song 43: அவனே தெய்வம் ♫

அவனே தெய்வம் அவனன்றி ஏது தெய்வம்

அவன் இவன் என்றே ஓடியலையாதீர்

அவனே பரப்ரம்மம்

அவனே தெய்வம் அவனே பரப்ரம்மம்

தவமிலா தென்றும் நான் பெற்ற பாக்கியம் - 2

ஜனனமெடுத்த போதெல்லாம் வரும் இந்த பாக்கியம்     அவனே

அவனே தெய்வம்

அவனன்றி ஏது தெய்வம்

அவன் இவன் என்றே ஓடியலையாதீர்

அவனே பரப்ரம்மம்

அவனே தெய்வம் அவனே பரப்ரம்மம்

பவபயங்களைப் போக்கி பாதுகாத்தருள் தெய்வம் - 2

ராம்சுரத் ராம்ஜியாம் ரகுகுல திலகன்

ராமதாசன் பணி

அவனே தெய்வம்

அவனன்றி ஏது தெய்வம்

அவன் இவன் என்றே ஓடியலையாதீர்

அவனே பரப்ரம்மம்

அவனே தெய்வம் அவனே பரப்ரம்மம்

## Song 44: **அருணைநகர் தன்னில்**

அருணை நகர் தன்னில் மேவும் ஐயா - எங்கள்
ஆழ் வினையை போக்கிவிடும் மெய்யா - உந்தன்
அருள் பெறவே நாடி வந்தோம்
கருணை புரி ராம்சுரத்குமாரா- அருள் தாராய்.

பூதளம் முழுதும் உன்னை போலே - மிக்க
புண்ணியன் உண்டோ உரையாய் கோவே - 2 (இந்த)
உந்தன் ஆதரவை நாடி வந்தோம்
ஐயனே எம் ராம்சுரத்குமாரா - அருள் தாராய்.

பெற்றெடுத்த தாயினை போல் – நீயே
எம்மை பேணிடுவாய் முற்றும் உண்மை தானே – 2 (எம்மை)
நாங்கள் கற்ற கல்வி யாவும் உந்தன்
காலடிக்கு ராம்சுரத்குமாரா -அருள் தாராய்

அத்தினா புறத்தில் முன்னர் - ஐவர்
கண்ணன் ஆணையின்படி எதுவும் செய்வார் – 2 (அந்த)
அந்தப் பத்தி மையால் யானும் உன்னை
பாடுவேன் ராம்சுரத்குமாரா - அருள் தாராய்.

காசி நகர் தன்னில் வந்த தேவா - எங்கள்
கலியை எல்லாம் போக்கிடவே வா வா – 2 (அந்த)
ராமதாசன் அருள் பெற்றவனே
தஞ்சம் எங்கள் ராம் சூரத்குமாரா - அருள் தாராய்.

எத்தனை பிறவி எடுத்தாலும் - உந்தன்
இன்னருளை வேண்டிடுவேன் மேலும் – 2 (இனி)
இந்த பத்திமையால் உந்தன் பெயர்
பாடிடவே ராம்சுரத்குமாரா - அருள் தாராய்

வையகத்தில் எங்கும் உள்ள மாந்தர் - தேடி
வந்து உனது பாதமலர் சேர்ந்தார் – 2 (இந்த)
எனை பையனது அன்பு வளை
படுத்தினை ராம்சுரத்குமாரா - அருள் தாராய்

செந்தமிழால் யானும் உன்னை பாடி - இந்த
தேசம் எங்குமே தெரிவேன் ஓடி – 2 (நல்ல)
உந்தன் கந்தமலர் பாதமின்றி
காசினியில் வேர் அறியேன் நாதா அருள் தா தா

அன்பினை இதற்கு முன்னர் அறியேன் -சற்றும்
ஆதரவு இல்லாத மிகச்சிறியேன் – 2 (உண்மை)
உந்தன் பொன்னடியை சேர்ந்த பின்னர்
பூரணமாம் அன்பை உணர்ந்தேனே - மகிழ்ந்தேனே.

## Song 45: யோகிராம்ஜி நித்யம் ♫

யோகி ராம்சுரத்குமாரா யோகி ராம்சுரத்குமாரா

யோகி ராம்சுரத்குமாரா ஜெய குரு ராயா) - 4

யோகிராம்ஜி நித்யம் யோகிராம்ஜி ஸத்யம்

யோகிராம்ஜி ஸர்வம் யோகிராம்ஜி

யோகிராம்ஜி அன்பு யோகிராம்ஜி ஆத்மா

யோகிராம்ஜி ஜய் ஜய் யோகிராம்ஜி

தேவரும் முனிவரும் மூவரும் யாவரும் - 2

தினந்தினம் சொல்லிடும் நாமம்

திவ்ய தேனாய் இனித்திடும் நாமம்) - 2

சொல்லிடுவோம் தினந்தோறும் - நாம்

சொல்லிடுவோம் தினந்தோறும்

தொல்லைகள் நீக்கிடும் தொல்வினை தீர்த்திடும்

தூயவன் சுந்தர நாமம் - துயர்

போக்கிடச் சொல்லுவோம் நாமும்

யோகி ராம்சுரத்குமாரா யோகி ராம்சுரத்குமாரா

யோகி ராம்சுரத்குமாரா ஜெய குரு ராயா) – 1

யோகிராம்ஜி நித்யம் யோகிராம்ஜி ஸத்யம்

யோகிராம்ஜி ஸர்வம் யோகிராம்ஜி

யோகிராம்ஜி அன்பு யோகிராம்ஜி ஆத்மா

யோகிராம்ஜி ஜய் ஜய் யோகிராம்ஜி

நானென்றும் எனதென்றும் நாளெல்லாம் ஆடிய
ஆட்டம் அடங்கிடும் போது - உயிர்

ஓட்டம் ஒடுங்கிடும் போது

சொல்லிடுமோ தெரியாது - நா

சொல்லிடுமோ தெரியாது

நமனை விரட்டியுன் நல்லடி சேர்த்திட

நாடிடுமோ மனம் அன்று

நாமம் சொல்லிட வேண்டும் இன்று> - 2

யோகி ராம்சுரத்குமாரா யோகி ராம்சுரத்குமாரா

யோகி ராம்சுரத்குமாரா ஜெய குரு ராயா> – 1

யோகிராம்ஜி நித்யம் யோகிராம்ஜி ஸத்யம்

யோகிராம்ஜி ஸர்வம் யோகிராம்ஜி

யோகிராம்ஜி அன்பு யோகிராம்ஜி ஆத்மா

யோகிராம்ஜி ஜய் ஜய் யோகிராம்ஜி

யோகி ராம்சுரத்குமாரா யோகி ராம்சுரத்குமாரா

யோகி ராம்சுரத்குமாரா ஜெய குரு ராயா> – 1

## Song 46: போவோம் அண்ணாமலைக்கு ♫

பல்லவி

போவோம் அண்ணாமலைக்கெல்லோரும் புறப்படுங்கள் - 2

(போவோம்)

அனுபல்லவி

நாவாரப்பாடி யவன் நாமம் பரவியந்த

தேவாதி தேவன் கழல் சேவித்திடுவோம் இன்றே

(போவோம்)

சரணங்கள்

1. கையில் விசிறி கொண்டே காட்சியளிப்பான் அந்த

மெய்யன் பெயரைச் சொல்லி வெல்வோம் கவலைதன்னை

(போவோம்)

2. யோகி ராம்சுரத்குமாரென் றோதிப் பயன் பெறுவோம்

தேயும் வினைகள் யாவும் தேவன் பெயரைச் சொல்லி

(போவோம்)

3. தேங்காய்ச் சிரட்டை தாங்கும் தேவன் திருவடிகள்

பாங்காகச் சிந்தை செய்யின் பாவம் பறந்தே போகும்

(போவோம்)

4. சின்னக் குழந்தையெனச் சிரிக்கும் ஐயன் பெயரைச்

சொன்னால் பழவினைகள் தோற்றோடும் உண்மை யினி

(போவோம்)

5. காசி நகரின் வந்த கருணை வள்ளல் பெயரைப்

பேசி வழி நடப்போம் பெரியோர் சிறியோரெல்லாம்

(போவோம்)

6. பாலூட்டும் தாயுமவன் பாராட்டும் தந்தையவன்

தாலாட்டும் சேயுமவன் தானே இனி நமக்கு

(போவோம்)

7. அண்ணாமலையிலுறை அண்ணல் நமதிரண்டு
கண்ணாரக் காணும் வகை தன்னார் அருள்புரிவான்

(போவோம்)

8. கோபியர் இடை நடித்த கோபாலன் தானும் முன்னே
தாபத் துயர்துடைத்த தாசரதி தானும் இவன்

(போவோம்)

9. சூரன்தனைத் தடிந்த சுப்ரமண்யனும் இவனே
மாரன்தனை யெரித்த மாகேசனும் இவனே

(போவோம்)

10. மாதாவடிவில் வந்து மகிடாசுரனை வென்ற
நாதா எனப் பணிந்து நாவார வாழ்த்திடுவோம்

(போவோம்)

11. வெள்ளைக் கமலத்தின் மேவும் கலைமகளாம்
கொள்ளக் குறையாச் செல்வம் நல்கும் திருமகளாம்

(போவோம்)

12. மூவர்தமக்கும் முதலான முனைவன் என்றே
தேவர் வணங்கும் கழல் சேவித்திட விரும்பின்

(போவோம்)

13. நாமம் புகழ்ந்து சொல்லி நாளும் வழிநடப்பீர்
ராமசுரத் குமாரன் நல்கும் அருள் பெறவே

(போவோம்)

## Song 47: குரு தேவா தயை செய்தே

யோகி ராம்சுரத்குமாரா யோகி ராம்சுரத்குமாரா
யோகி ராம்சுரத்குமாரா ஜெய குரு ராயா> – 1

யோகி ராம்சுரத்குமாரா யோகி ராம்சுரத்குமாரா

குரு தேவா தயை செய்தே உனதாய் என்னை ஆக்கிக் கொள்வாய் - 2
நான் சரணடைந்தேன் உன்னை உன் திருவடியில் இடம்தா ……
குரு தேவா தயை செய்தே உனதாய் என்னை ஆக்கிக் கொள்வாய்
யோகி ராம்சுரத்குமாரா யோகி ராம்சுரத்குமாரா

1) கருணாநிதி உன் நாமம், கருணை நீ காட்டிடுவாய் - 2
உறங்கிடும் பாக்யங்களை விழித்திடச் செய் நாதா - 1
அலைவுறும் என் படகை கரை சேர்த்திடவே செய்வாய்

குரு தேவா தயை செய்தே உனதாய் என்னை ஆக்கிக் கொள்வாய்
யோகி ராம்சுரத்குமாரா யோகி ராம்சுரத்குமாரா

2) ஆனந்த ஸாகரம் நீ, அபலைக்குத் துணைவன் நீ, - 2
இந்த உடலினில் உறைகின்றாய், என் உயிரினும் மேலானாய் - 1
நிதம் ஜபம் செய்கின்றேன் உன் இதயத்தே மறவாதே

குரு தேவா தயை செய்தே உனதாய் என்னை ஆக்கிக் கொள்வாய்
யோகி ராம்சுரத்குமாரா யோகி ராம்சுரத்குமாரா

3) நான் கபடனும், பாபியுமே, எதுவாயினும் உனதாவேன் - 2
வீடு வாசலைத் துறந்துவிட்டேன், இந்த வாழ்க்கையில் தனியானேன்
துன்பத்தில் அடிபட்டேன், என் துயர்களைக் களைந்திடுவாய்

குரு தேவா தயை செய்தே உனதாய் என்னை ஆக்கிக் கொள்வாய்
யோகி ராம்சுரத்குமாரா யோகி ராம்சுரத்குமாரா

4) யாவர்க்கும் தொண்டனானேன், உன் திருவடிச் சீடனானேன் - 2

எனை நாதா நீ மறவாதே, இவ்வுலகில் தனியானேன்
உன் வாயிலை பூஜிப்பேன், என் தோஷங்கள் களைந்திடுவாய்.

குரு தேவா தயை செய்தே உனதாய் என்னை ஆக்கிக் கொள்வாய்
நான் சரணடைந்தேன் உன்னை உன் திருவடியில் இடம்தா

குரு தேவா தயை செய்தே உனதாய் என்னை ஆக்கிக் கொள்வாய்
யோகி ராம்சுரத்குமாரா யோகி ராம்சுரத்குமாரா - 3

## Song 48: ராம நாம ஜபம் செய்யும்

யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்
யோகி ராம்சுரத்குமார் ஜயகுருராய> - 2

ராம நாம ஜபம் செய்யும் யோகியாம் அவன்
ராம நாம இன்பம் துய்க்கும் ஞானியாம் அவன் -
மெய் ஞானியாம் அவன்> - 2
ஸ்ரீ ராமா ஜய ராமா ஜய ஜய ராமா
ஸ்ரீ ராமா ஜய ராமா ஜய ஜய ராமா என்று (ராம நாம)

பாமரன் போல் வேடம் பூண்ட
பரமனாம் அவன்
பாமரர் தம் துன்பம் நீக்கும் பெரியோன்

அவன் - பரிவு மிக்கவன்> - 2

ஸ்ரீ ராமா ஜய ராமா ஜய ஜய ராமா
ஸ்ரீ ராமா ஜய ராமா ஜய ஜய ராமா என்று

ராம நாம ஜபம் செய்யும் யோகியாம் அவன்
ராம நாம இன்பம் துய்க்கும் ஞானியாம் அவன் -
மெய் ஞானியாம் அவன்

அருணையம் பதியினிலே அரசாள்பவன்
தன்னை அண்டி வந்த
அடியவர்க்கே துணையுமானவன்
உயிர் துணையுமானவன்> - 2

ஸ்ரீ ராமா ஜய ராமா ஜய ஜய ராமா
ஸ்ரீ ராமா ஜய ராமா ஜய ஜய ராமா என்று

ராம நாம ஜபம் செய்யும் யோகியாம் அவன்

ராம நாம இன்பம் துய்க்கும் ஞானியாம் அவன் -

மெய் ஞானியாம் அவன்

பக்தியில் சிறந்தோன் ஞான

அமுதம் உண்டவன்

யோகி ராம்சுரத்குமாரன் பதம் பணிவோமே

பதம் என்னும் பணிவோமே> -2

ஸ்ரீ ராமா ஜய ராமா ஜய ஜய ராமா

ஸ்ரீ ராமா ஜய ராமா ஜய ஜய ராமா என்று

ராம நாம ஜபம் செய்யும் யோகியாம் அவன்

ராம நாம இன்பம் துய்க்கும் ஞானியாம் அவன் -

மெய் ஞானியாம் அவன்

ஸ்ரீ ராமா ஜய ராமா ஜய ஜய ராமா

ஸ்ரீ ராமா ஜய ராமா ஜய ஜய ராமா> - 2

ஜய ஜய ராமா – 2

## Song 49: யோகிராம் தியாகிராம் ♫

யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்

யோகி ராம்சுரத்குமார் ஜெய குரு ராயா> - 2

யோகி ராம்சுரத்குமார் ஜெய குரு ராயா

யோகிராம் தியாகிராம் பாதை காட்டும் ஜோதியாம்

விசிறி ஓடு சிரட்டை கொண்டு வினைகள் தீர்க்க வந்த ராம்> - 2

யோகி ராம்சுரத்குமார் என்றழைத்த போதிலே

எம்மை காக்க விரையும் ராம் எங்கள் அன்பு யோகிராம்> - 2

இருளை நீக்கி அருளும் ராம் ஏற்றம் தந்து ஆளும் ராம் - 2

யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்
யோகி ராம்சுரத்குமார் ஜெய குரு ராயா> - 2

யோகி ராம்சுரத்குமார் ஜெய குரு ராயா – 2

## Song 50: எங்கல் இறைவா ♫

எங்கள் இறைவா ஆனந்த ரூபா ஞானம் உன்னிடம் வேண்டினோம்
விரைவில் எல்லா துற்குணங்களும் எம்மை நீங்க வேண்டினோம்
உன் அன்பு ஒன்றே வேண்டினோம்

உந்தன் பாதம் சரணடைந்தோம் உண்மை அடியவர் ஆக்குவாய்
தூய வாழ்வேனும் வீர நோன்பினைக்காக எம்மை வாழ்த்துவாய் (எங்கள்)

பகையில் மற்றவர் தீமை செய்யணும் மறந்தும் கூட நாங்கள் செய்யோம்
பொய்மை நீக்கி உண்மைக்காக உந்தன் உறவை நாடினோம் (எங்கள்)

பிரேமையுடன் உன் பக்தர்களுக்கு தினமும் சேவை செய்ய வேண்டும்
திறமையுடன் அதை செய்ய வேண்டும் திவ்ய வாழ்வு வாழ வேண்டும்
உன் திருவடி புகழ் பாட வேண்டும் (எங்கள்)

## Song 51: மோனம் அசைந்தது ♬

யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்
யோகி ராம்சுரத்குமார் ஜய குருராயா

மோனம் அசைந்தது நாதம் இசைந்தது
ஓம் எனும் ப்ரணவம் யோகி உரு எடுத்தது
வேழ முகத்துடன் விக்னங்கள் தீர்த்தது
வினைகளைப் போக்கவே விசிறியை எடுத்தது

வீணிடர் களைந்தே வெற்றியைத் தந்தது
கருணாமூர்த்தி கணபதி ராயா
யோகி ராம்சுரத்குமார் ஜய குரு ராயா
யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்
யோகி ராம்சுரத்குமார் யோக வினாயகா

கள்ளமில்லா உள்ளத்துடன் கை தொழுதாலும்
கயவர் பதிதர் கடிந்துரைத்தாலும்
ஒன்றாய் அருளும் அற்புத குருவே
உன் நாமம் தந்த உத்தம குருவே

உன் நாமம் தந்த உத்தம குருவே
கருணாமூர்த்தி கணபதி ராயா
யோகி ராம்சுரத்குமார் ஜய குரு ராயா
யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்
யோகி ராம்சுரத்குமார் யோக வினாயகா

பிறவித்தளையில் பெருந்துயர் கொண்டு
அலையும் மாந்தர்க்கு அமைதி தந்து
பிறப்பிறப்பில்லா பேரின்பம் காட்டும்
பெரிய பொருளே பெருநிலை அருளே

பெரிய பொருளே பெருநிலை அருளே

கருணாமூர்த்தி கணபதி ராயா

யோகி ராம்சுரத்குமார் ஜய குரு ராயா

[யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்

யோகி ராம்சுரத்குமார் பெருநிலை அருளே] x 2

## Song 52: ராம்சுரத் குமார்எனும் ♫

ராம்சுரத் குமார்எனும் பேராளர் - பெரும்
ராசராய் யோகியாய் அருள்கின்றார்] x 2
ஆம்வரம் எண்ணில கேட்டாலும் - அவர்
அன்புடன் நமக்கெலாம் தருகின்றார்

மும்மையும் உணர்ந்த முனிவரவர் - சுடர்
ஒளிமுகம் கண்டதும் வினையோடும்
நம்மையும் அவர்போல் கடவுளிடம் - மிக
நண்ணிச் செய்திடும் தயவாளர்

அருணையில் ஒளியாய்த் திகழ்கின்றார் - உயர்
அற்புதம் செய்துளம் மகிழ்கின்றார்
கருணையே வடிவாய் வாழ்கின்றார் - இறைக்
காட்சியில் அடிக்கடி ஆழ்கின்றார்

யாசகன் யான்என மொழிகின்றார் - பலர்
யாசிக்கும் நிலையினில் இருக்கின்றார்
பேசரும் கடவுளின் குழந்தையென - இவர்
பேசிடும் பொழுதெலாம் உணர்கின்றோம்

வில்வேல் வாளதை வேண்டாமல் - ஒரு
விசிறியால் வினைகளைத் தாண்டுகிறார்
பல்கால் பயின்றிடும் ஞானத்தினை - கண்
பார்வையால் பெற்றிடச் செய்கின்றார்

மனத்திருள் போக்கிடும் மகத்துவரின் - பொன்
மலரடி வணங்கிடில் உய்ந்திடலாம்
நினைத்தவை முடித்திடும் நிலைகண்டு - நம்
நெஞ்சகம் அடைக்கலம் கொண்டிடலாம்.

ராம்சுரத் குமார்எனும் பேராளர் - பெரும்
ராசராய் யோகியாய் அருள்கின்றார்

மனத்திருள் போக்கிடும் மகத்துவரின் - பொன்
மலரடி வணங்கிடில் உய்ந்திடலாம்
நினைத்தவை முடித்திடும் நிலைகண்டு - நம்
நெஞ்சகம் அடைக்கலம் கொண்டிடலாம்.

ராம்சுரத் குமார்எனும் பேராளர் - பெரும்
ராசராய் யோகியாய் அருள்கின்றார்
ஆம்வரம் எண்ணில கேட்டாலும் - அவர்
அன்புடன் நமக்கெலாம் தருகின்றார்
ராம்சுரத் குமார்எனும் பேராளர் - பெரும்
ராசராய் யோகியாய் அருள்கின்றார்

## Song 53: யோகிராம் சுரத்குமரா ஐயனே ♫

யோகிராம் சுரத்குமரா - ஐயனே

உன்னை நான் கண்டுகொண்டேன்

யோகிராம் சுரத்குமரா - ஐயனே

உன்னை நான் சரணடைந்தேன்

1) யோகிராம் சுரத்குமரா - ஐயனே

உன்னை நான் கண்டுகொண்டேன்

உன்னையே கண்ட கண்கள் ஐயனே

வேறொன்றில் திளைப்பதுண்டோ

யோகிராம் சுரத்குமரா - ஐயனே

உன்னை நான் சரணடைந்தேன்

ஆகஎனக் கொன்றும் ஐயனே

அடைந்திடத் தேவையில்லை.

2) அன்பினைக் கேட்கவில்லை - ஐயனே

அருளையும் கேட்கவில்லை

பொன்னைநான் கேட்கவில்லை - ஐயனே

பொருளிலும் நாட்டமில்லை

என்னை நான் கேட்கவில்லை ஐயனே

ஏற்றங்கள் வேண்டவில்லை

உன்னைநான் கண்டுகொண்டேன் ஐயனே

உருகியே எனையிழந்தேன்

யோகிராம் சுரத்குமரா - ஐயனே
உன்னை நான் சரணடைந்தேன்

ஆகஎனக் கொன்றும் ஐயனே

அடைந்திடத் தேவையில்லை.

3) ஓடியே வந்துவிட்டேன் ஐயனே
ஒன்றுமே தோன்றவில்லை
நாடிய சுற்றமுடன் ஐயனே
நட்பெலாம் நீயானாய்
தேடிக் கொண்டேன் உன்னையே ஐயனே
தேவையோ பிறசெல்வங்கள்!
ஓடிடும் நாட்களெல்லாம் ஐயனே
ஓடிடும் உன் பெயரால்!

யோகிராம் சுரத்குமரா - ஐயனே
உன்னை நான் சரணடைந்தேன்
ஆகஎனக் கொன்றும் ஐயனே
அடைந்திடத் தேவையில்லை.

4) மண்ணினில் கால்பதித்தேன் ஐயனே
மண்ணெல்லாம் நீயானாய்
விண்ணினை அகன்று கண்டேன் - ஐயனே
விண்ணெல்லாம் பரந்து நின்றாய்
விண்ணிடை சுடர்களோடு - ஐயனே
சூரிய சந்திரர் நீ
கண்ணில் படுவதெல்லாம் - ஐயனே
நீயாக நின்றாயப்பா

யோகிராம் சுரத்குமரா - ஐயனே
உன்னை நான் சரணடைந்தேன்
ஆகஎனக் கொன்றும் ஐயனே
அடைந்திடத் தேவையில்லை.

5) வேத முதலானாய் - ஐயனே

வேதத்தின் பொருளுமானாய்
நாதமாய் ஒலிப்பவனே ஐயனே
நாதத்தின் மூலவனே
சோதியாய் நிற்பவனே ஐயனே
சொக்கினேன் உன்னழகில்
தீதுடன் நன்மையும் நீ ஐயனே
நீயன்றி ஒன்றும் காணேன்!

யோகிராம் சுரத்குமரா - ஐயனே
உன்னை நான் சரணடைந்தேன்
ஆகஎனக் கொன்றும் ஐயனே
அடைந்திடத் தேவையில்லை.

6) காட்டு மலர்களிலே ஐயனே
கண்டேன்நான் உன் அழகை
தீட்டிய ஓவியத்தில் ஐயனே
ஜீவனாய் மிளிர்பவனே
பாட்டுக்குள்ளே பண்ணாய் ஐயனே
பரிமளித்திருப்பவனே
ஏட்டுக் கவிதைக்குள்ளே நயமாய்
இழைந்தென்னுள் வந்தவனே

யோகிராம் சுரத்குமரா - ஐயனே
உன்னை நான் சரணடைந்தேன்
ஆகஎனக் கொன்றும் ஐயனே
அடைந்திடத் தேவையில்லை.

7) கண்ணனாய் நின்றவனே - என்றன்
கண்ணைத் திறந்தவனே!

கீதையைத் தந்தவனே இதய

கீதமாய் ஒலிப்பவனே!

எண்ணத்தில் நின்றவனே எந்தன்

ராமனாய் ஒளிர்பவனே

திண்ணமாய் உன்னையன்றி - எனக்கு

வேறேதும் கதியுமில்லை x 2

யோகிராம் சுரத்குமரா - ஐயனே

உன்னை நான் சரணடைந்தேன்

ஆகளனக் கொன்றும் ஐயனே

அடைந்திடத் தேவையில்லை

## Song 54: அருணை யோகியின் ♫

யோகிராம் சுரத்குமார் யோகிராம் சுரத்குமார்

யோகிராம் சுரத்குமார் ஜெயகுருராயா x 4

அருணை யோகியின் உபதேச மந்த்ரம்
அகிலம் பெற்ற புதியதோர் மந்த்ரம்

அன்பர்கள் தினமும் ஜெபித்திடும் மந்த்ரம்

யோகி ராம்சுரத்குமார் தாரக மந்த்ரம்

ஐந்தெழுத்தில் பஞ்சாட்சர மந்த்ரம்

ஆறெழுத்தில் திருமுருகனின் மந்த்ரம்

ஈறைந்தெழுத்தில் யோகியின் மந்த்ரம்

யோகி ராம்சுரத்குமார் தாரக மந்த்ரம்

யோகிராம் சுரத்குமார் யோகிராம் சுரத்குமார்

யோகிராம் சுரத்குமார் ஜெயகுருராயா x 4

ராம நாமத்தில் ஸ்ரீராம மந்த்ரம்

ஓம்எனும் எழுத்தில் பிரணவ மந்த்ரம்

யோகியின் நாமம் சிவன்தந்த மந்த்ரம்

யோகி ராம்சுரத்குமார் தாரக மந்த்ரம்

ஈர்த்தாட் கொள்ளும் ஈசனின் மந்த்ரம்

ஈதலில் உயர்ந்த உத்தமனின் மந்த்ரம்

ஈடில் ஞானம் அளித்திடும் மந்த்ரம்

யோகி ராம்சுரத்குமார் தாரக மந்த்ரம்

யோகிராம் சுரத்குமார் யோகிராம் சுரத்குமார்

யோகிராம் சுரத்குமார் ஜெயகுருராயா x 4

வினைகள் தீர்த்திடும் வியத்தகு மந்த்ரம்

விசிறி சிரட்டை உடையோனின் மந்த்ரம்

வீசும் காற்றிலும் கலந்த திரு மந்த்ரம்

யோகி ராம்சுரத்குமார் தாரக மந்த்ரம்

சமயங்கள் கடந்த சன்மார்க்க மந்த்ரம்

அறவழி காட்டிடும் அண்ணலின் மந்த்ரம்

பிற நாட்டினரும் ஜபித்திடும் மந்த்ரம்

யோகி ராம்சுரத்குமார் தாரக மந்த்ரம்

யோகிராம் சுரத்குமார் யோகிராம் சுரத்குமார்
யோகிராம் சுரத்குமார் ஜெயகுருராயா x 4

ஆசையை அகற்றிடும் அரியதோர் மந்த்ரம்
ஆணவம் அழித்திடும் ஆற்றல் மிகு மந்த்ரம்

ஆனந்த வெள்ளத்தில் அழுத்திடும் மந்த்ரம்

யோகி ராம்சுரத்குமார் தாரக மந்த்ரம்

உண்மை நெறியில் நடத்திடும் மந்த்ரம்

உள்ளத்துள் ஒளி ஏற்றிடும் மந்த்ரம்

உள்ளத்துள் இறைவனை உணர்த்திடும் மந்த்ரம்

யோகி ராம்சுரத்குமார் தாரக மந்த்ரம்

யோகிராம் சுரத்குமார் யோகிராம் சுரத்குமார்

யோகிராம் சுரத்குமார் ஜெயகுருராயா x 4

நெஞ்சில் நீங்கா நிமலனின் மந்த்ரம்

நெஞ்சில் என்றும் ஒலித்திடும் மந்த்ரம்

நெஞ்சம் உருக ஓதிடும் மந்த்ரம்

யோகி ராம்சுரத்குமார் தாரக மந்த்ரம்

செம்மை நலமளிக்கும் சீர்மிகு மந்த்ரம்

இம்மைக்கும் மறுமைக்கும் துணைவரும் மந்த்ரம்
மும்மை மலமறுக்கும் மூல மந்த்ரம்
யோகி ராம்சுரத்குமார் தாரக மந்த்ரம்

யோகிராம் சுரத்குமார் யோகிராம் சுரத்குமார்
யோகிராம் சுரத்குமார் ஜெயகுருராயா x 4

முன்வினை விளைவை குறைத்திடும் மந்த்ரம்
பின்வினை நீங்க உதவிடும் மந்த்ரம்
பிறவிப்பிணி தீர்க்கும் புனித மந்த்ரம்
யோகி ராம்சுரத்குமார் தாரக மந்த்ரம்

யோகியவன் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கி
சிந்தை மகிழ அவன் நாமம் சொல்லி
பெறுவோம் இந்தப் பிறவியின் பயனை

யோகிராம் சுரத்குமார் யோகிராம் சுரத்குமார்
யோகிராம் சுரத்குமார் ஜெயகுருராயா x 4

## Song 55: சிவசிவ என ஓதும் ♬

சிவசிவ என ஓதும் தேவன் - இவன்
தேவனைக் காட்டும் குமரனிவன்
புன்னை மர நிழலினிலே - உலகில்
புண்ணியம் ஓங்க அமர்ந்தவனாம்
எவ்வுயிரும் தன்னுயிராக
எண்ணும் பேரரு ளாளன் இவன்
[ராம ராம ஜெய ராம என்றிடும்
யோகி ராம்சுரத் குமரனிவன்] x 2

கலகல எனநகை ஒலிஎழுப்பிக்
கண்டவர் வியந்திடும் தேவனிவன்
மடமட எனநடை நடந்தண்ணா
மலைஎனக் கூறும் மதலைஇவன்
குருகுரு எனவே போற்றிடவே உலகின்
குருவாய் நின்ற குமரனிவன்
[ராம ராம ஜெய ராம என்றிடும்
யோகி ராம்சுரத் குமரனிவன்] x 2

கதியதை வேண்டும் மாந்தருக்குத் - தன்
கருணையை அருளும் புண்ணியனே
காட்டிடும் ஏழ்மையும் கண்டிடும் பரிவும்
காண்பவர் எல்லாம் - உன் - காலடியே
குழந்தையாய் நின்ற குமர னையா
குறையுள்ளோருக்குப் பித்தனையா
[ராம ராம ஜெய ராம என்றிடும்

யோகி ராம்சுரத் குமரனிவன்]  x 2

அண்டிடும் அடியவர் உடற்பசிக்கு - உணவை
அன்புடன் தந்திடும் தாயாவாய்
அகத்தின் இருளைப் போக்கிடவே - உந்தன்
அருள்ஒளி தந்து சேயாவாய்
வந்தவர்க் கெல்லாம் வாக்கருளி - அவர்
வணங்கும் தெய்வ ஒளியாவாய்
[ராம ராம ஜெய ராம என்றிடும்
யோகி ராம்சுரத் குமரனிவன்]  x 2

## Song 56: எந்தையே வந்து நீ ♫

யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்

யோகி ராம்சுரத்குமார் ஜெயகுரு ராயா x 3

1) எந்தையே வந்து நீ | எந்தனை வலியவே | விந்தையாய் ஆண்டு கொண்டாய் ||

முந்தைத்தவம் இன்றி | உந்தனை அடைய | இக்கடையறகுக் கை கூடுமோ? ||

அந்தன் நானாகாது | என் கண்தந்த தெய்வம் நீ | கண்கண்ட கடவுளன்றோ? ||

எந்தன் குல தெய்வமாம் | கந்தன் நீயே எனக் | கண்ட பின் உனை விடுவனோ! ||

மந்தமதியால் வாழ்வில் | பந்தம் பெருக்கிப் | பல பாவம் புரிந்த பதிதன் ||

நொந்து வந்து அண்டினேன் | கைவிடாது என்னை நீ | காப்பதுன் கடன் ஐயனே! ||

அந்தரத்து அமரரும் | அறியொணா மகிமையுள | அருணையம் பதியின் வாழ்வே! ||

அன்பர் கலி தீர்க்கவே |வந்ததோர் யோகி | ராம்சுரத்குமார் என்ற குருவே! (2) ||

யோகி ராம்சுரத்குமார் என்ற குருவே!

2) பிள்ளை பல பெற்ற தாய் | பிரியம் அவர் பாலின்றி | பிரிதொன்றும் எண்ணுவாளோ? ||

நொள்ளையும் நொண்டியும் | கள்ளமே ஆனாலும் | தள்ளுமோ தாயும் உந்தன் ||

பிள்ளைகளில் நாயினேன் | நல்லவனல்லே னெனினும் | தாயில்லாச் சேயல்லவே ||

கொள்ளை நோய், கொடிய வினை | சூழினும் பாரினில் | தாங்குவது தாயின்றி யார்! ||

எள்ளளவும் என் கதறல் | அகில உலக அன்னை உன் | செவியில் சேரவில்லையோ? ||

பிள்ளை மனம் கல் பெற்ற | தாய் மனம் பித்தென்னும் | மாற்றத்தை மாற்றி விடவோ? ||

வள்ளி காந்தன்  பக்த | அருணகிரியைக் காத்த | அருணையம் பதியின் வாழ்வே ||

அன்பர் கலி தீர்க்கவே |வந்ததோர் யோகி | ராம்சுரத்குமார் என்ற குருவே! (2) ||

யோகி ராம்சுரத்குமார் என்ற குருவே!

3) பாயில் படுக்காது நான்  | நோயுற்றுழலாதெ னைக் | காத்துவரும் காருண்யனே  ||

தீவினையொன்றின்று | நோயென்று பெயர் கொண்டு | என்னைத் தாக்கி வாட்டி வருதே! ||

தீயதோர் சக்தி | இதன் மாயம் அறிந்திலேன் | தாங்கும் திறம் ஒன்றிலேன் ||

தீயதேயாயினும் | நோயதேயாயினும் | நின் பார்வை முன் நிற்குமோ? ||

தாயினும் தயவுடன் | தீனரைக் காத்துவரும் | தண்ணளித் தெய்வமே இப்||

பாவிக்கு இரங்கி | உன் பார்வையைக் காட்டிப் | பிணியை நீ தீர்க்கொண்ணாதோ ||

தூயவர் கூடிடும் | தேசுரு திருத்தலம் | அருணையம் பதியின் வாழ்வே||

அன்பர் கலி தீர்க்கவே |வந்ததோர் யோகி | ராம்சுரத்குமார் என்ற குருவே! (2) ||

யோகி ராம்சுரத்குமார் என்ற குருவே!

4) வெஞ்சமரில் அஞ்சாத | வேந்தரும் உன்னையே | வந்திக்க வந்து நிற்பர்||

வஞ்சக உளத்தவர் | கொஞ்சம் நின் அருகில் வர | அஞ்சுவதில் விந்தையேது ||

பஞ்சமா பாதகரும் | நெஞ்சார மாறி உனைத் | தஞ்ச மென்றடை வராயின்||

அஞ்சேல் என்றபயம்  | அளித்தவரை ஆட் கொள்ளும் |

அற்புதத் தெய்வம் நீயே! ||

செஞ்சுடர் வேலன் நீ  | பைஞ்சுடர் ராமன் நீ  | கஞ்ச மலர்க்கண்ணனும் நீ ||

சஞ்சலத்தோடுனைக் | கெஞ்சிடும் அகதிபால் | கொஞ்சம் இரங்க ஒணாதோ ||

நெஞ்சில் நினைக்கவே  | முக்தி தரும் மகிமையுள  | அருணையம் பதியின் வாழ்வே ||

அன்பர் கலி தீர்க்கவே |வந்ததோர் யோகி | ராம்சுரத்குமார் என்ற குருவே! (2) ||

யோகி ராம்சுரத்குமார் என்ற குருவே!

5) பக்தர்பால் பரிவுற்றுப்  | பல நோய்கள் தீர்த்தவரைப் | பரிசுத்தமாக்கும் பரனே ||

புத்துயிர் பெற்றவர் | பக்திப் பெருக்கால் நின் | முக்திக்கு முயலாததேன் ||

புத்தியின் குறைவிதோ | சக்தியில்லாமையோ | தத்தம் வினையின் பயனோ ||

கர்த்தனே நின் தனிக் | கருணை இல்லார்க்கும் இப் | பிறவிப் பயன் எய்துமோ ||

அத்தனே! ஆதியே! | அன்பர் ஸகாயனே! | உத்தமர்கள் தம் நேயனே! ||

நித்தியப் பொருள் உனை | நித்தம் நினைக்க எம் | புத்தியை இயக்குவிப்பாய் ||

சித்தரும், முக்தரும் | பக்தரும் நிறைந்த திரு | அருணையம் பதியின் வாழ்வே ||

அன்பர் கலி தீர்க்கவே |வந்ததோர் யோகி | ராம்சுரத்குமார் என்ற குருவே! (2) ||

யோகி ராம்சுரத்குமார் என்ற குருவே!

[யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்

யோகி ராம்சுரத்குமார் ஜெயகுரு ராயா] x 3

## Song 57: நமோ நமோ ♫

நமோ நமோ ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்
ஜய ஜனரஞ்சன ராம்சுரத்குமார்

நமோ நமோ ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்
ஜய ஜகத்வந்த்யா ராம்சுரத்குமார்

நமோ நமோ ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்
ஜய ஜகத்ரக்ஷகா ராம்சுரத்குமார்

நமோ நமோ ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்
ஜெய ஜகதானந்தா ராம்சுரத்குமார்

நமோ நமோ ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்
ஜய ஜகதம்பா ராம்சுரத்குமார்

நமோ நமோ ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்
ஜய ஷாரதாமா ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்
ஜய ஜகஜ்ஜனனி ராம்சுரத்குமார்

நமோ நமோ ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்
ஜகதோத்தாரா ராம்சுரத்குமார்

நமோ நமோ ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார்
ஜ்யோதி ராம்சுரத்குமார் த்யாகி ராம்சுரத்குமார்

[ஜய ஜய ஜய ஜய ராம்சுரத்குமார்] x 4

## Song 58: ஜோதிர் மயமாய் ♫

[யோகிராம் சுரத்குமார் யோகிராம் சுரத்குமார்] x 4
ஜோதிர் மயமாய் விளங்கும் யோகிராம் சுரத்குமார்
சுடர் வடிவாய் காட்சி தரும் யோகிராம் சுரத்குமார்
ஆதி அண்ணாமலையில் வளர் யோகிராம் சுரத்குமார்
ஆண்டவனே ஆண்டருள்வாய் யோகிராம் சுரத்குமார் (யோகி)

உலகம் வாழ வந்திருக்கும் யோகிராம் சுரத்குமார்
உண்மைப் பொருள் நீயல்லவோ யோகிராம் சுரத்குமார்
உற்ற துணை நீதானே யோகிராம் சுரத்குமார்
உனக்கு நானே அர்ப்பணமே யோகிராம் சுரத்குமார் (யோகி)

எண்ணுதற்கு அரியவனே யோகிராம் சுரத்குமார்
எழுந்தருளி காத்திடவா யோகிராம் சுரத்குமார்
எழில் வடிவாய் காட்சி தரும் யோகிராம் சுரத்குமார்
எல்லோரும் கொண்டாடும் யோகிராம் சுரத்குமார் (யோகி)

அரச போகம் தந்திடுவாய் யோகிராம் சுரத்குமார்
அற வாழ்வை வகுத்திடுவாய் யோகிராம் சுரத்குமார்
அடைக்கலமே அடைந்தோம் உனை யோகிராம் சுரத்குமார்
அபயக்கரம் காத்திடுவாய் யோகிராம் சுரத்குமார் (யோகி)

நிலையான அருட் செல்வம் யோகிராம் சுரத்குமார்
நினைவெல்லாம் உன்னிடமே யோகிராம் சுரத்குமார்
மங்களமாய் நிறைந்தவனே யோகிராம் சுரத்குமார்
மாண்புடனே வாழ்ந்திடுவோம் யோகிராம் சுரத்குமார் (யோகி)

## Song 59: அண்ணாமலையில் ஆட்சி ♫

யோகிராம் சுரத்குமார் யோகிராம் சுரத்குமார் யோகிராம் சுரதகுமார்] x 2
யோகிராம் சுரதகுமார்

அண்ணாமலையில் ஆட்சி செலுத்திடும் யோகி ராம்சுரதகுமார் – அவர்
நாமத்தை சொல்வோம் அருளினைப் பெறுவோம்
யோகிராம் சுரதகுமார் யோகிராம் சுரதகுமார்

நாம ஜபம் அவர் நாம ஜபம்
நல்கிடும் எதிலும் ராம ஜயம்
நாம ஜபம் அவர் நாம ஜபம்
ராம்ஜி நாமமே ஆத்ம ஜபம்

ஜெய் ஜெய் ராம்ஜி! ஜெய் ஜெய் ராம்ஜி!
ஜெய் ஜெய் ராம்ஜி! ஜெய் ஜெய் ராம்ஜி!
யோகி ராம்சுரதகுமார் யோகி ராம்சுரதகுமார்

அம்மாதவன் மஹிமையை மனதினில் நிறுத்தி மகிழ்வுடன் சொல்வோம்
நாம ஜபம்
அன்னவர் அருளை வியந்து போற்றி அனைவரும் சொல்வோம் நாம ஜபம்
அகிலம் முழுவதும் அன்பால் இணைய ஆசி கூறும் நாம ஜபம்

நாம ஜபம் அவர் நாம ஜபம்
நம்பினவர்க்கு ஏது பயம்
நாம ஜபம் அவர் நாம ஜபம்
நாளும் செய்வோம் நாம ஜபம்

ஜெய் ஜெய் ராம்ஜி! ஜெய் ஜெய் ராம்ஜி!
ஜெய் ஜெய் ராம்ஜி! ஜெய் ஜெய் ராம்ஜி!
யோகி ராம்சுரதகுமார் யோகி ராம்சுரதகுமார்

ராம ராஜ்ஜியம் தழைத்திட உழைக்கும் யோகி ராம்சுரதகுமார் - நிலை
நாட்டிய உலகில் நல்கிய நாமம் யோகி ராம்சுரதகுமார்
அகிலம் முழுதும் அன்பால் இணைய ஆசி கூறும் நாம ஜபம்

நாம ஜபம் அவர் நாம ஜபம்
நல்வினை சேர்க்கும் நாம ஜபம்
நாம ஜபம் அவர் நாம ஜபம்
நாநிலம் காக்கும் நாம ஜபம்

ஜெய் ஜெய் ராம்ஜி! ஜெய் ஜெய் ராம்ஜி!
ஜெய் ஜெய் ராம்ஜி! ஜெய் ஜெய் ராம்ஜி!
யோகி ராம்சுரதகுமார் யோகி ராம்சுரதகுமார்

கற்பகத் தருவாய் கேட்டதை கொடுக்கும் யோகி ராம்சுரதகுமார்
அவர் அற்புத உருவாய் ஒளிரும் நாமம் யோகி ராம்சுரதகுமார்
அகிலம் முழுதும் அன்பால் இணைய ஆசி கூறும் நாம ஜபம்

நாம ஜபம் அவர் நாம ஜபம் - நம்
ஊழ்வினை எரிக்கும் நாம ஜபம்
நாம ஜபம் அவர் நாம ஜபம் - நம்
உள்ளொளி பெருக்கும் நாம ஜபம்

ஜெய் ஜெய் ராம்ஜி! ஜெய் ஜெய் ராம்ஜி!
ஜெய் ஜெய் ராம்ஜி! ஜெய் ஜெய் ராம்ஜி!

யோகி ராம்சுரதகுமார் யோகி ராம்சுரதகுமார்

பிணிகளைப் போக்க பிறவியை மாய்க்க பெரியோர் சொல்லும் நாம ஜபம்

மனதிருள் நீக்கி மங்கலம் சேர்க்க மாலையில் சொல்லும் நாம ஜபம் – ஜப மாலையில் சொல்லும் நாம ஜபம்

நலிவினைப் போக்க நலம் பல பெருக்க நாமும் சொல்வோம் நாம ஜபம்

ராம ஜபம் அவர் நாம ஜபம்

நாளும் சொல்வோம் நாம ஜபம்

நாம ஜபம் அவர் நாம ஜபம்

ராம்ஜி நாமமே ஆத்ம ஜெயம்

ஜெய் ஜெய் ராம்ஜி! ஜெய் ஜெய் ராம்ஜி!

ஜெய் ஜெய் ராம்ஜி! ஜெய் ஜெய் ராம்ஜி!

யோகி ராம்சுரதகுமார் யோகி ராம்சுரதகுமார்

யோகிராம் சுரத்குமார் யோகிராம் சுரத்குமார்

யோகிராம் சுரத்குமார் ஜெயகுருராயா

யோகிராம் சுரதகுமார் (3)

## Song 60: யோகீஷ்வரம் பவநாஷகம் ♫

[யோகிராம் சுரத்குமாரம் யோகிராம் சுரத்குமாரம்] x 2

1) யோகீஷ்வரம் பவநாஷகம் சத்பக்தி முக்தி பிரதாயகம் ।
சரணப்ரதம் கருணாகரம் கலி பாப தாப விநாசகம் ॥
2) கீதப்ரியம் ககனோபமம் புவனேஷ்வரம் பவ பஞ்ஜனம் ।
தர்ம ப்ரதம் புவி பாரஹும் கன கோர கர்வ நிவாரகம் ॥ (யோகி)

3) ராகவம் தாமோதரம் உன்மத்த வேஷதரம் ஹரம் ।
நாம ப்ரியம் பக்தேஷ்டதம் நிஜ போத ரூப ஸனாதனம் ॥
4) மந்தஸ்மிதம் ம்ருது பாஷிணம் ஜகதீஷ்வரம் குரு ரூபிணம் ।
ப்ரேம ப்ரதம் கதிதாயகம் ருத்ராக்ஷ மால்ய விபூஷணம் ॥ (யோகி)

5) ஸுந்தரம் ஸுமதிப்ரதம் பவரோக ஸோக விநாஷகம் ।
பாலகம் பரமேஷ்வரம் பரிபூர்ண ஞான திவாகரம் ॥
6) ரக்ஷகம் புவி போஷகம் ரமணீய சாரு களேவரம் ।
அச்சுதம் ஆனந்ததம் நிஜ பக்த சித்த விஹாரிணம் ॥ (யோகி)

7) தமஹரம் தனு கோமலம் பக்தானு ரக்த ஸ்வபாவினம் ।
தாரகம் த்ரய தாபஹும் துரிதாதசங்க நிபர்ஹணம் ॥
8) குலதைவதம் குசுமப்ரியம் புருஷோத்தமம் ஸத்யாம்ருதம் ।
ஸாஸ்வதம் ஸத்யப்ரியம் ஸ்ருதிஸேது பாலகம் ஈஸ்வரம் ॥ (யோகி)
9) மாதவம் மதனாந்தகம் உஷ்ணீஷினம் மதுமாரகம் ।
முரஹரம் மாயாவினம் ஸ்ரீ ராமக்ருஷ்ண ஸ்வரூபிணம் ॥
10) ரகுவரம் விஷ்வேஷ்வரம் பிக்ஷாடனேஷ மஹேஷ்வரம் ।
பரிவ்ராஜகம் ஜகஜ்ஜீவனம் திவ்யாத்ம தத்வ மகோசரம் ॥ (யோகி)
[யோகிராம் சுரத்குமாரம் யோகிராம் சுரத்குமாரம்] x 2

## Song 61: எங்கெங்கு பார்த்தாலும் ♫

அருணாசலசிவ அருணாசலசிவ

அருணாசலசிவ யோகி ராம்சுரத்குமார் x 2

எங்கெங்கு பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்

அங்கங்கு இருப்பது யோகி ராம்சுரத்குமார்

அல்லும் பகலும் அறிவாகி நிறைவார்க்கே

சொல்லும் பொருளும் தேவையோ மா ராம்சுரத்குமார்

(அருணா)

பார்க்கின் அண்டபிண்ட பரப்பனைத்தும் நின் செயலே

யோகி ராம்சுரத்குமார்

யார்க்கும் செயல் இலையே யோகி ராம்சுரத்குமார்

(அருணா)

பேரின்ப ஊற்றே பெரிய பொருளே

மன வலிவு தரும் மா பெருங்கடலே

களி நடம் புரியும் கண்ணா மணிவண்ணா

யோகி ராம்சுரத்குமார் மோஹன கண்ணா

(அருணா)

வேல்கொண்டு நம்மை காத்தருளும் குமரா

யோகி ராம்சுரத்குமார் எங்கள் பெருமானே

[கதிவேறில்லை - நின் திருவடி தவிர

தூசுக்கு தூசாகி சரணம் சரணம்] x 2

[அருணாசலசிவ அருணாசலசிவ

அருணாசலசிவ யோகி ராம்சுரத்குமார்] x 2

fast

[அருணாசலசிவ அருணாசலசிவ

அருணாசலசிவ யோகி ராம்சுரத்குமார்] x 4

அருணாசலசிவ அருணாசலசிவ அருணாசலசிவ யோகி ராம்சுரத்குமார் x 2

## Song 62: தெய்வத் திருவுருவே ♫

1) தெய்வத் திருவுருவே தேசத்தார் பொக்கிஷமே
மெய்யிற் கிருப்பிடமே மெலிந்தோர்க்குப் போக்கிடமே
உய்விற் கொருவழியே உத்தமர் தம் நற்கதியே
நைவுற் றுனையடைந்தேன் நல்குவாய் உன்னருளே

2) அண்ணா மலையுறையும் ஐயா உன்னை என்னிரு
கண்ணாரக் கண்டேன் களித்தேன் மனமிகவும்
நண்ணாமல் துன்பம் நலமே பெருகிடவும்
எந்நாளும் காப்பாய்எம் எய்ப்புக்கு வைப்பிடமே

3) ஏராம் சுரத்குமரா எப்போதும் உன்றனிரு
சீராம் திருப்பதமே சிந்தித் திருந்திடவும்
நேரான வாழ்வும் நிறைவான நெஞ்சகமும்
தாராய் குருவே என் தந்தாய் வழுத்துகின்றேன்

4) பாலே உனதுமொழி பண்ணே உன் புன்சிரிப்புக்
காலே எமதுகதி கண்ணே பொழியுமருள்
நூலே அறியும் எமை நோக்கால் திருத்தியினி
மேலே செல வருள்வாய் மேலோய் உனைத் துதித்தேன்

5) வந்தித்தே உன்றன் மலர்போல் திருவடியைச்
சிந்தித்தே என்றும் சிவனே என விருப்பார்
முந்தித்தாம் செய்த மொய்வினைகள் புன் கவலை
சிந்தித்தாம் செல்லும் சிரிராம் சுரத்குமாரா!

6) உன்னையொழிய எமக்குண்டோ கதியென்று
புன்னை மர நிழல் புத்தமுதே - எந்தன்
அன்னை எனவேநின் அன்பைப் பொழிந்திடுவாய்
நின்னைத் தவிர ஒரு நிழலுண்டோ பாரினிலே

7) ஐயா உனதுதிரு அடியே அடைந்து விட்டேன்
செய்யா தனவில்லை தீமை பழிபாவம்
எய்யாமற்றேடி இளைத்தேன் இரவுபகல்
மெய்யான உன்னையான் மேவினேன் காத்தருள்வாய்

8) [கண்ணே மணியேநற் கற்கண்டே தேனே!
பண்ணே தமிழ்ச்சுவையே பாட்டாய் மலர்ந்தவனே
விண்ணே இடிந்தெம்மேல் வீழ்ந்தாலும் காப்பாயிம்
மண்மேல் எமக்காக வாழ்வாய் வரமருள்வாய்] x 2

9) மையிட்ட கண்ணார் தம் மயக்கேதான் எங்களது
பொய்யிட்ட நெஞ்சையே பூரணமாய் ஆட்கொள்ளும்
கைவிட்டதனை உன் காலடியே பற்றிவிடச்
செய்திட்ட ருள்வாய் எம் சீராம் சுரத்குமரா!

10) கண்ணெதிரே நின்றால் என் கவலை ஒழியுதையா
சன்னதியை விட்டகன்றால் சஞ்சலங்கள் சூழுதையா
உன்னெதிரே இருந்தாலும் ஊரே போய்ச் சேர்ந்தாலும்
[நண்ணிடுவாய் எங்களது நடுநில்லா நெஞ்சகமே] x 2

## Song 63: யோகிராம சரணம் குருவே ♫

யோகிராம சுரத குமாரா

யோகிராம சுரத குமாரா

யோகிராம சுரத குமாரா

சரணம் சரணம் குருவே தேவா (யோகி...)

1) அன்பே அருளே குருவே திருவே

உன்பெயர் பாடி ஆடியே திரிவேன்

உன்னுடை நினைவில் என்னை மறப்பேன்

என்றும் உன்னில் நிலைத்திட அருளே (யோகி...)

2) வேங்கட நாதா அலர்மேல் அம்மா

ஏங்கிடும் என்னைத் தாங்கிடும் தாயே!

தாங்கரும் துன்பமும் இன்பமாய் மாற்றிடும்

நாங்கள் வணங்கிடும் நாயகனேஎம் (யோகி...)

3) கண்ணன் என்பேன் கருணை மிக்க

திண்ணன் அறத்துரு ராமனும் என்பேன்

எண்ண இனித்திடும் புத்தன் என்பேன்

நண்ணிட ஆட்கொளும் குருவாம் என்பேன் (யோகி...)

4) கண்டதும் கருத்தில் கனன்றிடும் துயரம்

துண்ணென மடிந்திட செய்திடும் தூயன்

விண்ணிடைத் தேவனைக் காணீர் வம்மின்

மண்ணிடைத் தேவ மனிதனாம் எங்கள் (யோகி...)

5) கையினில் விசிறியை அசைத்தே ஆட்டி
பொய்யை விலக்கிடும் புண்ணியன் என்பேன்
செய்யநல் கையினில் சிரட்டையை ஏந்தி
மெய்யாம் அமுதை வழங்குவான் எங்கள் (யோகி...)

6) தலையில் பாகையும் பரந்தநல் நெற்றி
விலையிலா அருளை வீசிடும் கண்கள்
மலையென நிமிர்ந்த மாண்புடை அவனே
சிலையெழில் தவழ்ந்திடும் சீரியன் எங்கள் (யோகி...)

7) உலகம் உயிர்த்திட உயிர்க்கும் மூக்கும்
பலமுடன் சிரித்திட சிவந்திடும் கன்னம்
கலகல சிரிப்பை சிந்தும் செவ்வாய்
நிலவெழில் தாடியும் மீசையும் இணைந்தோன் (யோகி...)

8) பாலும் பழமும் அன்புடன் அளித்து
ஆலென விரிந்த அருளில் அணைத்து
மாலெனக் காக்கும் மாண்புடைத் தொழிலை
சீலமுடன் செயும் சீரியன் எங்கள் (யோகி...)

9) நடையில் யானையின் பெருமிதம் இருக்கும்
உடையில் அரசரை விஞ்சிடும் உயர்ந்தோன்
தடைகளைத் தகர்த்தே வினைகளைப் போக்கி
இடையுள நமையெல்லாம் காத்திட வந்தோன் (யோகி...)

10) பைத்திய மென்றே தன்னைக் கூறி
வைத்தியம் செய்வான் நம்மன திற்கே!
நைந்திடத் தன்னைப் பாவியென் றழைத்தே
மைந்தரைக் காத்திடும் மனத்தினைக் கொண்டோன்! (யோகி...)

11) மந்திர மெதுவும் அவன்பால் இல்லை!
மந்திர மவனது சொற்கள் எல்லாம்!
சொந்தம் இல்லை! பந்தமும் இல்லை!
சொந்தம் உலகெலாம்! பந்தமும் அதுவே! (யோகி...)

12) கிழிந்த பாய்களும் கோணியும் கிடக்கும்
அழுக்குடை துணிகள் சிதறிக் கிடக்கும்
பழங்களும் பழைய காகிதக் குப்பைச்
சூழலில் ஞான துயில்செயும் வித்தகன் (யோகி...)

13) ஞான மிகுந்த கங்கை அவனே!
எனவே அவனிடம் குளித்தலும் இல்லை!
மோன மான தவப்பயன் அவனே!
எனவே தவப்புறத் தோற்றமும் இல்லை! (யோகி...)

14) காவியு மில்லை! கமண்டல மில்லை!
மேவிய நியதிகள் எதுவுமே இல்லை!
சாவெனும் பயமாம் பேதமை இல்லை!
காவிய நாயகன் அறப்பொருள் அவனே! (யோகி...)

15) ஆயிரம் நூல்கள் கற்றுப் பெற்றிடும்
ஆயிர மான அறிவும், ஞான
ஞாயிறு எங்கள் அருணை நாதன்
பொய்யகல் சிரிப்பில் பெறுவீர் வருவீர் (யோகி...)

16) நாளை என்ற கவலையும் இல்லை!
தோளில் கனத்திடும் சுமைகளும் இல்லை!
நாளை எதற்கு இன்றே வம்மின்
தாளை வணங்கி உய்வீர் எங்கள் (யோகி...)

## Song 64: ஜெய குரு ஓம் ♫

ஜெய குரு ஓம் ராம்சுரத் குமாரா - எங்கள்

தாமரைக் கண்ணா ஆடி ஆடி வாடா

உந்தன் திருப்பாதம் தேடி நாங்கள் - உந்தன்

திவ்ய நாமம் பாடிப் பாடி வந்தோம்

1) ராமதாசர் தாசனே மந்த்ராலய வாசனே

யோகிராம் சுரத்குமார்!

சின்மய ரூபனே காருண்ய சீலனே

யோகிராம் சுரத்குமார்!

ஓம்கார நாதமே ஓடி வாடா

ஆனந்த கீதமே ஆடி வாடா (ஜெய)

2) ராமனும் நீயே கிருஷ்ணனும் நீயே

யோகிராம் சுரத்குமார்

வேலவனும் நீயே சங்கரனும் நீயே

யோகிராம் சூரத்குமார்

காஞ்சி காமாட்சியுடன் ஓடி வாடா

மதுரை மீனாட்சியுடன் ஆடி வாடா

காஞ்சி காமாட்சியுடன் ஓடி வாடா

காசி விசாலாட்சியுடன் ஆடி வாடா (ஜெய)

3) காளிய நர்த்தனா ஆபத் பாந்தவா

கேசவா! ஹரே மாதவா!

பாப வினாசக அக்ஞான நாசனே

கேசவா! ஹரே மாதவா!

கீதாம்ருதமே ஓடி வாடா

ஹ்ருதயானந்தமே ஆடி வாடா! (ஜெய)

## Song 65: கோவிந்த கோபால ♫

கோவிந்த கோபால ஹரே ராம்சுரத்குமார்

கோவிந்த கோபால யோகி ராம்சுரத்குமார்

கோபால கோவிந்த ஹரே ராம்சுரத்குமார்

கோபால கோவிந்த யோகி ராம்சுரத்குமார்

1. சம்போ மஹேஷ்வர யோகி ராம்சுரத்குமார்

சம்போ மஹாதேவ யோகி ராம்சுரத்குமார் (கோவிந்த)

2. ஹரி நாராயண ஹரே ராம்சுரத்குமார்

பஜோ நாராயண ஹரே ராம்சுரத்குமார் (கோவிந்த)

3. தர்ம ஸ்தாபித ஹரே ராம்சுரத்குமார்

கர்ம விநாஷக ஹரே ராம்சுரத்குமார் (கோவிந்த)

4. பக்த ஜனப்ரிய யோகி ராம்சுரத்குமார்

பரமக்ருபாகர யோகி ராம்சுரத்குமார் (கோவிந்த)

5. பீதாம்பரதர ஹரே ராம்சுரத்குமார்

கஜசர்மாம் பரதர ஹரே ராம்சுரத்குமார் (கோவிந்த)

6. போதஸ்வரூபா யோகி ராம்சுரத்குமார்

போதானந்தா யோகி ராம்சுரத்குமார் (கோவிந்த)

7. நமஸ்தே நமஸ்தே யோகி ராம்சுரத்குமார்

ஜயது ஜயது யோகி ராம்சுரத்குமார் (கோவிந்த)

## Song 66: ஜயது ஜயது ♫

**நக்ஷத்ர மலர்மாலை**

ஜயது ஜயது ஜயது ஜயது

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

ஜயது ஜயது ஜயது ஜயது

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி

1. அருணையில் ஒரு அருட்குழந்தை

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

(அவரை) அனைத்துலகும் அடிவணங்கும்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி (ஜயது ஜயது)

2. ராம ராம ராம ராம

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

ராம நாமம் என்றும் முழங்கும்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி (ஜயது ஜயது)

3. ராம நாமம் போதித்து வரும்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

ராம நாம மயமே ஆனார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

4. அகில உலகின் அமைதி காக்கும்,

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

அன்பரை ஆபத்தில் காப்பார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

5. அரிய சக்தி அடக்கியுள்ளார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

அதை உரியவர்க்கே உகந்தளிப்பார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

6. அத்தன் ஒன்றே நித்யமென்பார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

பித்தனாய் நடிக்கும் ப்ரஹ்மம்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

7. ஆழங்காணற்கரிய ஞானி

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

ஆனந்த ரூபவஸ்து

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

8. இறை வழிதனை எளிதில் காட்டும்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

(நம்) குறைகளெல்லாம் போக்கிடுவார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

9. இல்லறத்தின் உயர்வு கூறும்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

(நம்மை) நல்லறத்தில் நிலைக்க வைப்பார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

10. ஔஷத மௌன அமுதளிக்கும்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

பவரோகம் தீர்க்கும் வைத்யர்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

11. கடமை எல்லாம் செய்யச் சொல்லும்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

(வாயில்) கடவுள் நாமம் ஜபிக்க சொல்வார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

12. கீதை காட்டும் பாதை காட்டும்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

பாபி மாட்டும் பரிவு காட்டும்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

13. குருவை மாற்றக் கூடாதென்பர்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

(தன்) குரு மொழியைக் கடைப்பிடிப்பார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

14. ஞானிகள்தம் புகழைப் பேணும்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

ஞானிகள் மொழி போற்றிடுவார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

15. தனக்கெதுவும் தேவையில்லா

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

(தன்) திருவடியால் அருள்சொரிவார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

16. நமக்கெனவே தவமியற்றும்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

(நம்) நாட்டின் நலத்தை காக்கும் தெய்வம்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

17. நாமம் சொல்வார் நாவில் வைகும்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

நினைத்த போதே நன்மை நல்கும்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

18. நோய்கள் கவலை நீங்கச் செய்வார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

(நம்பால்) தூய பக்தி தழைக்கச் செய்வார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

19. பக்தர் தம்மைப் பண்படுத்தும்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

பக்தர் சிலர்தம் பொருளும் ஏற்பார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

20. பக்தர்கள் தம் பாவம் போக்கும்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

(அவர்) முக்தி நிலையை அடையவைப்பார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

21. மெய்யன்பர் தம்மை உய்யவைக்கும்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

(அவர்) உய்யும்வரை உடனிருப்பார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

22. நல்ல பணிகளை ஊக்குவிப்பார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

நல்ல மனிதரை நெஞ்சில் வைப்பார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

23. யோகம் குறித்துப் பேசமாட்டார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

(ஆனால்) யோக சக்தி ஊட்டிவைப்பார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

24. வேதம் நம்மை காக்கும் என்பார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

வேதம் பேண வற்புறுத்தும்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

25. வேதம் உலகை காக்கும் என்பார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

வேதியர் தமை ஆதரிப்பார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

26. வீண் போகா வார்த்தையுள்ளார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

(அவர்) வாழ்த்தும் நலன்கள் வந்தேதீரும்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

27. தெய்வக் குழந்தையாகித் திகழும்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

(இவர்) வையகத்தை வாழவைப்பார்

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி, (ஜயது ஜயது)

ஜயது ஜயது ஜயது ஜயது

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி,

ஜயது ஜயது ஜயது ஜயது

ராம்சுரத்குமார யோகி, ராம்சுரத்குமார யோகி

## Song 67: ஸித்தி விநாயகா ♫

ஸித்தி விநாயகா விஷ்வா தாதா யோகி மா ராம்சுரத்குமார்
சாரதேஷ்வரி ஸர்வசக்திமயி யோகி மா ராம்சுரத்குமார்
வித்யா தாயினி விஷ்வபாலினி யோகி மா ராம்சுரத்குமார்
கருணாகடாக்ஷ வீக்ஷணி மாதே யோகி மா ராம்சுரத்குமார்

அருணாசலேஷ்வரி அசலஸனாதனி யோகி மா ராம்சுரத்குமார்
விஷ்வ க்ரீடாகேளி தரங்கிணி யோகி மா ராம்சுரத்குமார்
விஷ்வநாதேஷ்வரி கன்யாகுமாரி யோகி மா ராம்சுரத்குமார்
கருணாம்பிகே ஹே காத்யாயனிமா யோகி மா ராம்சுரத்குமார்

கல்மஷ நாஷினி கர்மஸ்வரூபிணி யோகி மா ராம்சுரத்குமார்
பதிதோத்தாரிணி பாவனசரிதே யோகி மா ராம்சுரத்குமார்

துர்கா லக்ஷ்மி விஜய ஸரஸ்வதி யோகி மா ராம்சுரத்குமார்
ஸூதாம விஹாரி கஜசர்மாம்பரி யோகி மா ராம்சுரத்குமார்

சரணம் சரணம் சரணம் சரணம் யோகி மா ராம்சுரத்குமார்
ஓம் ஓம் ஓம் ஓம் தவ பாத தூளி யோகி மா ராம்சுரத்குமார்

## Song 68: ஆஷ்ரித வத்ஸலா

ஆஷ்ரித வத்ஸலா யோகி ராம்சுரத்குமார்

ஆஷ்ரித ரக்ஷகா யோகி ராம்சுரத்குமார்

அனாத நாதா யோகி ராம்சுரத்குமார்

அபய தாதா யோகி ராம்சுரத்குமார்

அருணாசல ஸ்தித யோகி ராம்சுரத்குமார்

அருணாசலேஷ்வர யோகி ராம்சுரத்குமார்

ஜீர்ணாம்பரதரா யோகி ராம்சுரத்குமார்

ரஜ்ஜு கண்டாபரணா யோகி ராம்சுரத்குமார்

கபால ஹஸ்தா யோகி ராம்சுரத்குமார்

சாமர ஹஸ்தா யோகி ராம்சுரத்குமார்

பவபய பஞ்சனா யோகி ராம்சுரத்குமார்

மஞ்சு பாஷணா யோகி ராம்சுரத்குமார்

பரமக்ருபாகர யோகி ராம்சுரத்குமார்

ப்ரணவானந்தா யோகி ராம்சுரத்குமார்

ஷாந்த ஸ்வரூபா யோகி ராம்சுரத்குமார்

ஷாந்தி தாதா யோகி ராம்சுரத்குமார்

ஹரஹர ஹரஹர யோகி ராம்சுரத்குமார்

சிவசிவ சிவசிவ யோகி ராம்சுரத்குமார்

## Song 69: காசியின் அருகில் ♫

1) காசியின் அருகில் தோன்றியவர்

துயர்துடைத்து மக்களைக் காத்திடுவார்

ஆண்டி வேடம் எடுத்து வந்து இந்த

உலகத்தின் பாவத்தைப் போக்கிடுவார்

யோகி ராமா சுரத் குமாரா ஜெயகுரு ஜெயகுரு ஜெயகுரு ராயா

2) உலகத் தந்தையும் தாயும் குருவும்

இவர்தான் என்றே போற்றிடுவோம்

உள்ளத்தில் ராம நாமத்தைப் பாடி

வாழ்வில் உயர்வு அடைந்திடுவோம்

3) (திரு) அண்ணாமலையில் இருக்கின்றார் - அவர்

அருள் தனைப் பெற்றிட வந்தோமே

யோகிராம் சுரத்குமாரெனத் தினம் கூவித் தொழுதின்பம் பெறுவோமே

4) ராம தாசரின் தீட்சையினாலும்

ரமண ரிஷியின் பார்வையாலும்

அரவிந்தரின் ஆசியினாலும்

அன்பு ஆட்சி புரிகின்றார் - (யோகிராமா)

## Song 70: உனது நாமம் ♫

1) உனது நாமம் சொல்லச் சொல்ல

உள்ள மெல்லாம் உருகுதே

எனது மனம் நெகிழ்ந்திடவே

இன்ப வெள்ளம் பெருகுதே

பாடி ஆடிப்பணிந்திடவே

பரவசமே ஆகுதே

நீ ஆடி வரும் அழகைக் கண்டால்

ஆனந்தம் பொங்குதே

2) யோகிராம் சுரத்குமார்

நாமம் திவ்ய நாமமே நாம மொன்றே அறிந்த உள்ளம்

யாவும் அறிந்த தாகுமே

யோகிராம் சுரத்குமார் என்றுனையே பாடியே

சரணமென்று அடைந்தவர்க்கு

சஞ்சலங்கள் இல்லையே

3) யோகிராம் சுரத்குமார்

என்னை ஆளும் பரமனே

ஸ்ரீகுருவே யோகிராமை

அடைந்திடுங்கள் தஞ்சமே

யோகிராம் சுரத்குமார்

நாமத்தைச் சொல்ல சொல்ல

நல்குவது பேரின்பம்

முக்தி நிலையாகுமே

## Song 71: அண்ணாமலையப்பா ♫

அண்ணாமலையப்பா எங்கள் அண்ணாமலையப்பா

தஞ்சம் என்றே வந்தோம் நாங்கள் அண்ணாமலையப்பா

1) தலையில் பாகை அணியக் கண்டோம் அண்ணாமலையப்பா

முகத்தில் முறுவல் தவழக் கண்டோம் அண்ணாமலையப்பா (அண்ணா)

2) சிகரெட் குடிக்கும் கோலத்தைக் கண்டோம் அண்ணாமலையப்பா

சிரட்டையில் குடிக்கும் அழகினைக் கண்டோம் அண்ணாமலையப்பா (அண்ணா)

3) சிங்கச் சிரிப்பொலி கேட்டோம் நாங்கள் அண்ணாமலையப்பா சாய்பாபா

நாயினைக் கண்டோம் அண்ணாமலையப்பா (அண்ணா)

4) அழுக்குடை அணிந்து நிற்கக் கண்டோம் அண்ணாமலையப்பா

அன்பர்கள் கூட்டம் வந்திடக் கண்டோம் அண்ணாமலையப்பா (அண்ணா)

5) ராஜா ராஜா என்றே சொல்லும் அண்ணாமலையப்பா மகராஜ் எங்கள்

அன்பின் குருவே அண்ணாமலையப்பா (அண்ணா)

6) பிச்சைக்காரன் என்றே சொல்லும் அண்ணாமலையப்பா

அருள்பிச்சை தந்து எமை ஆட்கொள்ளும் அண்ணாமலையப்பா (அண்ணா)

7) ராமா ராமா என்றே சொல்லும் அண்ணாமலையப்பா

ராம் சுரத்குமார் என்னும் நாமரூபனே அண்ணாமலையப்பா (அண்ணா)

## Song 72: ஆனந்த அறிவாகி ♫

யோகி ராம்சுரத்குமாரா யோகி ராம்சுரத்குமாரா
யோகி ராம்சுரத்குமாரா ஜய குரு ராயா (2)

ஆனந்த அறிவாகி அனைத்துமாகி
ஆகமமாய் வேதம்சொல் கருத்து மாகித்
தானந்த மில்லாத பொருளுமாகிச்
சராசரங்கள் எல்லாமாய் யோக மாகி

வானந்த மாயஐம் பூத மாகி
மதியாகிக் கதிராகி அங்கி யாகி
தான்தானா யுள்ள அந்தப் பெருமான் தன்னை
யோகி ராம்சுரத்குமார் வடிவில் கண்டேன்

யோகி ராம்சுரத்குமாரா யோகி ராம்சுரத்குமாரா
யோகி ராம்சுரத்குமாரா ஜய குரு ராயா (2)

## Song 73: எத்திக்கும் தானாகி ♫

யோகிராம் சுரத்குமாரா, யோகிராம் சுரத்குமாரா

யோகிராம் சுரத்குமாரா ஜெயகுரு ராயா

1) (low) எத்திக்கும் தானாகி என், இதயத்தே ஊறித்

தித்திக்கும் ஆனந்த, தேனே ராம்சுரத்குமார்

(high) பராபரமே, யோகி ராம்சுரத்குமார் (2)

2) (low) சிந்தித்த எல்லாம் என், சிந்தை யறிந்தே உதவ

வந்த கருணை மழையே, பராபரமே

(high) யோகி ராம்சுரத்குமாரா, யோகி ராம்சுரத்குமாரா

யோகி ராம்சுரத்குமாரா, பராபரமே

3) (low) என்னதுயான் என்னல் அற்றோர், எங்கிருந்து பார்க்கினும்

நின்பெரிய சன்னிதியாம், நீ பெரிய சாமி

4) (high) பராபரமே, நின்பெரிய சன்னதியாம்

நீ பெரிய யோகி, ராம்சுரத் குமார் ப்ரபோ

5) (low) நின்பெரிய சன்னிதியாம், நீபெரிய அன்பு மூர்த்தி

ஸுரத்குமார் சரணம்சரணம், யோகி ராம்சுரத்குமாரா

6) (low) அணுவுக்குள் அணுவாகி, அண்டமெல்லாம் தானாகி

மஹத்தாகி நின்றனை நீ, யோகி ராம்சுரத்குமாரா

7) (high) ஆர் இருந்தென் ஆர்போய்என், ஆரமுதாம் நின்அருளின்

சீர்இருந்தால் உய் வோம், யோகி ராம்சுரத்குமார்

8) (low) பின்னும் முன் னுமாய், நடுவுமாய் யாவினும்

பெரியது என் னும், தன் மையாய்

9) (high) எவ்வுயிர்த் திரளையும், இயக்கி மன் னும்

தன்னருள் வடிவமே!, உமக்கு அன்பு

10) (low) ஆனந்தமான நின்னைஅன்றி, ஒன்றை உன்னாத மோனம்

இத்தூசிக்குஅருள்வாய், அன்பே ராம்சுரத்குமார்

11) (high) அன்பை பெருக்கி எனது, ஆருயிரைக் காக்க வந்த

இன்பப்பெருக்கே எம், இறைவா யோகி

(low) ராம்சுரத் குமாரா, பராபரமே

யோகிராம் சுரத்குமாரா, பராபரமே

12) (low) செய்யும்தவம் சற்றுமில்லாத, நான்உன்திருவடிக்கே

கொய்யும்புது மலர் இட்டு, மெய்யன்பர் குழாத்துடனே

13) (high) கையும் சிரமிசை, கூப்பி நின்று

ஆடி கசிந் து ரு கி, உய்யும்ப டிக்கு

14) (low) அருள் செய்வதென்றோ, திருவண்ணாமலை அப்பனே

எந்தையே யோகி, ராம்சுரத் குமார் ப்ரபோ

15) (low) ஒன்றாகிப் பலவாகி, பலவா கண்ட ஒளியாகி

வெளியாகி உருவும் ஆகி, நன்றாகி தீதாகி

16) (high) மற்றும் ஆகி, நாசமுடன் உற்பத்தி

நண்ணாது ஆகி, இன்றாகி நாளையுமாய்

17) (low) மேலும் ஆன, எந்தை எம்மானே

என்றென்று ஏகி, கண்ணாகி கதறி னார்க்கு

18) (high) சேதா ஆகி, கடிதினில் வந்து

அருள் கூறும்கருணை விண்ணே, யோகிராம் சுரத்குமாரா

யோகிராம் சுரத்குமாரா, யோகிராம் சுரத்குமாரா யோகிராம் சுரத்குமாரா ஜெயகுரு ராயா

யோகிராம் சுரத்குமாரா ஜெயகுரு ராயா

## Song 74: நாம பஜனமே ஜீவன் ♫

நாம பஜனமே ஜீவன்

யோகிராம் சுரத்குமார் உந்தன் (நாம)

ஞான நலம் தரும் நாத லயம் பெறும்

நாம பஜனமே ஜீவன்

யோகிராம் சுரத்குமார் உந்தன் (நாம)

1) நாமமே ஸ்மரணம் உன் பாதமே

சரணம் சரணம் சரணம் குருநாதா

கவலையை போக்கும் பெருநிலையாக்கும்

கனிவோடு காக்கும் நாமம் - அந்த

கற்பகத்தருவின் நாமம் (நாம)

2) பரம ஞானியே அருண ஜோதியே

கருணாமூர்த்தியே சரணம்

நேமமாய் உந்தன் திவ்ய நாமமே பாடியே

உய்வதொன்றே ஆனந்தம் - நான்

உய்வதொன்றே ஆனந்தம்

ஆனந்தம் பரமானந்தம்

சச்சிதானந்தம் பரமானந்தம் (நாம)

## Song 75: தாண்டி விடலாம் ♫

1) தாண்டி விடலாம் கடல் தாண்டி விடலாம்

சாந்தியற்ற சம்சாரக் கடலைத் தாண்டி விடலாம்

2) யோகிராமா ராமா என்று நாமம் சொல்லுவோம்

ராம்சுரத்குமார் என்று கரை சேர்ந்து விடலாம்

3) பந்த பாசத் துன்பமெல்லாம் பறந்துபோய் விடும்

இந்த இன்பக் காற்றில் கவலையெல்லாம் கரைந்து போய்விடும்

4) யோகிராம் சுரத்குமாரை சிந்தையில் நினைத்தால்

நெஞ்சில் தீரம் வீரம் சாந்தி தவம் யாவும் பெருகிடும்

5) ஞான ஒளி யோகி ராம் சுரத்குமாரரும்

நமக்கு ஞானவீடு நான்கினையும் நலமுடன் தருவார்

6) வாருங்கள் ஐயா ஓடம் ஏறுங்களய்யா!

வாருங்கள் அம்மா ஓடம் ஏறுங்களம்மா!

இந்த ஈடில்லாத இணையடிகளில் சேருங்களய்யா!

இந்த ஈடில்லாத இணையடிகளில் சேருங்களம்மா!

## Song 76: நாமம் ஒன்றே வேண்டும் ♫

நாமம் ஒன்றே வேண்டும் - இந்

நாவினுக்கே என்றும் யோகிராம்

சுரத்குமார் என்னும் திருநாமம்

1) நல்லோர்கள் அனைவரும் நவின்றிடும் நாமம்

நன்மைகள் தந்தெம்மை ஆட்கொண்ட உன் திரு (நாமம்)

2) துன்பக்கடலிலே அமிழ்ந்திடும் போதிலும்

தொல்லை பல சூழ்ந்திடும் போதிலும் (நாமம்)

3) உற்றவர் சுற்றம் என்றே தினம்

உழன்றிடும் மாய மயக்கத்தைப் போக்கவே (நாமம்)

4) எனது நான் என்னும் அகந்தை ஒழிந்திட

எமது வாழ்வை வழி நடத்திட என்றும் (நாமம்)

5) உறை பனியாகவே உறைந்த எம் உள்ளமே

ஊற்றென அன்பு பெருக்காக மாறவே (நாமம்)

6) ஆசை என்னும் மாய மயக்கத்திலும் - எம்மை

ஆழ்ந்திடாமல் என்றும் காத்திடும் உன் திவ்ய (நாமம்)

7) உன்னை நோக்கியே நான் ஓரடி வைத்தேன்

உன் அருட் கருணையால் உன்னிடமே சேர்த்த (நாமம்)

8) தேனினும் இனிய தூயதான நாமம்

ஊனினை உருக்கி ஒளியினைப் பரப்பும் (நாமம்)

9) எண்ணத்தில் கலந்து இதயத்தில் இணைந்த

எல்லாமும் நீ என்று எண்ணவே செய்திட்ட (நாமம்)

10) கங்கைக் கரையினில் அவதரித்தே வந்து

சங்கை தீர்த்தெம்மை தாங்கியே வந்திடும் (நாமம்)

11) காலப் பிரமாணம் கடந்தே நிற்கும்

காலனும் கண்டு அஞ்சியே ஓடும் (நாமம்)

12) அளவிட முடியாத நினதரும் பெருமையை

அனைவரும் கூடித்தினம் பாடிடவே (நாமம்)

13) நாமம் ஒன்றே வேண்டும் - எமக்கு

யோகிராம் சுரத்குமார் என்னும் இனிய (நாமம்)

யோகிராம் சுரத்குமார் யோகிராம் சுரத்குமார்

யோகிராம் சுரத்குமார் ஜெயகுரு ராயா

## Song 77: ஒன்றே தெய்வம் ♫

ஒன்றே தெய்வம் நீயே பகவான்

அபயம் தருவாய் குருநாதா

இரண்டு செவிகளில் சதா உன் நாமம்

ஒலிக்கச் செய்வாய் குருநாதா

1) மூன்று உலகம் அளந்த உன் சரணம்

மலர்ந்த கமலம் குருநாதா

நான்மறை வழியே வந்தாயே

வேதம் நீயே குருநாதா (ஒன்றே)

2) ஐம்புலக் கள்வரை அடக்கி என்னை

ஆட்கொள்வாயே குருநாதா

அறுவகை பகைவரை விரட்டி என்னுள்

ஆட்சி புரிவாய் குருநாதா (ஒன்றே)

3) ஏழுமலையில் வாசம் செய்யும்

திருவேங்கடம் நீயே குருநாதா

எட்டாத பக்தி கனியை எனக்கு

பறித்து தருவாய் குருநாதா (ஒன்றே)

4) நவவித பக்தியே வேண்டியே உன்தாள்

பணிந்து நின்றேன் குருநாதா

தசாவதாரம் என்று எனக்கு

காட்டுவாயோ குருநாதா (ஒன்றே)

## Song 78: எண்ணை ஊற்றவில்லை

எண்ணை ஊற்றவில்லை - யாரும்

ஏற்றி வைக்கவில்லை

தண்ணென்றிருக்கும் தீ◌ீபம் - அதன்

தன்மை என்ன சொல்வேன்

இருந்த இடத்தில் இல்லை - அது

இங்கும் அங்கும் போகும்

பக்தர்க்கு அருளும் தீபம் - அதைப்

பார்த்ததுண்டோ சொல்வாய்

கருத்த வானம் தன்னில் - நன்கு

கண் சிமிட்டும் மீன் போல்

இருண்ட உள்ளக் காட்டில் - அது

இன்ப ஒளியைக் கூட்டும்

கருத்தை ஈர்க்கும் அதனை - நானும்

கண்டு பிடித்து விட்டேன்

யோகி ராம் சுரத்குமார் - அதைப்

போய்ப் பார்ப்பது இன்பம்

## Song 79: அண்ணல் யோகிராம்சுரத்குமார் ♬

அண்ணல் யோகிராம் சுரத்குமார்

தன்னையே நம்பிவாழ்வோர் தமக்கு

என்னதான் ஆகாது ஏது கிடையாதுலகில்

அவர் தலையெழுத்தும் அழியும்

ஜன்மங்கள் கோடிமுன் செய்த பாவங்கள்

அனல் பட்ட பஞ்சாய்ப் பொசுங்கும்

என்னாளும் நோயவரைத் துன்புறுத்தாதவர்

ஆயுள் வளர்ந்தேவரும்

இன்னல்கள், கொடியபகை, தீயசக்திகள்

ஏதும் என்றுமே அவரை அணுகா

மண்முதல் ஐம்பூதம் அனுகூலமாகும்,

தனம் புகழ் தானே வரும்

என்ன வந்தாலும் தம் சாதனையில்

வழுவாது வேகமாய் முன்னேறுவர்

உண்மையிது, உண்மையிது கற்பனை இல்லை

அவர் பாதம் நாம் பற்றி உய்வோம்.

யோகிராம் சுரத்குமார் யோகிராம் சுரத்குமார்

யோகிராம் சுரத்குமார் ஜயகுரு ராயா!

## Song 80: கனிவரும் காலத்திற் போய் ♫

கனிவரும் காலத்திற் போய்

பூக் கொய்யக் கருதுவார் போல்

இனியவுன் பாதம் தன்னை

எய்திய பின்னும் ஏனோ

தனியிருந் துயிர்ப் படக்கிச்

சாதனை புரிவர் வீணே!

புனித ராம் சுரத்குமாரா

புகலுவாய் எமக்கு நீயே!

2) பேச்செல்லாம் உபதேசந்தான்

பெருஞ் சிரிப் பாசீர்வாதம்

மூச்செல்லாம் எமக்காகத்தான்

முத்தனே இனிமேல் யாம்போய்

ஆச்சிரமங்கள் தேடோம்

அனுட்டானம் தேவையில்லை

பூச்சொரிந் துனது பாதம்

போற்றுவோம் அதுவே போதும்!

3) எங்கிருந்து எங்கே வந்தோம்

எப்படிச் சேர்ந்தோம் உன்றன்

பங்கய பாதம் தன்னைப்

பகருதற் கறியோம் அந்தக்

கங்கையின் கரையில் மேவும்

காசி மாநகரின் வந்தே!

எங்களுக்கருளே தந்தாய்

இனிய ராம் சுரத்குமாரா!

4) தொட்டது புனிதம் ஆகும்

சொன்னதே வேதம் ஆகும்

கிட்டனே உலகோர் செப்பும்

ஜபதபம் அவற்றால் மேவும்

அட்டமா சித்தி வேண்டேன்

அருளொன்றே போதும் போதும்

வட்ட வான் மதியே போன்ற

வதன ராம் சுரத்குமாரா!

5) நாசியைக் கரத்தால் பொத்தி

நாலு கட்டறுத்தோம் என்பார்

வாசியை வலத்தே வைத்து

வளியினைத் தடுத்தோம் என்பார்

காசிமா நகரின் வந்த

கனியே ராம் சுரத்குமாரா

தேசிக! உனைக் கண்டாற்பின்

செய்திடல் வேறும் உண்டோ?

6) பட்டுடையில்லை பாரோர்

பார்த்தனர் வியந்தே போற்ற

எட்டுடை இல்லை எங்கள்

இனிய ராம்சுரத் குமார்க்கே
பொட்டிலை பூச்சும் இல்லை
பூண்டிடப் பணிகள் இல்லை
கட்டிலை வணங்கினோர்க்கு
கவலைகள் ஏதும் இல்லை!

7) கையிலே விசிறி உண்டு
கனிந்த நற்பார்வை உண்டு
மெய்யருள் வீசும் கண்கள்
மிளிர்ந்திடக் கண்டோர் உண்டு
வையகம் முழுதும் காக்க
வளர்ந்திடு கருணை உண்டு
தெய்வீகப் பேச்சும் உண்டாம்
திவ்ய ராம் சுரத்குமார்க்கே

8) வேம்சுரத் திடையே செல்வோ
விரிமழை பெற்றார் போலே
பாம்புடைக் கானில் செல்வோர்
பறவைகட் கரசைப் பெற்றே
தேம்புதல் அற்றாற் போலே
தேசிகன் இவனைப் பெற்றோம்
ராம்சுரத் குமார்க்கேயாம்
ராச்சியக் கவிஞரானோம்

9) பொய்யில்லை சொன்னோம் இந்தப்

புனிதனைக் கண்டாற் போதும்

செய்தவம் அதுவே, யோக

சித்திகள் தேவர் லோகம்

மெய்யுறு பதங்கள் யாவும்

மேவிடச் செய்யும் இன்னும்

ஐய முற்றலைதல் வேண்டா

ஐயனை அடைவீர் இன்றே!

10) எண்ணெழுத்து அறியாப் பேதை

இடைச்சியர் அன்பால் முன்னாள்

கண்ணனைச் சார்ந்தே தங்கள்

கவலையை மறந்தாற் போலே

புண்ணிய உன்னைக் கண்டே

போக்கினோம் துயரம் யாவும்

அண்ணல் நின் பாதம் அல்லால்

அருமருந்துண்டோ மண்மேல்!

11) வாக்கினால் புன் சிரிப்பால்

மலர்க்கரம் தன்னால் தங்கள்

நோக்கினால் அருளே செய்வார்

கோன்மையர் என்பார் முன்னோர்

தேக்கிய கருணை தன்னால்

சேர்ந்தவர்க் கெல்லாம் மிக்க

பாக்கியம் தருவாய் எங்கள்

பரம ராம் சுரத்குமாரா!

12)  நிர்குணப் பிரமம் தன்னை

நினைந்திடல் அல்லால் உங்கள்

சற்குணப் பிரமம் தன்னை

சற்றுமே நினையாம் என்பார்

பொற்குணம் பொருந்தும் ராம

சுரத்குமார் உன்னைக் கண்டார்

எக்குணம் கொண்டார் தாமும்

இறையென்று வணங்குவாரே!

13) ஆயிரம் நாமம் சொல்லி

அன்பொடு துதிப்பர் பின்னைப்

போயொரு கருமம் செய்ய

வேண்டுமே புகல்வாய் எங்கள்

தாயினும் இனிய ராம

சுரத்குமார் உன்தன் பாதம்

மேய பின் கவலை உண்டோ

மேதினி வாழுவோர்க்கே!

## Song 81: பாடுங்கள் பாடுங்கள் தோழியரே ♫

கும்மிப் பாடல்

1. பாடுங்கள் பாடுங்கள் தோழியரே - நம்

பாரியின் புகழைப் பாடுங்களே

புன்னைமர நிழலில் அருளாட்சி - அதை

பணிந்த பேருக்கு மனைமாட்சி - (அடியுங்கள் கும்மி அடியுங்கள்)2

(யோகிராம் சுரத் குமாரனைப் பாடி அடியுங்கள் கும்மி அடியுங்கள்)

2. அண்டின பேர்குலம் காத்தவனாம் - குமரன்

அண்ணாமலை ஜோதியாய் நிற்பவனாம்

ஜோதியைக் கண்டிட வந்திடுவீர் - அந்த

ஜோதியில் கலந்திடவே நீங்கள் - (அடியுங்கள் கும்மி அடியுங்கள்)2

(யோகிராம் சுரத் குமாரனைப் பாடி அடியுங்கள் கும்மி அடியுங்கள்)

3. செந்திற் குமரன் முருகன்தான் - ராம்

சுரத் குமாரன் தானானான்

அண்ணாமலை மகனைக் கண்டிடவே – இங்கு

அழகாக வந்து நீர் எல்லோரும் - (அடியுங்கள் கும்மி அடியுங்கள்)2

(யோகிராம் சுரத் குமாரனைப் பாடி அடியுங்கள் கும்மி அடியுங்கள்)

4. கூறுங்கள் கூறுங்கள் தோழியரே - உங்கள்

குறைகளைத் தேவனின் காலடியில்

தாயின் பரிவை அங்கே கண்டிடுவீர் – மனச்

சுமையை இறக்கியே நீங்கள் - (அடியுங்கள் கும்மி அடியுங்கள்)2

(யோகிராம் சுரத் குமாரனைப் பாடி அடியுங்கள் கும்மி அடியுங்கள்)

5. கேளுங்கள் கேளுங்கள் தோழியரே - தேவன்

சிரிப்பினில் அருளைக் காணுங்களே

உயர்ந்திடும் உயர்ந்திடும் உயர்ந்திடும் - நம்

வாழ்வு உயர்ந்திட நீங்கள் - (அடியுங்கள் கும்மி அடியுங்கள்)2

(யோகிராம் சுரத் குமாரனைப் பாடி அடியுங்கள் கும்மி அடியுங்கள்)

6. சொல்லினில் தேனையே கலந்தவனாம் - அகச்

சோர்வை அகற்றவே வந்தவனாம்

தன்னுள் மூழ்கித் தனையறிய - தெய்வத்

துணையாய் வந்தவனாம் நீங்கள் - (அடியுங்கள் கும்மி அடியுங்கள்)2

(யோகிராம் சுரத் குமாரனைப் பாடி அடியுங்கள் கும்மி அடியுங்கள்)

7. ஆண்டிபோல் நின்ற இந்த அண்ணலையே - பாடி

அழகாகக் கைகொட்டி ஆடியே

மோனச் சிரிப்பினில் தெரிகின்ற - அந்த

ஞான ஒளி கண்டே நீங்கள் - (அடியுங்கள் கும்மி அடியுங்கள்)2

(யோகிராம் சுரத் குமாரனைப் பாடி அடியுங்கள் கும்மி அடியுங்கள்)

8. கும்மியடி பெண்ணே கும்மியடி - நம்

சோர்வெலாம் நீங்குமே கும்மியடி

பாடியே பாடியே கும்மியடி - யோகி

ராம்சுரத் குமாரனைப் பாடியே நீங்கள் - (அடியுங்கள் கும்மி அடியுங்கள்)2

(யோகிராம் சுரத் குமாரனைப் பாடி அடியுங்கள் கும்மி அடியுங்கள்)

## Song 82: ஜெய பூர்ணபராத்பர

जय पूर्णपरात्पर पूर्णमनोरथ पुरुषोत्तम गुरु देहि पदम् ।

जय नित्यनिरामय सत्यसनातन ब्रह्मनिरञ्जन देहि पदम् ॥ १॥

ஜெய பூர்ணபராத்பர பூர்ணமநோரத2 புருஷோத்தம குரு தேஹி ப1த3ம் ।

ஜெய நித்1யநிராமய ஸத்யஸநாத1ன ப்ரஹ்ம நிரஞ்ஜன தேஹி ப1த3ம் 1॥

जय जगजनवन्दित भक्तजनार्चित पुष्पसमर्चित देहि पदम् ।

जय श्रुतिपरिपालन पापविनाशन भूतजगत्रय देहि पदम् ॥२॥

ஜெய ஜக3ஜனவந்தி3த1 ப4க்த1ஜனார்ச்சித1 புஷ்பஸமர்ச்சித தேஹி ப1த3ம் ।

ஜெய ஷ்ருதிபரிபாலன பா1ப1விநாஷன பூ1த1ஜகத்ரய தேஹி ப1த3ம் ॥2॥

जय ज्ञानदिवाकर प्रेमरसार्णव भक्तिसुधार्णव देहि पदम् ।

जय करुणासागर वाच्छापूरक मुक्तिप्रदायक देहि पदम् ॥३॥

ஜெய ஞானதிவாகர ப்ரேமரஸார்ணவ ப4க்திஸுதார்ணவ தேஹி ப1த3ம் ।

ஜெய கருணாசாகர வாஞ்சாபூரக முக்திப்ரதாயக தேஹி ப1த3ம் ॥3॥

जय रतिपति मर्दन दुर्मदशोषण मोहनिवारण देहि पदम् ।

जय कुमति विनाशन सुमतिप्रकाशन भव भय भञ्जन देहि पदम् ॥ ४ ॥

ஜெய ரதிபதி மர்த3ன து3ர்மத3ஶோஷண மோஹநிவாரண தேஹி ப1த3ம் ।

ஜெய குமதி விநாஶந ஸுமதி ப்ரகாஶந ப4வ ப4ய ப4ஞ்ஜன தேஹி ப1த3ம் ॥ 4॥

जय भिक्षुवेषधर वृद्धकलेवर पञ्चकच्छ धर देहि पदम् ।

जय दीर्घजटाधर शुभ्रकलेवर धवळश्मश्रुयुत देहि पदम् ॥ ५॥

ஜெய பிக்ஷுவேஷதர வ்ருத்3த3க1லேவர பஞ்சகச்ச தர தேஹி ப1த3ம் ।

ஜெய தீ3ர்க்க3 ஜடாத3ர ஶ்மஶ்4ர கலேவர த4வளஶ்மஶ்ருயுத தேஹி ப1த3ம் ।
5॥

जय तालव्यजनधर योगदण्ड धर उष्णीष धर देहि पदम् ।

जय स्फटिकमाल्य धर अक्षमाल्यधर कम्बळ धर गुरु देहि पदम् ॥ ६ ॥

ஜெய தா1லவ்யஜனத4ர யோக3தண்ட3த3ர உஷ்ணீஷத4ர தேஹி ப1த3ம் ।

ஜெய ஸ்ப1டிக1மால்யதர அக்ஷமால்யத4ர கம்ப3ளதர கு3ரு தேஹி ப1த3ம்
6 ॥

जय नामगानप्रिय रामदासप्रिय गुरुत्रय सङ्गत देहि पदम्।

जय वरदा भयङ्कर सुषमासागर यतिकुल भूषण देहि पदम् ॥७॥

ஜெய நாமகா3னப்ரிய ராமதா3ஸப்ரிய கு3ருத்ரய ஸங்கத1 தேஹி ப1த3ம் ।

ஜெய வரதா3 ப4யங்கர ஸுஷமாஸாகர யதி1குலபூ4ஷண தேஹி ப1த3ம் ॥7॥

जय योगध्यानरथ मन्दहासयुत धूम्रपानरत देहि पदम् ।

जय चिन्मयगुरुवर अतिमृदु स्वरयुत देवकी सेवित देहि पदम् ॥ ८"

ஜெய யோகத்3யானரத மந்த3ஹாஸயுத1 தூ4ம்ரபானரத1 தேஹி ப1த3ம் ।

ஜெய சின்மயகுருவர அதிம்ருது3 ஸ்வரயுத1 தேவகீ ஸேவித1 தேஹி ப1த3ம்
॥8॥

## Song 83: ராம சுரத்துக் குமாரன் சரிதையை

*கும்மிப் பாட்டு*

*ஸ்ரீ சத்குரு யோகி ராம்சுரத்குமார் அவர்களின் வாழ்க்கை வரலாறு*

1 ராம சுரத்துக் குமாரன் சரிதையை
நல்ல தமிழினில் பாடிடவே
வேழ முகத்து விநாயகன் இன்னருள்
வேண்டியே கும்மி யடியுங்கடி

2 கும்மியடி இந்தப் பூதல முற்றும்
குளிர்ந்திடக் கும்மியடியுங்கடி
நம்மைத் தொடர்ந்த வினைகள் தொலைந்தன
நன்மை கண்டோ மென்று கும்மியடி

3 ராம சுரத்துக் குமா ரெனும் தேவனின்
நாமத்தை ஓதியே பாடிடுவோம்
சேமம் நல்வாழ்வு மெய்ஞ் ஞானம் வளர்ந்திடும்
தேய்ந்திடும் தீவினை முற்றிலுமே!

4 பூதலம் எங்கணும் தேடிய போதிலும்
புண்ணிய கங்கை போல் ஆறுமுண்டோ? - இந்த
மேதினி எங்கணும் நாடிய போதிலும்
மெய்யன் இவனைப் போல் வேறுமுண்டோ?

5 புண்ணிய கங்கைக் கரையினிலே இந்தப்
பூதலம் செய்த தவப்பயனாய்
நண்ணிய ராம சுரத்துக் குமாரரின்
நல்ல சரிதையைப் பாடிடுவோம்

6 சின்னஞ் சிறிய வயதினிலே தவ

சீலர்களோடுறவாடினனாம்

தன்னிகரற்ற தவத்தினனாய் மக்கள்

தாள் பணிந்தேத்தும் இவ் வற்புதனே!

7 உண்ணும் உணவைத் தவசியர்க்கே தந்து

உற்ற பசியைப் பொறுத்தவனாம்

எண்ணம் செயல் உரை யாவும் எந்நாளிலும்

ஈசன் கழலில் நிறுத்தினனாம்

8. யோகியர் ஞானியர் கூட்டுறவே மிக

நாடிடும் உள்ளம் படைத்தவனாம்

வேதியர் ஓதிடும் நான்மறையே மிக

வேண்டியினிது விழை பவனாம்.

9 துள்ளித் திரியும் சிறுவரைப் போல் என்றும்

துர்ஜனர் கூட்டுறவில்லாமல்

பள்ளிப் பருவம் தனிலிருந்தே நல்ல

பண்புடை மேலோரை நாடுவனாம்

10 சின்னஞ் சிறிய பறவை உயிர் விடச்

செய்த வினையைக் கருதியதால்

கன்னங்கள் நீர் வழிந் தோடிடவே மனம்

கன்றி யழுதிடும் புண்ணியனாம்

11 காசிநகரை அடைந் தொருநாள் அங்கு

கண்ணுதல் நாதனைக் கண்டதுமே

பேசிட மாட்டாத பேருணர்வு வரப்

பின்னும் அதனை விரும்பினனாம்

12 பாரத நாடு பழம் புகழ் எய்தியே
பாரினில் மேன்மை அடைந்திடவே
வீரம் விளைத்தபின் ஞானமுதிர்ந்திட
மேலவராம் அரவிந்தரின் பால்

13 மேவியரும் பொருள் நாடியறிந்தவன்
மேதினி போற்றிடும் மெய்த்தவனாம்
யோகி இராம சுரத்துக் குமாரனின்
நாமத்தை ஓதியே கும்மியடி

14 வாவென்ற ழைத்துத் தபோதனரை மிக
மேன்மையி னுய்க்கும் அண்ணாமலையில்
மேவு ரமணனின் மெய்யருள் பெற்று
மிகத் தெளி வுற்றனன் எங்கள் பிரான்

15 மேலைக்கடற் கரை யோரத்திலே பெரு
வேதப் பொருளின் இலக்கணமாய்
ஞாலம் விளக்கிடு நாயகனாம் ராம
தாசனை சத்குரு வென்ற டைந்தார்

16 ஆயிரம் நாமம் அறிந்தவரும் பல
அற்புதச் செய்கை புரிந்தவரும்
தாயினும் மேலெனப் போற்றிடும் தாரக
நாமத்தைப் போலொரு வார்த்தை யுண்டோ

17 ஸ்ரீராம் ஜெயராம் ஜெயஜெயராம் எனச்

ஜன்மங்கள் அற்றிடும் என்பதனால்
ஆராவ முதெனத் தாரக மந்திரம்
அத்தன் அளித்தனன் சித்தனுக்கே

18 ஓதிய மந்திரம் தன்னில் உளம் ஒன்றி
உள்ளொளி பெற்றனன் எங்கள் பிரான்
சோதி வடிவெனும் மெய்ப் பொருள் தன்னையும்
தோய்ந்தனன் ராம சுரத்துக் குமார்

19 பூரண மெய்ப் பொருள் தானென ஓங்கிய
புண்ணியன் ராம சுரத்துக்குமார்
ஆரணமே வடி வென்றிட நம்மிடை
அண்ணாமலையில் உறைந்தனனே

20 ஈசனின் மைந்தனெனத் தனையே தான் இயம்பிடு ராம சுரத்துக் குமார்
பேசிடும் தெய்வ மதாகி நமக்கருள்
பெய்யும் மழை யெனத் தந்திடுவான்

21 புன்னை மரத்தின் நிழலினிலே ஒரு
புத்தனைப் போல எழுந்தருள்வான்
வெண் ணெயருந்திடும் கண்ணனைப் போல் அந்தப்
புன்னைமர நிழல் தங்கிடுவான்

22 எங்கும் நிறைந்த பரம் பொருளே இவன்
இங்கிதற் கையமும் வேறுளதோ
பொங்கும் அமுதக் கருணையினால் அருள்
பூதலம் முற்றும் வழங்கினனே

23 தேரடி மீதினில் ஈரடியைத் தரு

வாரடி ராம சுரத்துக் குமார்

சீரடியை தொழு தேத்தியே செந்தமிழ்

செப்பியே கும்மியடியுங்கடி

24 ஜன்மபயம் இனி இல்லையடி கொடும்

தீவினை நம்மை யணுகாதே

கன்ம பலனும் அழிந்ததுவே இவன்

காலடி சேர்ந்த பயன் இதுவே

25 ராம சுரத்துக் குமாரன் என்றோர் முறை

நாமம் உரைத்திடப் போதுமடி

சேமமடைந்திடும் மார்க்கமிது எனச்

செப்பியே கும்மி யடியுங்கடி (யோகி)

1 ராம சுரத்துக் குமாரன் சரிதையை

நல்ல தமிழினில் பாடிடவே

வேழ முகத்து விநாயகன் இன்னருள்

(வேண்டியே கும்மி யடியுங்கடி) - 3

## Song 84: பற்றிக் கொண்டேன்

பற்றிக் கொண்டேன் உந்தன் பாதங்களை - இனி

விட்டிடவே மாட்டேன்

சரணங்கள்

1. ஒற்றிக் கொண்டேன் என்றன் கண்களிலே உன்றன்

ஒளிமலர்ப் பாதம் - நீ

உரைக்கும் ஒவ்வொரு வார்த்தையும் என்றனுக்

உயர் சதுர் வேதம் (பற்றிக்)

2. நல்லவை தீயவை நானறியேன் உன்றன்

நாம மொன்றே அறிவேன் - இங்கு

உள்ளவையாவும் நின் உருவம் என்றெண்ணி

உருகியே திரிவேன்.

3. உண்ணும் உணவும் பருகும் தண்ணீரும் நீ

உவந்தளித்தவையே - எந்தன்

கண்ணும் மனமும் கருத்தும் நிறைந்த நீ

காணும் ஒளித்தேவே

4. செல்வம் நல்வாழ்வு செழிப்பென யாவும் நின்

திருவடிச் சேவை - இனி

நல்குவை நான் எந்தநாளும் உன்மீதினில்

நவின்றிடும் பாவை.

5. கூவியழைத்தென்னையாட் கொண்டதேவனைக்
கும்பிடுவேன் நாளும் - இந்தப்
பாவி மனத்தையும் பக்குவம் செய்தனை
பவித்திரன் நீயே.

6. செல்லும் திசைக்குத் துணை வருவாய் - இந்தச்
சேதியை எங்குரைப்பேன் - பகை
வெல்லும் முறைகளைக் கூறி எந்நாளுமென்
மெலிவினைத் தவிர்ப்பாய்.

7. தந்தையும் தாயும் மக்களும் சுற்றமும்
தாரணி மீதினிலே - இன்னும்
எந்த முறையும் இனித்திடும் நண்பரும்
எனக்கினி நீயே.

8. கொட்டும் மழைக்குக் குடைநீயே - கடும்
குளிருக்குப் போர்வை - நன்கு
வெட்டும் வெயிலில் விசிறி - இருளினில்
வெளிச்சமும் ஆவை.

9. யோகியே ராமசுரத்துக்குமார வென்(று)
ஓதிடுவேன் தினமும் குரு
வாகியே வந்தருள் தந்திடுவாயென
வாழ்ந்திடுவேன் தினமும்.

10. தேரடி மீதினில் தேவ தரிசனம்
செய்து மகிழ்ந்திடுவேன் உந்தன்
ஈரடி கைதொழுதே யெந்தக் காலமும்
இசை பொழிந்திடுவேன்.

11. கையில் விசிறி தேங்காயின் சிரட்டையோ
டையனைக் கண்டதுமே மனம்
பைய நெகிழ்ந்து பசுவெண்ணெயாகித்தன்
பக்குவம் கொண்டதுவே.

12. நானில மாந்தர் எல்லாரும் உனைக்கண்டு
ஞானங்கள் பெற்றனரே கொம்புத்
தேனிலினிக்கும் உன்செம்மொழி கேட்டவர்
ஜன்மங்கள் அற்றனரே.

13. அண்ணாமலையினில் மேவிடும் தேவனுக்
கார் நிகராகிடுவான் எங்கள்
கண்ணான ராம சுரத்துக் குமாருக்குக்
கார் நிகராகிடுமோ.

## Song 85: வாடியே நின்று ♬

வாடியே நின்று வானினை நோக்கும்
விளைபயிர் போலவே யாமும்
தேடியே நின்றன் திருவடி தொழுதால்
திரும்ப நீ அடியரின் காலைக்

கூடியே தொழும்இக் கூத்துதான் என்னே
குருவொடு சீடனும் சிவனென்(று)
ஆடியே உணர்த்தும் அருளதோ உரையாய்
ஆண்டவ குழவியாம் அண்ணாள்

## Song 86: மனமதனை ♬

மனமதனை உள்ளடக்கும் வழியோ காணோம்
மனத்தினையும் கடந்துசென்று ஏறல் எங்கே? - 2
இனமுமப்பால் விஞ்ஞான நிலையும் தாண்டி
இன்பமாம் பரக்ஞானம் ஆதல் எங்கே?
மன்மதனை எரித்து தென்முகமே கொண்ட - 2
மௌனகுரு என எனக்குத் தோன்றுவோனே
தினகரராம் சுரத்குமார் யோகி ஆகித் - 2
தித்திக்கும் சிவஞானம் அருள்வாய் இன்றே! - 2

## Song 87: கண்ணா உன் சன்னதியில் ♫

கண்ணா உன் சன்னதியில் நானும் இடம் பெறவேண்டும்
கருணையுடன் எனக்கு அருள்வாய் - 2
காலடியில் நான் இருக்க காலமெல்லாம் தொழுதிருக்கும்
(தகுதியை எந்தனுக்கு அருள்வாய்)2 – கண்ணா (கண்ணா)
1. (புல்லாங்குழல் உனது கைகளில் தவழ்ந்திருக்க
புண்ணியம் செய்ததென்ன வியந்தேன்) - 2
காட்டிலே வாழ்ந்த அது வீட்டினை விட்டு விட்டு
(கஷ்டம் மிக ஏற்றதனை உணர்ந்தேன்)2 – கண்ணா (கண்ணா)

2. (அங்கமெல்லாம் சீவிச்சீவி அறுத்தனர் துண்டுதுண்டாய்
அனலில் இட்டு அதைவாட்டி) - 2
துளைத்தனர் உடல் முழுதும் சகித்தது அத்தனையும்
(கிடைத்தது கண்ணா உன் ஸ்பரிசம்)2 – கண்ணா (கண்ணா)

3. (தன்னையே எரித்துக் கொண்டு ஸன்னதியில் ஒளிபரப்பும்
எண்ணெய் விளக்கதனைப் பார்த்தேன்) - 2
ஆயுள் உள்ளவரை ஆண்டவனின் சேவைசெய்யும்
(அருங்குணம் தேவை என்று உணர்ந்தேன்)2 – கண்ணா (கண்ணா)

4. (ஊதுவத்தி எரிவதென்ன? அதற்கிங்கு தகுதி என்ன?
உணர்ந்திட நானும் கொஞ்சம் விழைந்தேன்) - 2
தன்னையே எரித்துக் கொண்டு தருவது நறுமணத்தை
(தியாகமே சிறந்த தென்று உணர்ந்தேன்)2 – கண்ணா (கண்ணா)
5. (பற்றியது கற்பூரம் சுற்றியது தட்டோடு
காட்டியது கண்ணா உன் உருவை) - 2
எரிந்தது கற்பூரம் எதுவுமே மிச்சமில்லை
(தெரிந்தது தேவையான தகுதி)2 – கண்ணா (கண்ணா)

## Song 88: ஸர்வ மங்கல மாங்கல்யே ♫

ஸர்வ மங்கல மாங்கல்யே
சிவே ஸர்வார்த்த ஸாதிகே
சரண்யே த்ரயம்பகே தேவி கௌரி
நாராயணி நமோஸ்துதே.

அம்மே நாராயணி நமோ
தேவி நாராயணி நமோ
லக்ஷ்மி நாராயணி நமோ
பத்ரே நாராயணி நமோ (ஸர்வ)

கையில் வீணை ஏந்தி அம்மா
கலைகளை அள்ளித் தருபவளே
கருணை புரியும் கலைவாணி
காலமெல்லாம் காப்பவளே (ஸர்வ)

தங்கக் க்ரீடம் தரித்தவளே
தங்கத் தாமரை முகத்தழகி
தங்க ஒட்டியாணம் தரித்து நீ இந்த
தரணி காக்கும் தயாநிதி (ஸர்வ)

மூக்குத்தி புல்லாக்கு ஒளி அழகி
தலைமுடி க்ரீட வடிவழகி
முகம் தேடி நான் அலைகின்றேன்
மூவுலகம் காக்கும் முக்கண்ணியே (ஸர்வ)

கழுத்தில் நல்ல மணி மாலையும்
கண்ட சரமும் காதில் குண்டலமும்

காலில் மெட்டி தண்டை சிலம்பும்
கலகல வென்று ஜொலிக்குதே (ஸர்வ)

நீரும் நெருப்பும் நீயம்மா
ஒலியும் ஒளியும் நீயம்மா
காற்றும் கனலும் நீயம்மா
விண்ணும் மண்ணும் நீயம்மா (ஸர்வ)

மான் மீது அமர்ந்து அருள்பவளே
சிம்ஹ வாஹன தேவியம்மா
குதிரை வாகனம் கொண்டவளே
காமதேனு வாஹினியே (ஸர்வ)

அங்குச பாச கரும்பும் வில்லும்
அஞ்சுகம் கெண்டி பிறை சூடி
சின்முத்ரை ஏகி ஜெப மாலையுடன்
அகிலாண்டேஸ்வரி அபிராமி (ஸர்வ)

ஐம்புலனயும் அடக்கி அம்மா
அகத்தின் உள்ளே கண்டிடலாம்
ஆலவாய் அழகி அங்கயற்கண்ணி
அழகுக்கு ஆதாரம் உன் திருக் கோலம்
அருளுக்கு ஆதாரம் உன் அன்புருவம் (ஸர்வ)

## Song 89: ஏகோ தேவ:

ஏகோ தேவ: யோகி ராம்சுரத்குமார:

ஸர்வ பூதேஷு கூட: யோகி ராம்சுரத்குமார:

ஸர்வ வ்யாபி யோகி ராம்சுரத்குமார:

ஸர்வ பூதாந்தராத்மா யோகி ராம்சுரத்குமார:

ஜயது ஜயது லோக பிதா ஜயது ஜயது

## Song 90: அருணையில் அமர்ந்தவனே ♫

14. ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் X2
ராம் ராம் ராம் ராம் ராம்சுரத்குமார் X2

அருணையில் அமர்ந்தவனே ராம்சுரத்குமார்
அண்ணாமலை யாரே ராம்சுரத்குமார்
அருணாசல விளக்கே ராம்சுரத்குமார்
அகத்தில் ஒளிர்பவனே ராம்சுரத்குமார்

ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் x2
ராம் ராம் ராம் ராம் ராம்சுரத்குமார் X2

கருணைக் கடலே ராம்சுரத்குமார்
காத்தருள வருவாய் ராம்சுரத்குமார்
குணம் மூன்றும் கடந்தவா ராம்சுரத்குமார்
முப்புறம் எரித்தவா ராம்சுரத்குமார்

ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் x2
ராம் ராம் ராம் ராம் ராம்சுரத்குமார் X2

ஏழைக்கு எளியவா ராம்சுரத்குமார்
எங்கள் அன்பு பிதாவே ராம்சுரத்குமார்
எங்கும் நிறைந்திருக்கும் ராம்சுரத்குமார் - எங்கள்
அன்புருவ தாயே ராம்சுரத்குமார்

ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் X2
ராம் ராம் ராம் ராம் ராம்சுரத்குமார் X2

அண்டினோரை அணைக்கும் ராம்சுரத்குமார்

அண்டமெல்லாம் நீதானே ராம்சுரத்குமார்

அண்டினோரை அணைக்கும் ராம்சுரத்குமார்

அண்டமெல்லாம் நீதானே ராம்சுரத்குமார்

அண்டமெல்லாம் நீதானே யோகி ராம்சுரத்குமார்

## Song 91: ஜயகுரு ஜயகுரு ஜயகுரு போற்றி ♫

(ப) ஜயகுரு ஜயகுரு ஜயகுரு போற்றி
யோகிராம் சுரதகுமார் குரு போற்றி

1. அண்ணாமலையில் ஒளிர் அண்ணலே போற்றி
உண்ணாமுலை பெற்ற உத்தமா போற்றி (ஜயகுரு)

2. ஆண்டி வேடம் பூண்ட ஆண்டவா போற்றி
ஆடும் சிதம்பரத் தாண்டவா போற்றி (ஜயகுரு)

3. இன்னல்கள் தீர்த்திடும் ஈசனே போற்றி
இதயத்தில் எண்ணுவார் நேசனே போற்றி (ஜயகுரு)

4. ஈகையில் இணையற்ற ஏந்தலே போற்றி
ஈஷணைகள் நீக்கியருள் இறைவனே போற்றி (ஜயகுரு)

5. உலகத்தை நீத்துவந்து உயர்ந்தவா போற்றி
உலக மக்கட்குறு துணைவனே போற்றி (ஜயகுரு)

6. ஊக்கம் நற்பணிக்கெலாம் அளிப்பவா போற்றி
ஊழ்வினைத் துயரம் துடைப்பவா போற்றி (ஜயகுரு)

7. எளிமையைக் கலனெனக் கொண்டவா போற்றி
எளியோரை என்றுமே காப்பவா போற்றி (ஜயகுரு)

8\. ஏதமில் அன்பர்க்கு ஆதவா போற்றி
ஏனையோர் பெரியரென் றேற்றுவாய் போற்றி (ஜயகுரு)

9\. ஐம்புல னடக்கிய ஆரியா போற்றி
ஐயங்கள் தெளிவறத் தீர்ப்பவா போற்றி (ஜயகுரு)

10\. ஒளியுலகி லென்றும் உறைபவா போற்றி
ஒற்றுமை யென்றும் உன் உபதேசம் போற்றி (ஜயகுரு)

11\. ஓங்காரம் தன்னிலே ஒன்றினாய் போற்றி
ஓவியத்திலும் உயிர் ஊட்டுவாய் போற்றி (ஜயகுரு)

12\. ஔதார்யம் அன்பர்க் கறைபவா போற்றி
ஔஷத மென்றமுது அளிப்பவா போற்றி (ஜயகுரு)

13\. கற்றவர் ஏற்றிடும் கர்த்தனே போற்றி
கொற்றவர் போற்றிடும் நற்றவா போற்றி (ஜயகுரு)

14\. கடமைக்கு முதலிடம் காட்டினாய் போற்றி
மடமையை மக்கள்பால் மன்னிப்பாய் போற்றி (ஜயகுரு)

15\. குடும்பத்தில் பக்தரை நிறுத்தினாய் போற்றி
குடும்ப அறவாழ்வு வற்புறுத்தினாய் போற்றி (ஜயகுரு)

16\. ஞான மெல்லார்க்கும் அரிதென்றவா போற்றி
ஞானத்தை பக்தியால் தந்தவா போற்றி (ஜயகுரு)

17. சஞ்சலங்கள் தீர்க்கும் சாமியே போற்றி
ஸஜ்ஜனர் போற்றும் மெய் ஸாதுவே போற்றி (ஜயகுரு)

18. தன்னலம் கருதிடாத் தியாகியே போற்றி
தவத்தினால் அன்பர் அவம் போக்கினாய் போற்றி (ஜயகுரு)

19. துறவினது தூய்மையாம் தோற்றமே போற்றி
தூலத்தில் அறியொணாத் தவத்தினாய் போற்றி (ஜயகுரு)

20. தெய்வ நெறி யென்றும் தவிர்ந்திடாய் போற்றி
தொண்டரைத் தோழராய்க் கொண்டவா போற்றி (ஜயகுரு)

21. தேச பக்தியின் மேன்மை சாற்றினாய் போற்றி.
தொன்மை நன்னூல்களைப் போற்றுவாய் போற்றி (ஜயகுரு)

22. நம்பினோரைக் காக்கும் நாதனே போற்றி.
நலம் தீது நினையாத ஞானியே போற்றி (ஜயகுரு)

23. நாட்டிலே நல்லவரை ஊக்கினாய் போற்றி
நானில நலத்துக்கு ஆளாக்கினாய் போற்றி (ஜயகுரு)

24. பக்தியின் எல்லை கடந்தவா போற்றி
பக்தர்பால் பரிவுறும் குருபரா போற்றி (ஜயகுரு)

25. பித்தனாய் தவத்தை சாதித்தவா போற்றி
பெரும்பிழையும் பொறுத்திடும் பண்பினாய் போற்றி (ஜயகுரு)

26. பைந்துழாய் தந்து நோய் தீர்ப்பவா போற்றி
பொன்னிலும் பொருளிலும் பற்றிலாய் போற்றி (ஜயகுரு)

27. மக்களின் குறைதீர்க்க வந்தவா போற்றி
மங்களம் நல்கும் மனத்தினாய் போற்றி (ஜயகுரு)

28. ராமதாஸர் தந்த ஜயனே போற்றி
ராமனோ டொன்றாய்க் கலந்தவா போற்றி (ஜயகுரு)

29. ராமநாமம் உலகில் நாட்டுவாய் போற்றி
ராமாயணத் தென்றும் ஊறினாய் போற்றி (ஜயகுரு)

30. வள்ளலையும் வறியரையும் வாழ்வித்தாய் போற்றி
வித்தகர் வியந்திடும் அத்தனே போற்றி (ஜயகுரு)

31. வேதநெறி ஓங்கிட விரும்பினாய் போற்றி
வேதத்தைக் காக்க மனம் கொண்டவா போற்றி (ஜயகுரு)

32. வையகம் வாழ வெளிவந்தவா போற்றி
வையகம் உன்னை வணங்கிடும் போற்றி

ஜயகுரு ஜயகுரு ஜயகுரு போற்றி
யோகிராம் சுரதகுமார் குரு போற்றி

## Song 92: ஆனந்தம் வந்து மோதுதே

ஆனந்தம் வந்து மோதுதே யோகி ராமன்
ஆசிரமத்தை நாடும்போதிலே.
ஆனந்தம் பெருகுதே ஆட மனம் உருகுதே
யோகி ராம் சூரத் குமாரை காணும் போதிலே (2) (ஆனந்தம்)

காலமெல்லாம் காக்கும் தெய்வமே தனி
கருணை காட்டும் யோகி ராமனே.
ஞாளமெல்லாம் போன்றவே நானும் உன்னை வாழ்த்துவேன்
நாளும் நாளும் நாளும் இன்பமே (2) (ஆனந்தம் )

நாமம் சொல்லி நாடி வருவோம்
உந்தன் பாதமலர் தேடி வருவோம்
பாமாலை பாடுவோம் பரவசமாய் ஆடுவோம்
யோகி ராம் சூரத்குமார் எங்கள் உயிரே (2) (ஆனந்தம் )

விசிறி சிரட்டை கையில் ஏந்தியே
விரையும் எங்கள் காவல் தெய்வமே.
கொள்ளை கொண்டு போகுதே கோடி மக்கள் உள்ளமே
உந்தன் லீலையில் தான் உள்ளம் மயங்குதே (2) (ஆனந்தம் )

பாராள வந்த பகவானே எங்கள்
பாவங்களை போக்கும் தெய்வமே.
நாம வேள்வி வளர்ப்போம் ஞாலத்தையே மாற்றுவோம்
சத்தியம் சத்தியம் சத்தியம் சத்தியமே (2) (ஆனந்தம் )

## Song 93: அன்பே சரணம் ♫

அன்பே சரணம், அருளே சரணம்
குருவே சரணம், திருவே சரணம்
யோகி ராம சுரத குமரா
சரணம் பாதம் பணிந்தோம் சரணம்... (அன்பே சரணம்)

1. கையினில் விசிறியும் சிரட்டையும் ஏந்தி
களிப்புடன் பொங்கும் சிரிப்பினில் மிதந்து
பொய்மையைப் பொசுக்கும் கனலெனக் கனன்று
பொய்கையாய் அருளாம் பெருக்கெடுத் தோடி
மெய்மறந் தாடி பாடியே திரியும்
மெய்யன், பித்தன் போலுள பெருமான்,
செய்யநல் பாதம் பணிவோம் - காப்பான்
யோகி ராம சுரத குமாரன்! (அன்பே சரணம்)

2. பாதங்கள் தரையில் பதிந்தன எனினும்
பரத்தினில் திளைக்கும் பரமநல் ஞானி,
ஆதியும் அந்தமும் இல்லா இறைவன்
அளித்தநல் அமுத தெய்வக் குழந்தை,
நாதியு மற்ற நமையெலாம் காக்க
நாயக னாக வந்தநல் வள்ளல்,
சோதியாய் திருவண் ணாமலை திகழும்
யோகி ராம சுரத குமாரன்! (அன்பே சரணம்)

3. தலையினில் பாகையும் பரந்தநல் நெற்றி
தவிப்பைப் போக்கும் தீர்க்கநல் கண்கள்,
நிலைகொள உலகம் உயிர்த்திடும் மூக்கு,

நிர்மலச் சிரிப்பை உதிர்த்திடும் செவ்வாய்,
அலையெனப் பொங்கி நுரையென வழியும்
அழகிய தாடியும் மீசையும் இணைந்த
கலையெழில் தவழ்ந்திடும் பொலிவுடை முகமே
யோகி ராம சுரத குமாரன்! (அன்பே சரணம்)

4. கொள்ளைச் சிரிப்பும் குலவிடும் அன்பும்,
கோல மயிலாய் நடமிடும் நடையும்,
கள்ள மில்லா கனிவும் பரிவும்,
கவலை போக்கும் கவின்மிகு நோக்கும்,
தெள்ளத் தெளிந்த அறிவும் பொலிவும்,
தேனினும் இனிய அமுதநற் சொல்லும்,
அள்ளில் தருமென் அணைக்கும் அன்னை,
யோகி ராம சுரத குமாரன்! (அன்பே சரணம்)

5. உலகச் செய்திகள் தினமும் படிப்பான்,
உலகை நடத்திடும் உத்தமச் செல்வன்,
கலகலச் சிரிப்புடன் கனிந்தநல் பழமும்
கனிவுடன் பாலும் அளிக்குநல் அன்னை,
பலவகை ஐயமும், பயமும், இருளும்
பார்வையில் அகற்றிடும் பரமநல் சோதி,
கலக்கம் போக்கி அணைக்கும் அத்தன்
யோகி ராம சுரத குமாரன்! (அன்பே சரணம்)

6. கற்பகத் தருவே, கனியின் சுவையே,
கனிவின் களிப்பே, களிப்பின் அலையே,
பொற்பதம் அளிக்கும் பொலிவின் ஒளியே,
பொன்திரு வண்ணா மலையொளிர் மலையே,

நற்கதி யருளும் நாயக னேயெம்

நாவில் உறைந்திடும் நான்மறை பொருளே

அற்புத மாகிய அன்னையே எங்கள்

யோகி ராம சுரத குமாரன்! (அன்பே சரணம்)

7. வாழிய பாரத யோகநல் பிழம்பே,

வாழிய எங்கள் வினைதீர் மருந்தே,

வாழிய கீதை வழங்கிய குருவே,

வாழிய ராமச் சந்திரத் தருவே,

வாழிய எங்கள் அன்பே, அருளே,

வாழிய அறத்தின் முதலே, முடிவே,

வாழிய வாழிய வாழிய எங்கள்

யோகி ராம சுரத குமாரன்! (அன்பே சரணம்)

## Song 94: பஜோ மன ♫

பஜோ மன ஜபோ மன யோகி ராம்ஸூரத்குமார்

யோகி ராம்ஸூரத்குமார் யோகி ராம்ஸூரத்குமார்

காவோ மன ஸ்மரோ மன யோகி ராம்ஸூரத்குமார்

ஸ்மரோ மன காவோ மன யோகி ராம்ஸூரத்குமார்

பஜோ மன ஜபோ மன யோகி ராம்ஸூரத்குமார்

ஜபோ மன பஜோ மன யோகி ராம்ஸூரத்குமார்

ஜபோ மன ஸ்மரோ மன யோகி ராம்ஸூரத்குமார்

ஜபோ மன காவோ மன யோகி ராம்ஸூரத்குமார்

பஜோ மன காவோ மன யோகி ராம்ஸூரத்குமார்

பஜோ மன ஸ்மரோ மன யோகி ராம்ஸூரத்குமார்

காவோ மன ஜபோ மன யோகி ராம்ஸூரத்குமார்

காவோ மன பஜோ மன யோகி ராம்ஸூரத்குமார்

நமோ நமோ நமோ நமோ யோகி ராம்ஸூரத்குமார்

நமோ நமோ நமோ நமோ யோகி ராம்ஸூரத்குமார்

யோகி ராம்ஸூரத்குமார் (4)

## Song 95: திவ்ய பாலகம் ♬

திவ்ய பாலகம் அருணவாஸினம் மத்த பிக்ஷுகம் யோகிபுங்கவம்

நாமஜாபகம் அபயதாயகம் திவ்யஸத்குரும் யோகிமாஶ்ரயே

ஷரணம் யோகி ராம்ஸுரத்குமார்

மலிந வேஷினம் மலவிநாஷகம் மந்தஹாஸினம் மதுரபாஷிணம் ।

காருண்ய ஸாகரம் பக்தவத்ஸலம் ஸ்ருதி சேதுபாலகம் யோகிமாஶ்ரயே

ஷரணம் யோகி ராம்ஸுரத்குமார்

சகுண நிர்குணம் ஸகல நிஷ்கலம் காமிதப்ரதம் காமநாஷகம்

வ்யஜனஹஸ்தகம் ஸ்மஶ்ருஸந்யுதம் தாம்ரபாயிநம் யோகிமாஶ்ரயே

ஷரணம் யோகி ராம்ஸுரத்குமார்

விருத்தவிக்ரஹம் பாலகௌதுகம் துக்க ஹாரிணம் ஸௌக்யதாயகம்

ராமரகுவரம் க்ருஷ்ணயதுவரம் ப்ரஹ்ம சின்மயம் யோகிமாஶ்ரயே

ஷரணம் யோகி ராம்ஸுரத்குமார்

த்வத்பதே ஸதா ரமது மே மதி: த்வத்பதாம்புஜம் ஏவ மே கதி:

பாலயஸ்வ மாம் ஹே மஹாயதி, தேஹிமே ப்ரபோ த்வத்பதே ரதி:

ஷரணம் யோகி ராம்ஸுரத்குமார்

## Song 96: எந்தை நீ அல்லவா ♫

யோகிராம்சுரத்குமார் யோகி ராம் சுரத்குமார்
ராம் ராம் சுரக்குமார் யோகிராம்சுரத்குமார்
கிருஷ்ண கிருஷ்ண யோகிராம் யோகிராம் சூரத்குமார்
ராம ராம ராம ராம் யோகி ராம் சூரத் குமார்.

எந்தை நீ அல்லவா என் தாயும் அல்லவா நீ
பொய் கோலம் பூண்டவா பேராற்றல் ஆனவா
ஆண்டியாய் திரிந்தவா அல்லல் தீர்க்கும் நாயகா
அருள் மழை பொழிந்து மக்கள் உள்ளத்தை கவர்ந்தவா. (யோகிராம்)

உள்ளதெல்லாம் ஒன்றே என்று உள் உணர்த்தும் தெய்வமே
உலகை ஆட்டும் மாயனே எம்மை உன்னி காக்கும் நாயகா
புன் சிரிப்பு மலர மக்கள் மனதுள் புகுந்தவா
பொருள் உகுத்து சிரிப்பவா பொற்பாதம் தந்த வா (எமக்கு)
பூ பாதங்கள் தந்த வா.

யோகிராம்சுரத்குமார் யோகி ராம் சுரத்குமார்
ராம் ராம் சுரக்குமார் யோகிராம்சுரத்குமார்
சரணம் சரணம் சரணம் சரணம் யோகிராம் சூரத் குமார்
சரணம் சரணம் சரணம் சரணம் யோகிறான் சூரத் குமார்

உள்ளங்களில் உறைந்திருக்கும் யோகிராம் சுரக்குமார்
அருணாச்சலமாய் உணர்த்தும் யோகிராம் சுரத்குமார்
உள்ளத்தின் ஒளிவிளக்கே யோகிராம் சுரத்குமார்
எங்கும் நிறைந்து நிற்கும் யோகிராம் சுரத்குமார்

யோகிராம்சுரத்குமார் யோகி ராம் சுரத்குமார்

காட்சிக்கு எளிய வா கண்கண்ட தெய்வமே.

அருணாச்சலேஸ்வரா அப்புறமேயா

மனோ வாச்சாமகோச்சராய நமஹ யோகிராம் சூரத்குமார் நமக.

## Song 97: ஹே ப்ரபோ

ஹே ப்ரபோ யோகி ராம்சுரத்குமார்
ஜய குரு ஜய குரு ஜய குரு தேவா (2) (ஹே ப்ரபோ)

சாத்திரம் புராணம் சங்கீதம் நானறியேன்
தோத்திரம் செய்தேன் உன்னை ஸ்ரீ குருதேவா (ஹே ப்ரபோ)

ஆகம நூல்படி அனுஷ்டானம் செய்தறியேன்
ஆருயிர் தெய்வமே ஸ்ரீ குரு தேவா (ஹே ப்ரபோ)

அருகதை சற்றுமில்லா எந்தன் மீது
உன் கருணையைப் பொழிவதேனோ ஸ்ரீ குருதேவா (ஹே ப்ரபோ)

கண்ணை இமைபோல் நீ என்னைக் காக்க - இனி
என் வாழ்வில் என்ன குறை ஸ்ரீ குருதேவா (ஹே ப்ரபோ)

அனவரதமும் உந்தன் அடி பணிந்தேனே
அன்னை தேவகி மாவை எனக் - களித்தாயே (ஹே ப்ரபோ)

## Song 98: ஜெய ஜெய ஜெய ஜெய ♫

ஜெய ஜெய ஜெய ஜெய யோகி ராம்சுரத்குமார்

போத ப்ரதாதா யோகி ராம்சுரத்குமார் (ஜெய ஜெய)

ஸேவார்ப்பிதகரணே பரிஷூத்த சித்தே

லோகஸ்ய பாபஷமனாய க்ருதவாரே (ஜெய ஜெய)

யுக தர்ம ஸ்வரூபாய விவேக வைராக்யஸூலக்ஷணாய

ஏகமேவ விவிதநாம பக்தவந்த பாரவ்ருதாய (ஜெய ஜெய)

## Song 99: நாமம் சொல்வோம் ♫

நாமம் சொல்வோம் நாமம் சொல்வோம்

நாமம் சொல்வோம் வாரீர், எல்லோரும் வாரீர்

யோகி ராம்சுரத்குமார் என நாமம் சொல்ல வாரீர் !

1. அருணை மலையாய் காட்சி தரும் யோகி ராம்சுரத்குமார் |

உண்ணாமுலையாளாக வீற்றிருப்பான் யோகி ராம்சுரத்குமார் ||

2. பழனியிலே ஆண்டி அவன் யோகி ராம்சுரத்குமார் |

வயலூர் வடிவேலனவன் யோகி ராம்சுரத்குமார் ||

3. ஓங்கார வடிவெடுத்த ஞானசக்தி அவனே |

பேழை வயிறு கணபதியும் யோகி ராம்சுரத்தமார் ||

4. கோதண்டராமனும் யோகி ராம்சுரத்குமார் |

வீர தீர மாருதியும் யோகி ராம்சுரத்குமார் ||

5. கோபால கிருஷ்ணனும் யோகி ராம்சுரத்குமார் |

திருப்பதியில் கோவிந்தனும் யோகி ராம்சுரத்குமார் ||

6. ஸ்ரீ ராமகிருஷ்ணரும் யோகி ராம்சுரத்குமார் |

லோக மாதா சாரதாமணியும் யோகி ராம்சுரத்குமார் ||

7. விவேகானந்த சிங்கமும் யோகி ராம்சுரத்குமார் |

மும்மூர்த்தி ஏகனே என வந்தார் யோகி ராம்சுரத்குமார் ||

8. பரிந்து பரிந்து அருள் வழங்க அவதரித்தார் அவனியிலே |

கலியுகக் கொடுமைகள் அகற்ற வந்தார் அருணைக்கு ||

9. மக்கள் வாழ்க்கை செப்பனிட பக்தி ஓங்க பஜனை பாட |
துன்புறுவோர் துயர் துடைக்க வந்த பெருங்கருணை மூர்த்தி ||

10. ஸத்யமேவ ஜயதே என்னும் நாட்டின் உயிர் நாடியினை
மக்கள் காக்க வழி செய்யும் தந்தை யோகி ராம்சுரத்குமார் ||

11. சுதாமாவில் நாயகனும் யோகி ராம்சுரத்குமார் |
சொர்க்கம் அவன் சந்நிதானம் யோகி ராம்சுரத்குமார் ||

12. அமர ஜோதி அருணை ஜோதி யோகி ராம்சுரத்குமார் |
விஸ்வ ஜோதி ஆத்மஜோதி யோகி ராம்சுரத்குமார் ||

## Song 100: பட மாட்டோம் ♫

படமாட்டோம் துயரினிமேல் பயப்படவும் மாட்டோம்

யோகி ராம்சுரத்குமார் பாதம் விடமாட்டோம்.

கெடமாட்டோம் கெடுவார் சொல் கேட்டிடவு மாட்டோம்

மடமையுள்ள உலகமிதை மதித்திடவும் மாட்டோம்

யோகி ராம்சுரத்குமாரர் பாதம் விடமாட்டோம்

யோகி ராம்சுரத்குமாரர் நாமம் விடமாட்டோம்

1. யோகி ராம்சுரத்குமார் நமக்கு வந்த தெய்வம்

அவர் நாமம் சொல்லி பாதம் பற்றி நாமெல்லோரும் உய்வோம்.

2. நாடு பூரா சுற்றினாலும் வீடு சேர்க்கும் அருணை

நாடி வந்தார் நமக்கவரைத் தேடும் வேலையில்லை (யோகி)

3. உடற்பிணியும் உளப்பிணியும் உடனே தீர்த்துவைப்பார்

உத்தமர்தம் பக்தியில்தம் உளமுருகி நிற்பார்

4. கஷ்டப்படும் ஜீவர்கள்பால் கருணையுள்ளம் கொண்டார்

துஷ்டர்களின் அட்டகாசம் கண்டு தவம் கொண்டார் (யோகி)

5. தனிமையில் ஒதுங்கி வாழ்ந்த தவசி இவரும் பின்னால்

தரணியரைக் காக்க வேண்டி தயவாய் வெளிவந்தார்

6. தேசம் பூரா தீயசக்தி தலையெடுத்தல் கண்டு ராம

தாசர் தந்த ராமநாமம் நாடு பரவச் செய்தார் (யோகி)

7. மகிமை மக்கள் அறியத் தன் அவதார ரகசியத்தை
பகிரங்கமாய் எடுத்துரைத்தார் பலரும் பயன் அடைய

8. ராம நாமம் போலவே தன் நாமம் புகல்வோரும்
தாமடைவர் நலங்களென்ற ராம சாஸனத்தை
அன்பர் சிலர்க்கு அறிவித்ததால் அகில உலகும் இன்று
துன்பமெல்லாம் தீர அவர் நாமம் துதிக்கின்றார் (யோகி)

9. எல்லாவித பக்தியையும் ஏற்றுக் கொள்வார் என்றும்
கல்லாத நல் பக்தர்களையும் கடைத் தேற்றுவார் நன்று

10. தொண்டர்களின் நற்றொண்டை என்றும் ஊக்குவிப்பார் - அத்
தொண்டுகளைப் பூர்த்தி செய்யத் தான் துணையாய் நிற்பார் (யோகி)

11. காணிமடம் கோயில் கொண்ட கருணாளன் இவனே
நாணம் விட்டு நாமம் சொல்வார் நாயகனும் இவனே

12. அருணையில் அனைவரும் வந்தருள் பெறவே விரும்பி
அக்ரஹாரக் கொல்லையிலே அருள் நிலையம் அமைத்தார் (யோகி)

13. நாட்டிலுள்ள பக்தரெல்லாம் கூட்டமாய் வருகின்றார்
– அங்கு கூட்டமாய் வருகின்றார்
கூட்டமாய் வந்தவர் திருவருள் நாட்டம் பெறுகின்றார். (யோகி)

14. பக்தி வெள்ளம் வழிந்தோடும் அக்ரஹாரக் கொல்லை அது
முக்தி முயல்வார் தமக்கு சாதனையின் எல்லை (யோகி)

15. வாழ்வில் அரிய வாய்ப்பிதனை இழந்திடாது வாரீர் - வந்து
ஊழ்வினையை மாற்றவல்ல குருவின் கருணை பாரீர்

16. வாழ்வில் அரிய வாய்ப்பிதனை இழந்திடாது வாரீர் வந்து
ஊழ்வினையை மாற்றவல்ல குருவின் கருணை பாரீர் (யோகி)
(படமாட்டோம்)

## Song 101: சதா ஜபோ ♫

சதா ஜெப சதா பஜோ யோகிராம் சரத்குமார் (2)
ஓம் ஓம் ஓம் ஓம் யோகிராம் சரத்குமார் (2)
பம் பம் பம் பம் யோகிராம் சரத்குமார் (2)
ஓம் தத் சத் ஓம் தத் சத் யோகிராம் சரத்குமார் (2)
யோகிராம் சரத்குமார் (2)
சதா ஜெப சதா பஜோ யோகிராம் சரத்குமார்

## Song 102: சோதனைகள் போதாதா

1) சோதனைகள் போதாதா எங்கள்

வேதனைகள் தீராதா யோகியே

அண்ணாமலை வரவைத் தடுத்திடும்

தடைகளைத்தான் நீ தகர்த்திடாயோ!

2) ஆருயிர் அமுதாய் நீயிருந்தாய்

என்னுயிர் துடித்திட அலைக்கழித்து

ஏங்கிட வைத்திடும் இனியவனே

என்மேல் இரக்கம் கொள்வாயோ!

3) உன்னடி இருந்திடும் நாளெல்லாம்

உயர்வாய் போற்றிட வைக்குதப்பா

ஊர்வந்து எய்திட அந்நினைவே

எமைப் போட்டு கொல்லாமல் கொல்லுதப்பா!

4) மறந்திட ஓர் வழி சொல்லிடனும்

பொய்ப் பொருளை மறந்திடச் செய்திடனும்

உன்னையே நினைத்திட வைத்திடனும்

உறக்கத்திலும் நினைக்க வைத்திடனும்

5) பித்தனென்று எமை உலகம் சொல்லுதப்பா

அப்பெயர் என்றும் நிலைத்திடவே

எமைப்பித்தாய் ஆக்கி வைத்திருப்பாய்

என்றும் எமக்கது போதமப்பா

6) எமதாசை எல்லையின் ஓர் வடிவாய்

ராமஓசை முழங்கிடும் அருட்குருவே

ராம்சுரத்குமார் என்னும் பெயர் சொல்லி

என்றும் வாழ்ந்திட அருள்வாயே

## Song 103: ஸ்ரீ சிவ சரணம் ♫

1) ஸ்ரீ சிவ சரணம் பிரபாகரா சரணம்
சித்தயோகி சரணம் பரமஹம்ச சரணம்
யோகிராம் சரணம் ராம்சுரத் சரணம்
சுரத்குமார் சரணம் ப்ரஹஸ்பதி சரணம் (ஸ்ரீசிவ )

2) அடைக்கலம் அடைந்தோம் அபயம் தா சரணம்
கடைக்கண் பாராய் கழலடி சரணம்
கருணைக்கடலே ஆருயிர் அமுதே
அருணையின் அழகே திருவடி சரணம் (ஸ்ரீசிவ )

3) ஆதியும் அந்தமும் இல்லாதவா சரணம்
அவதார நோக்கமும் சொல்லாதவா சரணம்
அனைத்துயிர் அல்லல்களை களைவாய் சரணம்
அண்டினவர்க்கு அன்பை பொழிவாய் சரணம் (ஸ்ரீசிவ )

4) ஆத்ம ஞானம் பெற்ற ஆனந்தமே சரணம்
அருள் எல்லையில்லா முகிலே சரணம்
அன்னையின் சால நீ பரிவாய் சரணம்
முன்னை செய்த நல்வினை உன்னைக் கண்டோம் சரணம் (ஸ்ரீசிவ )

5) உன்னருளால் உன்னடி சேர்ந்தோம் சரணம்
உன்கை அசைவிலே அசைகிறோம் சரணம்
ஒளிரும் விழி மலர் ஞான தயை சரணம்
வழி சொல்லும் விசிறியும் சிரட்டையும் சரணம் (ஸ்ரீசிவ)

6) உண்ணாமுலையம்மனும் அண்ணாமலையப்பனும்
ஒன்று சேர்ந்த பரம்பொருள் யோகிராம் சரணம்
எங்களை நீ ஏமாற்றாதே எல்லாம் நீயே சரணம்
தஞ்சம் வந்த ஜீவன்களையேற்றிடுவாய் சரணம் (ஸ்ரீசிவ )

7) தொண்டு செய்யும் தேவகி மாதா பாதம் சரணம்
மாதா அன்னை தேவகியின் மலரடி சரணம்
யோக தேவன் மோன ஞானகுழந்தையே சரணம்
பூமி முற்றும் ஆளவந்த புண்ணியனே சரணம் (ஸ்ரீசிவ)

## Song 104: சுந்தரேசனாமவன் ♬

யோகிராம் சுரத்குமார் (4)

1) சுந்தரேசனாமவன் - மீனாட்சி
கையைபிடித்தவன்
எங்கள் மதுரை மன்னவன்
எங்களை ஆட்கொண்டவன் (யோகிராம்)

2) வளையல் வந்து விற்றவன்
வளைபூட்டி மையல் தந்தவன்
மையல் கொண்ட மாதருக்கு
தன் மலரடியைத் தந்தவன் (யோகிராம்)

3) பிட்டுக்கு மண் சுமந்தவன்
பிரம்படி அவன் பட்டவன்
யாருமில்லா வந்தி மகிழ
தன்னுலகம் தந்தவன் (யோகிராம்)

## Song 105: தென்மதுரை மீனாக்ஷி ♫

1 தென்மதுரை மீனாட்சி பெற்றெடுத்த மைந்தன்
தெய்விக நன்மணம் வீசும் திருவண்ணாமலையில்
பொன்னடிகள் யான் கண்டே போற்றுகிறேன் நாளும்
பூமி யெலாம் வாழும் நெறி காட்டியருள் நாதா !

நன்மதுர மொழி பேசும் நாயகனே எங்கள்
நல் வினையால் உன்னருளைப் பெற்றவர்கள் நாங்கள்
இன் மதுரத் தமிழினிலே இயம்பிடுவோம் என்றும்
எங்கள் பிரான் ராமசுரத் குமரா உன் நாமம்.

2 புத்தமுதே எம்முடைய பொக்கிஷமே எங்கள்
பொல்லாத வினையெல்லாம் போக்கிவிடும் ஐயா
நித்தமுமே உன்பெயரை. ஓதுவதே - யல்லால்
நெஞ்சினிலே வேறெந்த நினைவுகளில்லாமல்

எத்தனையோ பிறவிகளை இன்னும் எடுத்தாலும்
எங்களையே காத்திடுவாய் ஈசனருள் மைந்தா
வித்தகனே மேலோனே ராம்சுரத்குமாரா
வினைதீர்க்கும் நன்மருந்தே வேதவிழுப் பொருளே!

3. நீயருளும் ஒளியல்லால் நீணிலத்தில் வேறே
நின்றெரியும் எவ்விளக்கும் தேவையிலை ஐயா
தாயருளும் தந்தையருள் தாரணியில் மற்றோர்
தந்தருளும் எல்லாமாய்த் தோன்றிய எம் நாதா

தீயருளும் தீயேன்யான் செய்ததவம் என்னே
தெய்வமுனைக் கண்டருளைப் பெற்றதையென் சொல்வேன்
தூயருளும் தூயோனே ராம்சுரத் குமாரா
துங்கமலர்ப் பொற்பாதத் தொண்டியற்றி வாழ்வேன்

4 திருவண்ணா மலைவாழும் தெய்விக நன் நாதா
தேசத்தார் வந்துனது திருவடியைப் போற்றிக்
குருவென்னாக் கொண்டாடிக் கும்பிடுவார் நாளும்
கும்பிடுவார் துன்பவினை வேரறுக்கும் சுவாமி

'வருவேன்நான் இடர்காப்பேன் நினைப்போர்தம் நெஞ்சில்
வாழ்வேன் நான்' என்றருளும் வையகத்தோர் தேவா
மருவொண்ணாப் பொற்பதத்தை எங்களுக்கே தந்தாய்
மாற்றறியாப் பசும்பொன்னே ராம்சுரத் குமாரா!

## Song 106: யோ தேவோ

யோ தேவோ ஸர்வ பூதேஷூ ராம ரூபேண ஸம்ஸ்தித:
நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமோ நம:

யோ தேவோ ஸர்வ பூதேஷூ யோகி ரூபேண ஸம்ஸ்தித:
நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமோ நம:

யோ தேவோ ஸர்வ பூதேஷூ ஸூரத்குமார ரூபேண ஸம்ஸ்தித:
நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமோ நம:

யோ தேவோ ஸர்வ பூதேஷூ பித்ரு ரூபேண ஸம்ஸ்தித:
நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமோ நம:

யோ தேவோ ஸர்வ பூதேஷூ போத ரூபேண ஸம்ஸ்தித:
நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமோ நம:

யோ தேவோ ஸர்வ பூதேஷூ ஸ்ம்ருதி ரூபேண ஸம்ஸ்தித:
நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமோ நம:

யோ தேவோ ஸர்வ பூதேஷூ தயா ரூபேண ஸம்ஸ்தித:
நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமோ நம:

யோ தேவோ ஸர்வ பூதேஷூ துஷ்டி ரூபேண ஸம்ஸ்தித:
நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமஸ்தஸ்மை நமோ நம:

## Song 107: யோகிராம்சூரத்குமாரனை எண்ணினால் ♫

1. யோகிராம் சூரத்கு மாரனை எண்ணினால்

பாட்டுக்கள் தானாக ஓடிவரும்!

யோகத்தில் ஆழ்ந்துள்ள அண்ணலை அண்டிநான்

ஆனந்தப் பாட்டினைப் பாடுகின்றேன்!

2. ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் என்றுநான்

ஆனந்தக் கூத்தாடிப் பாடுகின்றேன்!

ஏனிந்த உலகத்தில் துன்பங்கள் துயரங்கள்

எத்தியே தள்ளிதான் பாடுகின்றேன்!

3. உண்டாலும், கண்டாலும், உறங்கியே சாய்ந்தாலும்

உண்மையில் அவனன்றி ஒன்றுமில்லை

யோகிராம் சூரத்கு மாரனின் பாதத்தை

அண்டிவிட்டால் அங்கு ஆனந்தமே!

4. உலகத்தில் எங்கோஓர் மூலையில் போரென்ற

உளைச்சலைக் கேட்டவன் உருகினிற்பான்.

சின்னஞ்சி றியேன்என் காலிலும் வலியென

சிரித்த முகத்துடன் அதைத்தீர்ப்பான்!

5. யோகிராம் சூரத்கு மாரனை நானிங்கே

சேர்ந்துவிட் டேன்எனக் கென்னகுறை!

குறைகளே உலகத்தில் இல்லையென் றேகாட்டி

குணத்தினை உயர்த்திட்ட வள்ளலவர்

6. துன்பங்கள் துயரங்கள் எத்தனை எத்தனை

தூசாக அவையெல்லாம் பறந்துவிடும்
இன்பமே என்னாளும் துன்பமில்லை யென
என்னுடை நாயகன் காட்டி விட்டான்!

7. வேங்கட நாதனின் கோயிலுக் குள்சென்று
யாரந்த அண்ணாமலை யாண்டி
என்றென்னைக் கேட்கவே வைத்திட்ட அவனருள்
எண்ணியே எந்நாளும் பாடுகின்றேன்!

8. யாரந்த ஆண்டியும் என்றேநான் கேட்டிட
என்னுடை வேங்கட நாதனவன்,
'நேனுதா' என்றன்று என்னுடைக் காதினில்
எத்தனையோ கோடி இன்பம் பொங்க

9. சொல்லியே எளியேனை ஆட்கொண்ட அற்புதம்
சொல்லிச் சொல்லி நானும் பாடுகின்றேன்!
சொல்லச் சொல்லஎன்றன் உள்ளம் உடலெல்லாம்
சொக்கியே போயதில் ஆடுகின்றேன்!

10. என்னுடை அன்னையும், அத்தனும் அன்பனும்
ஏற்றமுறச் செய்யும் நாதனுமாய்
என்றென்றும் என்னுள்ளே நின்று நிலைத்திட்ட
பெற்றியைச் சொல்லிநான் பாடுகின்றேன்

11. என்றன் குருநாதன் யோகிராம் சூரத்கு
மாரனைச் சேர்ந்திட்ட பின்பெனக்கு
வேறேது மந்திரம், வேறேது கோயில்கள்
வேறேது புண்ணிய தீர்த்தங்களும்!

12. நானென்ற ஒன்றாக இவ்வுடல் ஓடினும்
நானென்றோ அங்குக் கரைந்து விட்டேன்
நிற்பதெல் லாம்என்றன் யோகிராம் சூரத் கு
மார னெனச் சொல்லி பாடுகின்றேன்!

நீங்கள் அனைவரும்
எல்லா நலனும், வளமும் பெற்று
சிரித்து செழித்து வாழ
எந்தையின் திருவருளை
இறைஞ்சி வேண்டுகிறேன்.

---